530

# லாறு


புதிய பாடத்திட்டம் 2018

சிறுகுறிப்பேடு

# தரம் 9







பாலசிங்கம் புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 900
Acc No 530

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

புதிய பாடத்திட்டம் 2018

# தரம் - 09

வினாவிடைகள்

கணிப்பீடுகள்

வரலாற்று விளக்கப்படங்கள்

Class No: 900
Acc No 530

பூபாலசிங்கம் புத்தகசாலை
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.எண் : 0112422321, 0112435713
மின்னஞ்சல் :
Poobalasingham202@gmail.com

Arasady Public Library
Municipal Council
Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 01. | அலகு 01 / இலங்கையின் கரையோரப்பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படுதல். | 01 - 22 |
| 02. | அலகு 02 / இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி | 23 - 57 |
| 03. | அலகு 03 / இலங்கையின் சமய, தேசிய மறுமலர்ச்சி | 58 - 69 |
| 04. | அலகு 04 / இந்திய சுதந்திரப் போராட்டம் | 70 - 88 |
| 05. | அலகு 05/ இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களும், தேசிய சுதந்திர இயக்கமும். | 89 - 109 |
| 06. | அலகு 06/ சுதந்திரததின பின் இலங்கை | 110 - 132 |
| | **கணிப்பீட்டுப் பயிற்சிகள்.** | |
| 07. | அலகு 01 / இலங்கையின் கரையோரப்பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படுதல். | 133 - 137 |
| 08. | அலகு 02 / இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி | 138 - 143 |
| 09. | அலகு 03 / இலங்கையின் சமய, தேசிய மறுமலர்ச்சி | 144 - 147 |
| 10. | அலகு 04 / இந்திய சுதந்திரப் போராட்டம் | 148 - 152 |
| 11. | அலகு 05/ இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களும், தேசிய சுதந்திர இயக்கமும். | 153 - 157 |
| 12. | அலகு 06/ சுதந்திரத்தின் பின் இலங்கை | 158 - 161 |
| 13. | கணிப்பீட்டுப் பயிற்சிகளுக்கான விடைகள். | 162 - 164 |
| 14. | வரலாற்று விளக்கப்படங்களும் குறிப்புக்களும். | 165 - 180 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகு 01

## இலங்கையின் கரையோரப்பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படுதல்.

01. ஒல்லாந்தர் ஆசிய நாடுகளுக்கு வருவதற்குத் தூண்டிய காரணிகளைத் தருக.

- ➢. கீழைத்தேய, மேலைத்தேய வியாபாரங்களில் போர்த்துக்கேயர் பெற்ற இலாபத்தினை ஒல்லாந்தர் பெற்றுக்கொள்ள வேண்டும் என விரும்பியமை.
- ➢. போர்த்துக்கேய மன்னன் 2ம் பிலிப் மன்னன் லிஸ்பன் துறைமுகத்திற்கு வந்து வர்த்தகம் செய்வதைத் தடைசெய்தமை.
- ➢. ஒல்லாந்தர் ஆசிய நாடுகளுக்குச் செல்வதற்கான கடல் வழி மார்க்கத்தை தெரிந்து கொள்வதை தடை செய்தமை.
- ➢. புரட்டாஸ்தந்து மதத்தை பரப்ப விரும்பியமை.

**02. ஒல்லாந்த அரசின் சார்பாக அரசியல் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல நிறுவப்பட்ட அமைப்பு பற்றிக் குறிப்பிடுக.**

- ➢. அமைப்பு : ஒல்லாந்த கீழைத்தேய வர்த்தகக் கம்பனி / கீழைத்தேய ஒல்லாந்த வர்த்தகச் சங்கம். V.O.C (Vereenigde Oost Indische Compagine)
- ➢. நிறுவப்பட்ட ஆண்டு : கி.பி. 1602
- ➢. நிறுவிய மன்னன் : ஒரேஞ் வில்லியம்.
- ➢. தலைமையகம் : பத்தேவியா

**03. ஒல்லாந்த கீழைத்தேய வர்த்தகக் கம்பனி கீழைத்தேசப் பிரதேசங்களில் செயற்பட்ட முறைகளினைத் தருக.**

- ➢. வர்த்தகத்தை மேற்கொள்ளல்.
- ➢. நாடுகளைக் கைப்பற்றுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. கோட்டைகளை அமைத்தல்.
➢. ஆளுநர்களை நியமித்தல் மூலம் பிரதேசங்களை நிர்வகித்தல்.

**04. ஒல்லாந்தர் இலங்கைக்கு வருகை தந்த போது இலங்கையின் முக்கிய ஆட்சி நிலைகளைத் தருக.**

➢. இலங்கையின் வடக்கு மேற்கு ஆகிய பிரதேசங்கள் போர்த்துக்கேயர் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

➢. மத்திய மலைநாடு, கிழக்குக் கரையோரம் என்பன கண்டி மன்னர்களின் ஆட்சியின் கீழ் இருந்தது.

**05. ஒல்லாந்தரின் கீழைத்தேய வருகையின் இரு முக்கிய நிலைகளைக் குறிப்பிடுக.**

➢. கி.பி. 1602, யூலை மாதம் ஜோயிஸ்வான் ஸ்பில்பேஜன் என்னும் ஒல்லாந்தத் தளபதி 1ம் விமலதர்ம சூரியனைச் சந்தித்தமை.
➢. கி.பி. 1602 ஒக்டோபர் மாதம் சிபெல்தவர்ட் என்பவர் 1ம் விமலதர்மசூரியனைச் சந்தித்து உடன்பாடு ஒன்றைக் கைச்சாத்திட்டமை.

**06. 1ம் விமலதர்மசூரியனுடனான ஒல்லாந்த உறவு தோல்வியடைந்தமைக்கான காரணம் யாது?**

சிபெல் த வார்ட் குழுவினர் மன்னனுடன் மரியாதை-
-யின்றிப் பேசியதால் கண்டி வீரர்களுக்கும், ஒல்லாந்த வீரர்களுக்குமிடையே சண்டை ஏற்பட்டு சிபெல் த வார்ட கொலை செய்யப்பட்டமை.

**07. 2ம் இராஜசிங்க மன்னன் ஒல்லாந்தருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டமைக்கான காரணங்களைத் தருக.**

➢. ஒல்லாந்தரின் உதவியுடன் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து வெளியேற்றுவது.

➢. போர்த்துக்கேயரின் கீழ் இருந்த பிரதேசங்களை கண்டி இராச்சியத்துடன் இணைத்து சுதந்திர இலங்கையைத் தோற்றுவிப்பது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. 2ம் இராஜசிங்கன் ஒல்லாந்தரிடம் பெறும் உதவிக்கு கைமாறாகச் செய்ய முயன்றன யாவை?

➢. கறுவா வர்த்தக உரிமையை வழங்குதல்.

➢. கிழக்கிலுள்ள ஒரு துறைமுகத்தை வழங்குவது. (கொட்டியாரம் அல்லது மட்டக்களப்பு)

09. 2ம் இராஜசிங்கனுக்கும், ஒல்லாந்தருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் பிரகாரம் தாக்கப்பட்ட கோட்டை எது?

➢. **மட்டக்களப்பு (1638ல்)**
வில்லியம் யோகோப் கொஸ்ரர் மற்றும் வெஸ்ரவோல்ட் தலைமையில் தாக்கப்பட்டது.

10. வெஸ்ரர் வோல்ட் உடன்படிக்கை பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக.

➢. ஆண்டு : 1638

➢. ஒல்லாந்தர் : வெஸ்ரர் வோல்ட்

➢. கண்டி மன்னன் : 2ம் இராஜசிங்கன்

➢. நோக்கம் : போர்த்துக்கேயரை இந்நாட்டில இருந்து விரட்டுதல், கண்டி மன்னனே இலங்கை முழுவதும அரசனாகுதல்.

11. வெஸ்ரர் வோல்ட் உடன்படிக்கையின் முக்கிய அம்சங்களைத் தருக.

➢. போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து விரட்டுவதற்கு கண்டி அரசனுக்கு உதவி வழங்க இணங்குதல்.

➢. ஒல்லாந்தருக்கு ஏற்படும் செலவை பணம், பொருட்கள் என்பவன்றின் மூலம் செலுத்த அரசன் உடன்படல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. **வெஸ்ரர் வோல்ட் உடன்படிக்கை தோல்வி அடைந்தமைக்கான காரணங்களைத் தருக.**

➢. போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றப்படும் கோட்டைகளை மன்னன் விரும்பினால் மட்டும் வைத்திருக்க முடியும் என்ற வாசகம் ஒல்லாந்தரின் பிரதியில் இருக்கவில்லை. ஆனால் மன்னன் பிரதியில் இருந்தமை.

➢. ஒல்லாந்தர் தாம் கைப்பற்றிய கோட்டைகளில் அரசனைக் கலந்தாலோசிக்காது தங்கள் படை வீரர்களை நிறுத்தியமை.

➢. காலி, நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களில் கறுவா பெருமளவு விளைந்ததால் அப்பிரதேசங்களில் உள்ள கோட்டைகளை மன்னனுக்கு கையளிக்காது தாமே வைத்துக் கொள்ள ஒல்லாந்தர் நடவடிக்கை எடுத்தமை.

➢. உடன்படிக்கையில் கூறியவாறு போர்ச் செலவினங்-
-களைக் கொடுக்காது விட்டமை.

13. **1638ம் ஆணடு உடன்படிக்கையின் பிரகாரம் ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகளை அட்டவணைப்படுத்துக.**

I. 1638 - மட்டக்களப்பு
II. 1639 - திருகோணமலை
III. 1640 - மாத்தறை, காலி, கற்பிட்டி, நீர் கொழும்பு
IV. 1655 - களுத்துறை
V. 1656 - கொழும்பு
VI. 1658 - யாழ்ப்பாணம், மன்னார்

14. **கி.பி. 1658ம் ஆண்டுக்குப் பின்னர் ஒல்லாந்தருக்கு எதிராக 2ம் இராஜசிங்கன் மேற்கொண்ட நடவடிக்கைகளைத தருக.**

➢. ஒல்லாந்த பிரதேசங்களில் இருந்த கறுவாக் காடுகளைத் தீக்கிரையாக்கியமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. கரையோரப்பிரதேசங்களிலிருந்து கறுவா உரிப்போரை கட்டாயமாக மலைநாட்டில் குடியேற வைத்தமை.

- ➢. தனது அனுமதி இல்லாமல் கறுவா போன்ற வாசனைத் திரவியங்களை ஒல்லாந்தருக்கு விற்பனை செய்யக்கூடாதென கட்டளை பிறப்பித்தமை.

- ➢. ஒல்லாந்தருக்கு எதிராகக் கரையோர மக்களைத் தூண்டி விட்டமை.

- ➢. எல்லைப் புறங்களில் தன் படை முகாம்களை நிறுவியமை.

**15. "இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போல" என்ற உவமைத்தொடரின் கருத்து யாது?**

கொடுமையும், வலிமையும் குறைந்த போர்த்துக்கேயரை விரட்ட கொடுமையும் வலிமையும் கூடிய ஒல்லாந்தரை வரவழைத்தமை. போர்த்துக்கேயரை காரம் குறைந்த இஞ்சிக்கும், ஒல்லாந்தரை காரம் கூடிய மிளகாய்க்கும் உவமிக்கப்பட்டது.

(போர்த்துக்கேயரை விரட்ட ஒல்லாந்தரிடம் ஒப்பந்தம் செய்து கொண்ட மன்னன் 2ம் இராஜசிங்கனால் போர்த்துக்கேயரை விட பலம் பொருந்திய ஒல்லாந்தர் ஒப்பந்தத்தை மீறிய போது அவர்களை எதிர்க்க முடியவில்லை.)

**16. ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்தின் மீது கவனம் செலுத்தியமைக்குரிய காரணங்களைத் தருக.**

- ➢. இலங்கையில் தமது விருப்பப்படி சமய, வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கண்டி இராச்சியம் தடையாக இருந்தமை.

- ➢. கறுவாவின் ஒரு பகுதி, பாக்கு வர்த்தகத்தின் பெரும்பகுதி, இரத்தினக்கற்கள், சாய வேர்கள் என்பனவற்றைக் கண்டியில் பெறவேண்டியிருந்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. மாத்தறையில் பிடித்த யானைகளை கண்டிப் பிரதேசத்தினூடாகவே யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்ல வேண்டியிருந்தமை.

**17. கண்டி இராச்சியம் தொடர்பாக ஒல்லாந்தரின் குறிக்கோள்களைத் தருக.**

➢. நட்டத்தை ஏற்படுத்தும் மோதல்களிலிருந்து விலகி கண்டி இராச்சியத்துடன் சமாதானமாகச் செயற்பட ஒல்லாந்தர் முயன்றமை.

➢. கண்டி மன்னனின் நல்லெண்ணத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு மன்னனுக்குப் பரிசில்களை வழங்கியமை.

➢. மன்னனுடன் கடிதத் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் அரசனின் நல்லெண்ணத்தைப் பெற்று கண்டி இராச்சியத்தில் விளையும் கறுவாவைப் பெற்றுக்கொள்ளல்.

➢. உபசம்பதா சடங்கின் பொருட்டு அரசனுக்கு கப்பல்களைக் கொடுத்து உதவியமை.

(இரண்டாம் விமலதர்மசூரியன், விஜய இராஜசிங்கன், கீர்த்திஸ்ரீ இராஜசிங்கன் ஆகிய மன்னர்களுக்கு ஒல்லாந்தர் கப்பல்களைக் கொடுத்து உதவினர்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. ஒல்லாந்தத் தூதுவர்கள் கண்டி மன்னனுடன் மேற்கொண்ட தூதுப்பயணங்களைக் குறிப்பிடுக.

| வருடம் | கண்டி மன்னன் | ஒல்லாந்ததூதுவர் | தூது பயணித்ததற்கான காரணம் |
|---|---|---|---|
| கி.பி. 1602 | 1ம் விமலதர்மசூரியன் | ஜோரிஸ்வான் ஸ்பில்பேஜன் | வர்த்தக நடவடிக்கை தொடர்பாக மன்னனுடன் கலந்துரையாடல் |
| கி.பி. 1656 | 2ம் இராஜசிங்கன | ஜெனரல் ஜெராட் ஹல்பட் | மன்னனின் அழைப்பும், அப்போது நிழவிய பிரச்சனைகள் பற்றிக் கலந்துரையாடலும் |
| கி.பி. 1608 | 2ம் விமலதர்மசூரியன் | கலன் அல்ப்ஸ் | மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே புதிய உடன்படிக்கை தொடர்பாக கலந்துரையாடுதல் |
| கி.பி. 1721 | ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திர சிங்கன் | கொர்னேலியஸ் டெகல் | மன்னனின் மனைவி இறந்தது தொடர்பாக ஒல்லாந்தர் தமது அனுதாபத்தை தெரிவித்தல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. ஒல்லாந்தர் 2ம் விமலதர்ம சூரியனுடன் நட்புறவாகச் செயற்பட்டனர் என்பதற்கு உதாரணங்கள் 3 தருக.
- ➢. பர்மாவிலிருந்து உபசம்பதா பிக்குகளை அழைத்துவர கப்பல்களை வழங்கியமை.
- ➢. பிட்டிகல கோறளையில் கறுவா உரிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியமை.
- ➢. மன்னனின் கறுவா, பாக்கு, யானைகள் என்பனவற்றை ஒல்லாந்து கீழைதேய வர்த்தக சங்கத்தினர் பணம் கொடுத்துப் பெற்றமை.

20. கண்டிய மன்னர்களுக்கும், ஒல்லாந்தர்களுக்கும் இடையில் இடம்பெற்ற தூதுப்பயணங்களில் இடம்பெற்ற விடயங்கள் எவை?
- ➢. பரிசில்களைப் பரிமாறிக் கொள்ளுதல், (கண்டி மன்னனுக்கு ஒல்லாந்தர் வழங்கிய பொருட்கள் - போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கொடி, குதிரைகள், பாரசீக, ஈட்டி, வில்லு, பாரசீக செம்மறி ஆடுகள்)
- ➢. கண்டி மன்னன் ஒல்லாந்தருக்கு வழங்கிய பரிசுப் பொருட்கள் - தங்கச் சங்கிலி, தங்க மோதிரம், தங்க பாதணி)
- ➢. நல்லுறவை வெளிப்படுத்தல்.
- ➢. தூதுவர்களின் கோரிக்கைகளுக்கு மறுபகுதினர் செவிமடுத்தல்.
- ➢. இரு சாரர்களிடையே ஏற்படும் சிக்கல்கள் பற்றிக் கலந்துரையாடல்.

21. ஒல்லாந்தருக்குக் கடிதம் எழுதும் போது 2ம் இராஜசிங்கன் பயன்படுத்திய பதங்களைத் தருக.
- ➢. இலங்கையின் பேரரசன்
- ➢. எனக்குப் பணிபுரியும் அன்பான ஒல்லாந்த இனத்தவர்.

22. ஒல்லாந்தர் கடிதம் எழுதம் போது மன்னனை விளித்துப் பயன்படுத்திய பதங்களைத் தருக.
- ➢. திரிசிங்களாதீஸ்வர
- ➢. தங்களது பணிவுள்ள சேவையாளர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

23. 2ம் விமலதர்மசூரியனுக்கு அடுத்து வந்த மன்னர் வீர பராக்கிரம நரேந்திரசிங்கனுக்கும், ஒல்லாந்தருக்குமிடையிலான தொடர்புகளைத் தருக.

- ➢. சமாதானம் தொடர்பில் விரிசல்கள் ஏற்பட்டமை.
- ➢. ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்துக்குச் சொந்தமான கரையோரப்பகுதித் துறைமுகங்களை மூடியமை.
- ➢. இதற்குப் பதிலாக, மன்னனும் தனது ஆட்சிக்குட்-பட்ட பிரதேசத்தின் வழியாக யானைகள் கொண்டு செல்வதைத் தடை செய்தமை.
- ➢. மன்னன் கறுவா உட்பட வாசனைப் பொருட்கள், கண்டி உணவு வகைகள் என்பனவற்றை ஒல்லாந்தருக்கு விற்பதை நிறுத்தியமை.

24. வீரபராக்கிரம நரேந்திர சிங்க மன்னன் ஆட்சிக் காலத்தில் கரையோர மக்கள் ஒல்லாந்தருக்கு எதிராகக் கலகம் ஏற்படுத்தியமைக்கான காரணங்கள் எவை?

- ➢. விதிக்கப்பட்ட கடுமையான வரிகள்.
- ➢. வரி வசூலிப்போரால் அளவுக்கு மீறிப் பணம் அறவிடப்பட்டமை.
- ➢. கறுவா உரிப்போா முகங்கொடுத்த இக்கட்டான நிலை

25. வீரபராக்கிரமசிங்கன் காலத்தில் ஒல்லாந்தர் கண்டி இராசதானியின் வர்த்தகத்திற்கு தடையை ஏற்படுத்தியமைக்கான காரணம் யாது?

- ➢. நாயக்க வம்சத்துடன் திருமண உறவை எற்படுத்திக் கொண்ட மன்னன் கற்பிட்டி, புத்தளம் போன்ற துறைமுகங்கள் வழியாகப் பாக்கு, யானைகள், யானைத்தந்தம் என்பனவற்றை இந்தியாவுக்கு அனுப்பிக் கூடுதலான வர்த்தக நடவடிக்கைககள் மேற்கொண்டமை ஒல்லாந்தருக்கு இடையூறாகக் காணப்பட்டமை.

26. ஒல்லாந்தருக்கு எதிராகக் கண்டியர்களால் மேற்கொள்ளப்பட்ட கலகத்திற்கு எதிராக ஆள்பதி வில்லென் பெரன் இம்ஹோப் மேற்கொண்ட நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

- ➢. கண்டி இராச்சியத்திற்குத் தூதுக் குழு அனுப்பியமை.
- ➢. கறுவாப்பட்டை உரிப்போருக்கு விதிக்கப்பட்ட கடுமையான சட்டங்கள் தளர்த்தப்பட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. அரசனது துறைமுகங்களைத் திரும்பக் கொடுப்பதற்கு ஆளுநர் பத்தேவிக்கு சிபாரிசு செய்தமை.

27. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் பௌத்த சமயச் செயற்பாடுகளைத் தருக.

➢. இலங்கையின் சீயம் நிக்காய பௌத்த பிரிவை ஆரம்பித்தமை.

➢. சீய தேசத்தில் இருந்து (தாய்லாந்து) உபசம்பதா பிக்குகளை வரவழைத்து உபசம்பதா விழாவை நடத்தியமை.

➢. சீய தேசத்திலிருந்து உபாலிதேரரின் தலைமையில் பிக்குகளை வரவழைத்து உபசம்பதா விழாவை நடாத்தியமை.

➢. வெலிவிற்ற சரணங்கதேரரின் ஒத்துழைப்புடன் பௌத்த சமயத்தைப் புனருத்தாரணம் செய்தமை.

28. 1765ல் ஒல்லாந்தர் கண்டி மீது படையெடுத்த -மைக்கான காரணங்களைத் தருக.

➢. தங்களுக்கு எதிராகப் பிரித்தானியரின் உதவியைப் பெறுவதில் கிர்த்தி ஸ்ரீ மன்னன் ஆர்வம் காட்டியமை.

➢. 1760 இல் இடம்பெற்ற ஒல்லாந்தருக்கு எதிரான கலகத்திற்கு மறைமுக உதவி வழங்கியமை.

➢. ஒல்லாந்து ஆள்பதி வான் எக் மலையக இராச்சியம் மீது படையெடுத்து இறுதியில் தோல்வியடைந்தமை.

29. கி.பி. 1765ம் ஆண்டு ஆக்கிரமிப்பின் போது ஒல்லாந்தப் படைகள் கண்டியில் எதிர்கொண்ட பிரச்சினைகள் எவை?

➢. கடுமையான மழை

➢. தொற்று நோய்

➢. உணவுத்தட்டுப்பாடு

➢. கண்டியப்போர் வீரர்களின் தாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. கி.பி. 1765ம் ஆண்டு ஒல்லாந்தரின் கேவலமான ஒப்பந்தத்தில் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் ஒப்பமிடுவதற்கு ஏதுவாக அமைந்த மூன்று காரணங்களைத் தருக.

- கண்டியில் நாயக்கர்களின் செயல்களினால் பிரதானிகளும், பௌத்த பிக்குகளும் வெறுப்படைந்தமை.
- ஒல்லாந்தரின் கண்டி மீதான படையெடுப்பினால் மக்கள் மன்னன் மீது வெறுப்புக் கொண்டமை.
- மன்னனின் தீர்க்க தரிசனமற்ற செயற்பாடுகளால் மக்கள் விரக்தியுற்றமை.
- மேற்கூறப்பட்ட அழுத்தங்கள் காரணமாக கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் சமாதான ஒப்பந்தத்திற்கு சம்மதித்தான்.

31. கிபி. 1766ம் ஆண்டு உடன்படிக்கையின் சரத்துக்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

- யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி, கொழும்பு, திசாவை, காலி, கோறளை, திருகோணமலையைச் சூழவுள்ள பிரதேசங்கள் என்பன ஒல்லாந்தருக்கு உரித்தாகும்.
- கரையோரம் தொடக்கம் நாட்டின் உட்பகுதியில் ஒரு கவ்வை (6km) அளவு ஒல்லாந்தருக்கு உரித்தாகும்.
- மலையகத்தில் கறுவாப்பட்டை எடுத்தல், மரங்களை வெட்டிக்கொண்டு செல்லல் ஆகிய அதிகாரங்கள் ஒல்லாந்தருக்கு வழங்கப்பட வேண்டும.
- இவ்வொப்பந்தத்தில் ஒல்லாந்து ஆள்பதி "விலெம்பெல்க்கும், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனும் ஒப்பந்தமிட்டனர். இந்த உடன்படிக்கை ஹிங்குராக்கொடயில் கைச்சாத்திடப்பட்டது.

  (இவ்வொப்பந்தம் ஹிங்குராக்கொட ஒப்பந்தம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. 1766ம் ஆண்டு உடன்படிக்கையின் விளைவுகள் இரண்டு தருக.

- மன்னனுக்கு உரித்தான பிரதேசங்களுக்கு ஒல்லாந்தர் உப்பு வழங்குவதைத் தடை செய்தமை.
- ஒல்லாந்தருக்கும், மன்னருக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகளால் ஒல்லாந்தர் தங்கள் அதிகாரத்தைப் பலப்படுத்தியமை.
- கண்டி மன்னன் துறைமுகங்களை இழந்தமையால் வெளிநாட்டு வர்த்தகம் பாதிப்புற்றமை.
- கரையோரப்பிரதேசங்கள் அனைத்தும் ஒல்லாந்தருக்கு உரித்தானது.

33. இலங்கையில் ஒல்லாந்தரின் ஆட்சியின் போது வருகை தந்த தூதுக் குழுக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

- 1762ல் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் காலத்தில் ஜோன் பைபஸ் தூதுக்குழு வந்தமை.
- 1782ல் இராஜாதி இராஜசிங்கனின் ஆடசியில் கியூ பொயிட் தூதுக்குழு வந்தமை.

34. இலங்கையில் ஒல்லாந்தரின் செல்வாக்கு எவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தின?

- புரட்டாஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தை அறிமுகம் செய்தமை.
- தேசவழமை என்ற தமிழர் சட்டத்தொகுப்பு உருவாக்கப்பட்டமை.
- பறங்கியர்கள் என்ற மக்கள் பிரிவினர் இலங்கைச் சமுகத்தில் உருவாகியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- டச்சு கட்டிடக்கலை இந்நாட்டுக் கட்டிடக் கலையுடன் சேர்ந்து கொண்டமை.
- இந்நாட்டுக்கு அச்சுத் தொழிலை அறிமுகஞ் செய்து வைத்தமை.
- மொறட்டுவையில் மரத்தளபாடக் கைத்தொழிலை ஆரம்பித்து வைப்பதற்கு முன்னோடியாக இருந்தமை.
- சிங்கள மொழிக்குள் புகுந்துள்ள டச்சு சொற்கள் (இஸ்தோப்பு, பூதல், கொந்தேசி, கந்தோரு)

**35. இலங்கையில் ஒல்லாந்தரது நிர்வாகக் கட்டமைப்பைத் தருக.**

- ஆரம்பத்தில் இலங்கையில் ஆட்சியானது ஒல்லாந்தரின் கீழைதேய வர்த்தக சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது.
- 1609 களில் VOC இனால் தனியான ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆளுநருக்கு உதவியாக இந்நாட்டிலிருந்த விசேட சபை ஒன்று நியமிக்கப்பட்டது.

  (ஆளுநரின் நிர்வாக மையம் பத்தேவியாவிலிருந்தது)
- இலங்கையின் கரையோரங்களில் ஒல்லாந்தரின் ஆட்சி நிறுவப்பட்ட பின்னர் இந்நாட்டின் செயற்பாடுகளுக்காக VOC சங்கத்தினால் தனியான ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். இவருக்கு உதவுவதற்காக உதவிச் சபை ஒன்று நிறுவப்பட்டது.

**36. இலங்கை ஆளுநருக்கு VOC சங்கத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் குறிப்பிடுக.**

- அரச நடவடிக்கைகளின் போது சுதந்திரமான தீர்மானம் எடுக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. குறிப்பிட்ட பிரதேசங்களின் நிர்வாக நடவடிக்கை -களை முன்னெடுத்துச் செல்வதற்கு வரி அறவிடுதல், அதிகாரிகளை நியமித்தல், நிலம் வழங்குதல் போன்ற அதிகாரங்களைக் கொண்டிருந்தனர்.

37. **இலங்கையில் ஒல்லாந்தரின் பிரதான 3 நிர்வாகப் பிரிவுகளைக் குறிப்பிடுக.**
    - ➢. கொழும்புக் கொமாண்டரி
    - ➢. காலிக் கொமாண்டரி
    - ➢. யாழ்ப்பாணக் கொமாண்டரி

38. **மூன்று கொமாண்டரி பற்றிச் சுருக்கமாக குறிப்பிட்டு எழுதுக.**

**கொழும்புக் கொமாண்டரி**

ஒல்லாந்த ஆளுநரின் கீழ் கொழும்பு, களுத்துறை, நீர்கொழும்பு உட்பட கரையோரப் பிரதேசங்கள், மற்றும் ஹங்வல்ல, அங்குருவா தொட்ட, மல்வானை கோட்டைகள் அமைந்த நாட்டின் உட்பிரதேசங்கள் இதன் கீழ் நிர்வகிக்கப்பட்டன.

**காலிக் கொமாண்டரி**

- ➢. காலிக் கொமாண்டரியின் செயற்பாடுகளுக்குத் தனியான கொமாண்டர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.
- ➢. பெந்தரை ஆறு முதல் மட்டக்களப்பு வரையான கரையோரப்பிரதேசம். மற்றும் அதற்குரித்தான நாட்டின் உட்பகுதிகள் என்பன இதன் கீழ் இருந்தன.


**யாழ்ப்பாணக் கொமாண்டரி**

- ➢. இக்கொமாண்டரிக்கும் தனியான கொமாண்டர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.
- ➢. புத்தளத்திலிருந்து வடக்குக் கரையோரமாக யாழ்ப்பாணம் வரையுமுள்ள பிரதேசம் இதனுள் அடங்குகின்றது.
- ➢. யாழ்ப்பாணத்துக்குரிய பிரதேசங்கள் அனைத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிழக்கு கரையில் மட்டக்களப்பு வரையுமுள்ள பிரதேசங்கள்.





Public Library
Municipal Council
Batticaloa.
Class No: 900
Acc No 530


39. **இலங்கையில் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழிருந்த நிர்வாகப் பிரிவுகள் (ஆளுநருக்கும், கொமாண்டருக்கும் கீழிருந்த பிரிவுகள்)**
- சிவில் நிர்வாகம்
- இராணுவ நிர்வாகம்
- வர்த்தக நிர்வாகம்.

40. **சிவில் நிர்வாகத்தின் கீழ் அமைந்துள்ள நிர்வாகப்பிரிவுகளைத் தருக.**
- திசாவைகள் - திசாவை என்பவர் பொறுப்புடையவராக இருப்பார்.
- கோறளைகள் - அத்து கோறளை என்பவர் பொறுப்புடையவர்.
- பற்றுக்கள் - முதலியார் என்பவர் பொறுப்புடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. கிராமங்கள் - பொறுப்புடைய உத்தியோகத்தர் விதானை / கிராம அதிகாரி

41. வர்த்தகப்பிரிவுக்கான அதிகாரிகள் இருவரைக் குறிப்பிட்டு எழுதுக.


➢. ஒபர் ஹீப்ட் ஏமன் - சிரேஷ்ட வர்த்தகர்.

➢. ஹீப்ட்மன் - இளைய வணிகர் (நிலங்களின் வருமானத்திற்குப் பொறுப்பான அதிகாரி)

42. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சிவில் நிலைய நிர்வாகத்தின் கீழ் நிலைப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பாரம்பரிய சிவில் உத்தியோகத்தர் பதவிப் பெயர்கள் 2 தருக.

➢. கங்காணி ➢. உடையார்.

43. ஒல்லாந்தரின் நிர்வாகக் கட்டமைப்பினை பாய்ச்சற் -கோட்டுப் படம் ஒன்றின் மூலம் எடுத்துக்காட்டுக.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. ஒல்லாந்தர்களால் அறிமுகஞ் செய்யப்பட்ட நீதிமன்றத் தொகுதிகளைக் குறிப்பிடுக.

- ➢. ராத்வான் ஜஸ்டிஸ் / மேல்நீதிமன்றம்.
- ➢. சிவில் ராத் / சிவில் நீதிமன்றம்.
- ➢. லான்ராத் / காணி நீதிமன்றம்.
- ➢. பிஸ்கல் நீதிமன்றம்.

45. மேற்குறிப்பிட்ட நீதிமன்றங்களுக்கு பெறுப்புடைய அதிகாரிகளைக் குறிப்பிடுக.

- ➢. ராத்வான் ஜஸ்டிஸ் - வுப்ட் அத்மினிஸ்தார்.
- ➢. சிவில் ராத் - உயர் அதிகாரி
- ➢. லான்ராத் - திசாவை
- ➢. பிஸ்கல் நீதிமன்றம் - கீழ் நிலை உத்தியோகதர்கள் (கிராமத்தலைவர் / விதானை / முதலி / கோறளை

46. மேற்கண்ட நீதிமன்றங்கள் தொடர்பான விடயங்களைக் குறிப்பிடுக.

<u>ராத்வான் ஜஸ்டிஸ் நீதிமன்றம்</u>

- ➢. இது ஒல்லாந்த நீதிமன்றத் தொகுதியின் உயர்நீதிமன்றம் ஆகும்.
- ➢. இதன் பிரதானி வுப்ட் அத்மினிஸ்தார் என அழைக்கப்பட்டார்.
- ➢. குற்றச்செயல்கள் தொடர்பான வழக்குகளுக்குத் தீர்ப்புக்கள் வழங்கும்.
- ➢. இது கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று இடங்களில் நிறுவப்பட்டிருந்தது.

<u>லான்ட்ராத் நீதிமன்றம்</u>

- ➢. நில வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரம் கொண்டது.
- ➢. இந்நீதிமன்றங்களின் தலைவராக திசாவை செயற்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. செயல் குறைந்த நீதிமன்றமாக இது காணப்பட்டது.
- ➢. இம்மன்றத்தின் தலைவராக திசாவை செயற்படுவார்.
- ➢. கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மாத்தறை ஆகிய இடங்களில் இம்மன்றங்கள் நிறுவப்பட்டிருந்தன.

சிவில் ராத் / சிவில் நீதிமன்றம்.

- ➢. ரிக்ஸ்டொலர் 120க்கு குறைந்த நட்டம் தொடர்பான சிவில் விவாகம் தொடர்பான வழக்குகளை விசாரனை செய்யும் அதிகாரம் கொண்டது.
- ➢. கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இந்நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.

பிஸ்கல் நீதிமன்றம்

- ➢. ஒல்லாந்த நீதிமன்றத் தொகுதியின் கீழ்நிலை நீதிமன்றமாக இது செய்றபட்டது.
- ➢. கிராமத்தலைவர், விதானை, முதலி, கோறளை போன்றோர் இந்நீதிமன்ற உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றினர்.

**47. இலங்கையில் ஒல்லாந்தர்களால் அறிமுகம் செய்ப்பட்ட சட்டங்களைத் தருக.**

- ➢. **உரோமன் டச்சுச் சட்டம்** - உரோமருக்கு உரித்தானவை.
- ➢. **தேச வழமைச் சட்டம்** - யாழ்ப்பாண மக்களுக்கானவை,
- ➢. **முக்குவர் சட்டம்** - மீனவக் குடிமக்களுக்குரியது.
- ➢. **முகாலயர் சட்டம்** - முஸ்லீம் மக்களுக்கானவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**48. ஒல்லாந்தரின் பொருளாதார நடவடிக்கைகள், நோக்கங்கள் என்பவை பற்றிக் குறிப்பிடுக.**

➢. குறைந்த செலவில் வருமானத்தை ஈட்டலும், உச்ச இலாபத்தையும் நோக்காகப் பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தினர்.

➢. கறுவா வர்த்தகத்தினை மேற்கொண்டமை. கறுவாப் பயிற்சிசெய்கை, கறுவா உரித்தல் கறுவா வியாபாரம் என்பவற்றில் அதிக நாட்டம் செலுத்தினர்.

➢. கறுவா வர்த்தகத்திற்கென மகாபத்தே திணைக்களம் எனும் தனியான திணைக்களம் ஒன்று உருவாக்கப்பட்டு தனிப்பட்ட கப்பித்தான் ஒருவரின் கீழ் கொண்டுவரப்பட்டது.

➢. கறுவா தவிர பாக்கு, முத்து, யானைத்தந்தம், மிளகு, சாதிக்காய், ஏலம், யானை, தேன்மெழுகு என்பவற்றின் மூலம் இலாபம் ஈட்டினர்.

➢. பெருந்தோட்டப் பயிர்செய்கையையும் மேற்கொண்டனர்.

**49. ஒல்லாந்தர் கறுவா பயிரிட்ட பிரதேசங்களைக் குறிப்பிடுக.**

➢. கொழும்பு, களுத்துறை, அளுத்கம, மாத்தறை

**50. இலங்கையில் ஒல்லாந்தர் அறிமுகப்படுத்திய தோம்பு எனும் பதிவேட்டு வகைகளைப் பெயரிடுக.**

➢. குடும்பத் தோம்பு ➢. காணித்தோம்பு

➢. பாடசாலைத் தோம்பு

51. மூவகைத் தோம்புகளின் விபரங்கரைளத் தருக.

➢. **குடும்பத்தோம்பு :**

 ➢. கிராமம் ஒன்றில் வாழும் குடும்பங்களின் விபரங்கள் கொண்டவை.

➢. **காணித்தோம்பு :**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. கிராமங்களிலுள்ள குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகளின் விபரங்கள்.
- ➢. பயிர் வகைகளின் விபரங்கள்.
- ➢. சங்கத்திற்கு வரவேண்டிய வரி விபரங்கள்.

➢. **பாடசாலைத் தோம்பு** :
- ➢. கிராமத்தினுள்ள பெற்றோரின் பெயர்கள்.
- ➢. பாடசாலைப் பிள்ளைகளின் பிறந்த திகதி
- ➢. பாடசாலை விட்டு விலகிச் சென்ற திகதி
- ➢. வேறு கிராமங்களுக்கு குடி பெயர்ந்த திகதி

52. **தோம்புகளை உருவாக்கியதன் மூலமாக ஒல்லாந்தர் பெற்றுக்கொண்ட நன்மைகளைத் தருக.**
- ➢. கிராமத்திலுள்ள மக்கள் தொகை, நிலம் பயிர்ச்செய்கை தொடர்பான விபரம் போன்ற தகவல்களைப் பெறுவதன் மூலம் வரி, சேவை ஆகியவற்றை இலகுவாகப் பெற முடிந்தமை.
- ➢. நிர்வாகத்தை இலகுவாக கட்டமைக்கக் கூடியதாக இருந்தது.

53. **இலங்கையில் ஒல்லாந்தர் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளைத் தருக.**
- ➢. முத்துராஜ வெலப் பிரதேசத்தில் நெல் உற்பத்தி மேற்கொண்டமை.
- ➢. யோதவாவி, கந்தளாய்க் குளம் என்பனவற்றை புனர் நிர்மாணம் செய்ததன் மூலம் நெல் உற்பத்தியை ஊக்குவித்தமை.
- ➢. கரும்பு, மிளகு, ஏலம், கோப்பி, முசுக்கட்டை, (மல்பரி), அவுரிச்செடி (நீலச்சாயம் பெறல்) ஆகிய பயிற்ச்செய்கைகளை முன்னேற்றினர்.
- ➢. நெசவுத் தொழில், துணிகளுக்கு சாயமிடுதல், ஓடு, செங்கல் தயாரித்தல், ஆகிய கைத்தொழில் -களையும் ஊக்குவித்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் புகையிலை உற்பத்தி, பனை மரக்கட்டை, ஏற்றுமதி போன்றவற்றிலும் ஈடுபட்டனர்.

➢. ஹமில்டன் கால்வாய் போன்ற கால்வாய்களை அமைத்து அவற்றைப் பொருட்களைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தினர்.

54. **ஒல்லாந்தரது சமூக பண்பாட்டு நடவடிக்கைகளைத் தருக.**

➢. **சமயக்கொள்கை :**

- புரட்டாஸ்தந்து மதத்தைப் பரப்ப நடவடிக்கை எடுத்தனர்.
- புரட்டாஸ்தாந்து பாதிரியார்களை வரவழைத்து தமது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் சமயத்தைப் பரப்பினர்.
- கிறிஸ்தவ தேவாலயங்களை நிறுவினர்.

➢. **கல்வி நடவடிக்கைகள்**

- சமயத்தைப் பரப்ப கல்வியை ஊடகமாகப் பயன்படுத்தினர்.
- இஸ்கூல் என்னும் விசேட நிறுவனத்தை நிறுவினர்.
- கிராமங்களில் பாடசாலைகளை அமைத்து கட்டாயக் கல்வி முறையை அறிமுகப் - படுத்தினார்.
- பிள்ளைகளின் தாய் மொழியில் கல்வி கற்பிக்கப்பட்டமை.
- பாடசாலைக் கலைத்திட்டத்தில் புரட்டாஸ்தந்து சமயத்திற்கு பிரதானமான இடம் வழங்கப்பட்டமை.
- தாய்மொழி, சங்கீதம், இறையியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன.
- பரீட்சை முறைகள் ஆரம்பித்தமை.
- பாடசாலைகளை மேற்பார்வை செய்வதற்கு அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1739ல் அச்சியந்திரசாலை நிறுவப்பட்டு வேதாகமத்தில் சில பகுதிகள் அச்சிட்டு விநியோகித்தமை.
- கொழும்பு மிசனறி மூலம் உயர்கல்வி போதிக்கப்பட்டது.

➢. **பண்பாட்டு நடவடிக்கைகள். :**

- உரோமக் கட்டடக் கலையைப் பின்பற்றி விறாந்தை, மேல் மாடித்தூண்கள், உயர்தர கூரை என்பனவற்றைக் கொண்ட வீடுகள் அமைத்தல்.
- கேக், அச்சாறு, கொக்கிஸ் போன்ற உணவு வகை அறிமுகப்படுத்தப்பட்டது.
- நீதிமன்ற முறைமை அறிமுகமாகியமை.
- பறங்கியர் என்னும் புதிய இனம் இலங்கையில் உருவாகியமை.
- சுதேச மொழியில் ஒல்லாந்தச் சொற்கள் கலந்து கொண்டமை.

**55. ஒல்லாந்த சொற்கள் கலந்து கொண்ட துறைகளைக் குறிப்பிடுக.**

➢. **கட்டட வீட்டுப்பொருட்கள்**

அலுமாரி, கேத்தல், ஜன்னல், இஸ்தோப்பு, தரப்பு, காமர, இஸ்குருப்பு.

➢. **சட்டம், நீதி மன்றம்**

நொத்தாரிஸ், தோல்க்க, தோம்பு

➢. **ஏனையவை :**

வெந்தேசி. இஸ்கூல், குவிதான்சி, கந்தோர், ஒப்பு, இலாச்சி, பூதல், மோல, பிசுக்கால், தொம்பகர, உலாந்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 02
## இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சி

01. பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றுவதற்கு கவனம் செலுத்துவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைத் தருக.

I. **இலங்கையின் அமைவிட முக்கியத்துவம்.**

- இலங்கையின் வாசனைத்திரவியங்களின் முக்கியத்துவம்.
- இந்து சமுத்திரக்கடற்பாதையில் இலங்கை அமைந்துள்ளமை. கீழைதேய மேலைத்தேச வர்த்தகப் பாதையின் மத்தியில் இலங்கை அமைந்துள்ளமை.
- இலங்கையின் அமைவிடம் பிரித்தானியருக்கு இந்தயாவின பாதுகாப்பு, இந்துசமுத்திரத்தின் கடற்பகுதிப்பிராந்தியத்தில் கட்டுப்பாட்டினை மேற்கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது.

II. **திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம் :**

- வங்காள விரிகுடாவையும், தென்கிழக்கு ஆசியாவையும், நோக்கி அமைந்த துறைமுகமாக இருந்தமை.
- நாட்டின் உட்பகுதியை நோக்கி நீண்டு அமைந்துள்ள இயற்கைத்துறைமுகமாக இருந்தமை.
- இயற்கை அனர்த்தங்களிலிருந்து கப்பல்களைப் பாதுகாக்கக் கூடியதாக இருந்தமை.
- இந்து சமுத்திரத்தித்தில் பயணிக்கும் எதிரி நாட்டுக் கப்பல்களை மறைந்திருந்து தாக்கக் கூடியதாக இருந்தமை.
- ஆங்கிலேயருக்கு திருகோணமலைத் துறைமுகம் இந்தியாவினைப் பாதுகாப்பதற்கு அவசியமாக விளங்கியமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. வர்த்தக நடவடிக்கைகளில் இலங்கையின் முக்கியத்துவம்.

- ➢. இலங்கை மிகவும் உயர்ந்த கறுவாவையும் ஏனைய வாசனைத் திரவியங்களையும் கொண்டிருந்தமை.
  (உ + ம் : கறுவா, ஏலம், மிளகு, சாதிக்காய், கராம்பு)
- ➢. யானை, யானைத்தந்தம், முத்து, மாணிக்கம் போன்ற வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களுக்கான இலங்கையில் காணப் - -பட்டமை.
- ➢. பிரித்தானியரின் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை ஒன்றை இலங்கையில் உருவாக்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தமை.

02. கண்டி அரசுடன் தொடர்புகளை ஏற்படுத்திய பிரித்தானிய தூதுவர்களைக் குறிப்பிடுக.

- ➢. 1782ல் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுடன் ஜோன் பைபஸ் சந்திப்பு
- ➢. 1782ல் இராஜாதி இராஜசிங்கனுடனான கியூபொயிட் சந்திப்பு.
- ➢. 1795 இல் இராஜாதி இராஜசிங்கனுடனான றொபர்ட் அன்ட்றூஸ் சந்திப்பு

03. (i) பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றும் போது இலங்கையின் ஒல்லாந்த தேசாதிபதி யார்?

(ii) இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி நிலைநாட்டப்பட்ட சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(i) ➢. பன் எங்கல் பெக்

(ii) ➢. 1796 - இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனிகளின் ஆட்சி நிலைநாட்டப்பட்டமை.

- ➢. 1802 - இலங்கையின் கரையோரம் பிரித்தானியாவின் முடிக்குரிய குடியேற்றம் ஆக்கப்பட்டமை.
- ➢. 1815 - கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. இலங்கையில் பிரித்தானியர் மேற்கொண்ட ஆட்சி முறைகளைத் தருக.

➢. **சென்னை ஆட்சி** - பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி ஆட்சி ( கி.பி. 1796 - கி.பி. 1798)

➢. **இரட்டை ஆட்சி** - பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனி, பிரித்தானிய முடி இரண்டும் இணைந்த ஆட்சி (கி.பி. 1798 - கி.பி. 1802)

➢. **முடிக்குரிய ஆட்சி** -(கி.பி. 1802 - கி.பி. 1948)

05. கியூ கடிதம் தொடர்பான குறிப்புக்களைத் தருக.

➢. ஒல்லாந்த மன்னன் ஸ்டெட் ஹோல்டர் (5ம் ஒரேஞ்வில்லியம்) பிரித்தானியரின் கியூ மாளிகையிலிருந்து எழுதிய கடிதமே கியூ கடிதம் எனப்பட்டது.

➢. பிரான்ஸ் புரட்சியைத் தொடர்ந்து ஒல்லாந்து ஆக்கிரமிப்பின் காரணமாக ஒல்லாந்து மன்னன் 5ம் ஒறேஞ் வில்லியம் 1795ல் பிரித்தானியாவில் தஞ்சம் அடைந்தான.

➢. பாதுகாப்புக் கருதி ஒல்லாந்தர் கீழைத்தேய பிரதேசங்களை இங்கிலாந்திடம் ஒப்படைக்குமாறு கியூ மாளிகையில் இருந்து இலங்கையின் தேசாதிபதி வான் எங்கல் பக்கு எழுதிய கடிதமே பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்ற காரணமாக விளங்கியது.

06. கியூ கடிதத்தின் சாராம்சம் யாது?

இலங்கையிலிருந்த ஒல்லாந்த ஆட்சிப்பிரதேசங்களை பிரான்சியர் கைப்பற்றிக் கொள்வதைத் தடுப்பதற்காக தற்காலிகமாக அப்பிரதேசங்களை பிரித்தானியரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதேயாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பிரித்தானியர் ஒல்லாந்தருக்கு எதிராக தாக்குதல் நடாத்தியதற்கான காரணம் யாது?

➢. கியூ கடிதத்தை பன் எங்க்ல பெக் ஆளுநர் ஏற்காமையாகும்.

08. பிரித்தானியர் இலங்கையின் கரையோரத்தைக் கைப்பற்றிய ஒழுங்குமுறையினை அட்டவணைப்படுத்துக.

| ஆண்டு | மாதம் | கைப்பற்றிய கோட்டை |
|---|---|---|
| 1795 | ஆகஸ்ட் 26 | திருகோணமலை - பிரட்ரிக்கோட்டை |
| 1795 | செப்ரம்பர் 17 | மட்டக்களப்பு |
| 1795 | செப்ரம்பர் 27 | யாழ்ப்பாணம் |
| 1795 | ஒக்டோபர் 05 | மன்னார் |
| 1795 | நவம்பர் 24 | புத்தளம், கற்பிட்டி |
| 1795 | ஜனவரி 01 | காலி, நீர்கொழும்பு |
| 1796 | பெப்ரவரி 16 | கொழும்பு |
| 1796 | பெப்ரவரி 16 | ஒல்லாந்து ஆள்பதி பன் எங்கல் பெக் சட்ட ரீதியாக டச்சுக் கோட்டைகளை பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியிடம் ஒப்படைத்தமை. |

09. சென்னை ஆட்சி என்றால என்ன?

➢. 1796ம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பகுதியில் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி சென்னையில் இருந்த தமது தலைமையகத்தை மையமாகக் கொண்டு கி.பி. 1796 - முதல் கி.பி. 1798 வரை இலங்கையின் நிர்வாகத்தை மேற்கொண்டனர். இதுவே சென்னை ஆட்சி எனப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. **பிரித்தானியரின் ஆதிக்கத்திற்கு எதிராக ஏற்பட்ட கிளர்ச்சிகளைத் தருக.**

- ➢. கி.பி. 1797ல் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக்கம்பனிக்கு எதிரான போராட்டம். (இதுவே கரையோரக் கிளர்ச்சி / தெங்கு வரிக்கலகம் / வரி மறுப்பு கலகம் எனப் பல பெயரால அழைக்கப்பட்டது.)
- ➢. 1818ல் மலையக சுதந்திரப்போராட்டம் (முதலாவது சுதந்திரப்போராட்டம் )
- ➢. 1848ல் விடுதலைக் கிளர்ச்சி (இரண்டாவது சுதந்திரப் போராட்டம்)

11. **1797ம் ஆண்டுக்கிளர்ச்சிக்கான காரணங்களைத் தருக.**

- ➢. ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினர் புதிய வரிகளை விதித்தமை.
  (உ + ம் : தென்னை வரி, கள்வரி, சாராயவரி, உப்புவரி, மீன்வரி, புகையிலை வரி)
- ➢. வரி வசூலிக்கும் சுதேச அலுவலகர்களை நீக்கிவிட்டு சென்னையிலிருந்து வரவழைக்கப்பட்ட அவுமிலதார்கள் நியமிக்கப்பட்டமை.
- ➢. பாரம்பரிய நிர்வாக வரி சேகரிக்கும் முறையில் அல்லாது பணத்தின் மூலம் வரி செலுத்த வேண்டியிருந்தமை.
- ➢. வரி ஏல விற்பனை முறை அறிமுகப்படுத்தியமை.
- ➢. சிவில் இராணுவ அதிகாரங்களை முன்னர் பெற்றிருந்த முதலியார்கள் நீக்கப்பட்டமையினால் தமது வருமானங்களை இழந்து கலகங்களுக்கு ஆதரவாகவிருந்து தூண்டி விட்டனர்.
- ➢. கரையோர மக்கள் தாம் முகங்கொடுத்த பிரச்சினைகளைப் பற்றிச் சென்னை அதிகாரிகளிடம் முறையிட்ட போதும் எந்த வித பயனும் அளிக்காமல் போனமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. கி.பி. 1797ம் ஆண்டுக் கலவரம் இடம்பெற்ற இடங்களைத் தருக.

- ➢. கொழும்பு திசாவானி ➢. றைகம
- ➢. ஹேவாகம ➢. சியான
- ➢. சல்பிற்று கோறளை

13. கி.பி. 1797ம் ஆண்டுக் கிளர்ச்சி ஆரம்பத்தில் சுதேசிகளுக்குச் சாதகமாக வருவதற்கான காரணங்களைத் தருக.

- ➢. கலகக்காரர்களிடம் காணப்பட்ட ஒற்றுமையுணர்வு
- ➢. பருவகாலச் சீர் கேடுகள் பிரித்தானிய ஆட்சியாளருக்கு பாதகமாக விளங்கியமை.
- ➢. கலகக்காரர்கள் கொரில்லாப் போர் முறைகளைக் கையாண்டமை.
- ➢. கண்டி மன்னன் கலகக்காரர்களுக்கு உதவியளித்தமை.
- ➢. கலகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு சீரான போக்குவரத்துப் பாதைகள் காணப்படாமை.
- ➢. முதலிமார்களினதும், ஒல்லாந்த நிர்வாகிகளினதும் ஆதரவு கிடைத்தமை.

14. கி.பி. 1797 ம் ஆண்டுக் கலகம் தோல்வியுற்றமைக்கான காரணம் யாது?

- ➢. கலகம் ஆரம்பித்த வேளையில் காணப்பட்ட ஒற்றுமையுணர்வு பின்னர் காணப்படாமை.
- ➢. கலகக்காரர்களுக்கு உணவு கிடைக்கக்கூடிய வழிகளைத் தடை செய்தமை.
- ➢. கலகத்தைக் கொடூரமான இராணுவச்சட்ட மூலம் அடக்கியமை.
- ➢. கலகக்காரர்களுக்கு உதவி புரிந்த கண்டி மன்னனின் தொடர்பைத் துண்டித்தமை.
- ➢. கலகத்தில் ஈடுபட்டோரை தூக்கிலிட்டுக் கொலை செய்தமை.
- ➢. பிரித்தானியரிடம் காணப்பட்ட நவீன ரக ஆயுதங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. 1797ம் ஆண்டுக் கலகத்தின் பெறுபேறுகளைத் தருக.

- ➢. டி. மியூரன் தலைமையிலான குழுவினர் இக்கிளர்ச்சி தொடர்பான விசாரணைகள் மேற்கொள்வதற்காக வரவழைக்கபட்டனர்.
- ➢. இக்குழுவினா வர்த்தக நிறுவனத்தின் செயற்பாடுகள் அநியாயமானதும, கலவரம் அடக்கப்பட்ட விதம் கொடூரமானது எனவும் கூறி சிபாரிசுகளை முன்வைத்தனர்.
- ➢. புதிய வரிகள் யாவும் நீக்கப்படல்.
- ➢. ஏலவிற்பனை முறை நீக்கப்படல்.
- ➢. பிறநாட்டவர்களுக்குப் பதிலாக வரி சேகரிக்க இந்நாட்டவர் நியமிக்கப்பட்டனர்.
- ➢. ஒல்லாந்தர் காலக் காணிச்சட்ட முறை மீண்டும் புகுத்தப்படல்.
- ➢. வரி பணமாக இன்றி பொருளாகவும் அறவிடப்பட வேண்டும்.
- ➢. ஒல்லாந்த நீதிமன்ற முறை பயன்படுத்தப்படல்.
- ➢. பிரட்ரிக்நோத் முதலாவது ஆளுநராக நியமனம் பெற்றமை.

16. இரட்டை ஆட்சிமுறை என்றால் என்ன,?

- ➢. இலங்கையின் கரையோரப்பிரதேசங்களை பிரித்தானியக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியும் பிரித்தானிய முடியும் இணைந்து ஆட்சி செய்தல் ஆகும்.
- ➢. கரையோரப்பகுதி, நிர்வாகம், சட்ட நடவடிக்கைகளிற்கு பிரித்தானிய அரசாங்கம் பெறுப்பாகவும், வரி அறவிடல், வர்த்தக நடவடிக்கை போன்றவற்றிற்கு பொறுப்பாக பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனியும் பெறுப்பாக இருந்தனர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- ➢. கி.பி. 1798 முதல் கி.பி. 1802 வரை நீடித்தது.
- ➢. இரட்டை ஆட்சிமுறையில் முடியின் பிரதிநிதியாக ஆளுநர் பிரட்ரிக் நோத் விளங்கினார்.
- ➢. இரு நிர்வாகக் குழுக்கள் ஒன்றன்பின் ஒன்றாக வர்த்தக மேலாதிக்கத்தை தமது நோக்கமாகக் கொண்டிருந்தன.

**17. இரட்டை ஆட்சி முறை தோல்வியடைந்தமைக் -குரிய காரணங்களைத் தருக.**

- ➢. பிரித்தானிய முடியினுடைய ஆளுநரின் அலுவலர்களுக்கும் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் அலுவலகர்களுக்குமிடையே நல்லுறவு காணப்படாமை.
- ➢. கம்பனியின் அலுவல்களை முடியுமான அளவில் இலாபத்தினை ஈட்டிக் கொள்வதற்காக கபட முறைகளைக் கையாண்டமை.
- ➢. இந்நாட்டு முறைகள் பற்றிய விளக்கமறியாத அரசாங்க அலுவலகர்கள் திறமையற்றவர்களாக இருந்தமை.
- ➢. இரு நிர்வாக அலகுகளால் மக்கள் துன்புற்றமை.
- ➢. வருவாயைவிட செலவு அதிகரித்துக் காணப்பட்டது.

**18. இலங்கை பிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்பட்டமைக்குரிய காரணங்களைத் தருக.**

1802ல் ஏமியன்ஸ் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமையும் இரட்டை ஆட்சியில் முரண்பாடுகள் ஏற்பட்டமையும், இலங்கை கரையோரப்பகுதி நிர்வாகம் மற்றும் வர்த்தகம் போன்ற அனைத்தையும் பிரித்தானிய அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது.

இதன்படி 1802 ல் இலங்கை பிரித்தானிய முடிக்குரிய நாடாக்கப்பட்டது.

இவ்வாட்சியானது 1948ம் ஆண்டு வரை நீடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. பிரட்ரிக் நோத்தின் சர்திருத்தங்களை எழுதுக.

➢. உயர் நீதிமன்றங்களை நிறுவுதல்.

➢. குடியியல் வழக்குகள் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைத்தல்.

➢. இராஜ காரிய முறையை ஒழித்தல்.

➢. அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஒழுங்கு -படுத்துவதற்காக நில அளவை பொதுவேலை, தபால் திணைக்களங்கள் உருவாக்கப்படல்.

➢. வைத்திய சாலைகள் அமைக்கப்படல், அம்மை தடுப்பு மருந்து வழங்கப்படல்.

20. பிரித்தானியர் மலையக இராச்சியத்தைக் கைப்பற்ற ஆர்வம் காட்டியமைக்கான காரணிகளைத் தருக.

➢. கரையோர மக்கள் கண்டி மன்னனையே தமது மன்னனாகக் கருதியமை.

➢. உள்நாட்டின் சுயாதன ஆட்சி கரையோரப் பிரதேசத்திற்குத் தடையாக இருந்தமை.

➢. கரையோரப்பகுதிகளில் இடம்பெற்ற கலவரங்களுக்கு கண்டி மன்னன் ஆதரவளித்தமை.

➢. வர்த்தகத்தின் போது கடவை வரி செலுத்த வேண்டி இருந்தமை.

➢. பிரித்தானியரின் நிர்வாக மையமான கொழும்புக்கும் கடற்படை மத்திய நிலையமான திருகோணமலைக்கும் இடையில் தரைவழியாக தொடர்பை ஏற்படுத்த கண்டி இராச்சியம் தடையாக இருந்தமை.

➢. கொழும்பு - திருகோணமலைக்கு இடையே தரைவழித் தொடர்பை ஏற்படுத்த மலையக மன்னனது அனுமதி கிடைக்காமை.

➢. கொழும்புக்கும் திருகோணமலைக்குமிடையே கடல்வழித் தொடர்புகளை ஏற்படுத்த அதிக செலவும் நீண்ட காலமும் தேவைப்பட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. பாதுகாப்பிற்காக கரையோரப் பிரதேசங்களிலும், மலைநாட்டுப் பிரதேசங்களிலும் இரு படைகளை வைத்துப் பராமரிக்க வேண்டிய தேவையும், செலவும் ஏற்பட்டமை.
- ➢. கண்டி மன்னன் பிரான்சியரின் உதவியை நாடக்கூடும் என்ற பயம் ஏற்பட்டமை.

**21. 1803ல் பிரித்தானியர் கண்டி இராச்சியத்தின் மீது ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்கான உடனடிக் காரியம் யாது?**

- ➢. கரையோரத்தில் இருந்து கண்டிக்கு வியாபாரத்திற்காக சென்ற முஸ்லீம் வியாபாரிகளுக்கு அங்குள்ள அதிகாரிகள் இடைஞ்சல் விளைவித்து ஒரு தொகைப் பாக்கை பறிமுதல் செய்தமை.
- ➢. இழப்பீட்டிற்கு நட்டஈடு வழங்கும்படி ஆளுநர் கோரிக்கை விடுத்ததும் மன்னன் அதற்கு செவிமடுக்காமையால் படையெடுப்பு மேற்கொள்ளப் -பட்டது.

**22. பிரட்ரிக் நோத்தின் கண்டிப்படையெடுப்பு தோல்வி அடைந்தமைக்கான காரணங்களைத் தருக.**

- ➢. பிரித்தானியர் கண்டி இராச்சியம் பற்றிய முழுமையான அறிவினைப் பெற்றிராமை.
- ➢. கண்டி மக்கள் அரசன் மீது விசுவாசம் கொண்டிருந்தமை.
- ➢. கண்டி மக்கள் கொரில்லாப் போர் முறையில் பயிற்சி பெற்றிருந்தமை.
- ➢. கண்டி இராச்சியம் இயற்கை அரண்களால் பாதுகாக்கப்பட்டிருந்தமை.
- ➢. சீரான பாதையின்மை.
- ➢. மழை வெள்ளப்பெருக்கால் பிரித்தானியப் படைகளுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டமை.
- ➢. மலையக மன்னனின் யுத்த தந்திரங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. பின்வருவோர் பற்றி சிறு குறிப்பு தருக.

(அ) ஜோன்டொய்லி

(ஆ) பிலிமத்தலாவ

(இ) எகலப் பொல

(அ) ஜோன் டொய் லி

- ➢ பிரித்தானிய ஆட்சியின் கீழ் சிவில் சேவை அதிகாரியாக பணியாற்றியவர்.
- ➢ கண்டி இராசதானியினைக் கைப்பற்றுவதற்கான பின்புலத்தை ஏற்படுத்துவதற்காக தோமஸ் மெயிட்லன்ட் தேசாதிபதியால் கண்டிக்கு வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர்.
- ➢ மலை நாட்டிற்கான உளவுச் சேவையினை ஆரம்பித்து வெற்றிபெற்றவர்.
- ➢ கண்டி மன்னனை மதுவுக்கு அடிமையாக்கி மக்களின் விசுவாசத்தை இழக்கச்செய்தவர்.

(ஆ) பிலிமத்தலாவ

- ➢ கண்டி இராசதானியின் முதல் மகாஅதிகாரமாக தொழிற்பட்டவன்.
- ➢ நாயக்கர்களிற்கு எதிரான மலைநாட்டு அரசுப் பிரதானிகளிற்கு தலைமை தாங்கியவன்.
- ➢ ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனை பதவி கவிழ்க்க ஆங்கிலேயரின் உதவியை நாடியவன்.
- ➢ மன்னனிற்கு எதிரான சதிப்புரட்சி வழக்கில் குற்றவாளியாக்கப்பட்டு மரண தண்டனை பெற்றவர்.

(இ) எகலப் பொல

- ➢ பிலிமத்தலாவையின் பின்னர் மகா அதிகாரமாக தொழிற்பட்டவர்.
- ➢ மன்னனுக்கு எதிராக சதிப்புரட்சியில் தோல்வியடைந்து பிரித்தானியரிடம் தஞ்சம் புகுந்தவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. 1815ல் கண்டி மீதான படையெடுப்புக்கு பிரித்தானியருக்கு வழித்துணை வழங்கியவன்.
- ➢. ஒரு கட்டத்தில் பிரித்தானியரால் மொரிசியஸ் தீவிற்கு நாடு கடத்தப்பட்டவன்.

**24. 1805ல் ஆளுநராகப் பதவியேற்ற தோமஸ் மெய்ட்லன்ட் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைத் தருக.**

- ➢. உள்நாட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்து உரிய பொறுப்புக்களை வழங்கியமை.
- ➢. முதலியார்களின் அதிகாரங்களைக் குறைத்தமை.
- ➢. ஆளுநர் நோர்த்தினால் ஒழிக்கப்பட்ட இராஜகாரிய முறையை மீண்டும் ஏற்படுத்தியமை.
- ➢. நிர்வாக சேவையாளர்களின் பதவியுயர்வுக்கு சிங்களம் அல்லது தாய் மொழி அறிவைப் பெற்றுக் கொள்ளக் கட்டாயப்படுத்தியமை.
- ➢. சட்டம், நீதி ஆகிய துறைகளில் சீர்திருத்தம் மேற்கொண்டு ஜூரி சபை மூலம் வழக்குகளை விசாரிக்கும் முறை ஏற்படுத்தியமை.

**25. கண்டி மன்னனுக்கும், பிரித்தானியருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகளைத் தருக.**

- ➢. பிரபுக்கள் சிலருக்கு வழங்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் சிலவற்றைப் பறித்து மன்னன் தனது நாயக்க வம்ச உறவினர்களிற்கு வழங்கியமை.
- ➢. சில பிரதானிகளுக்கு அரசன் கொடிய தண்டனைகளை வழங்கியமை.
  (உ + ம் : பிலிமத்தலாவிற்கு மரண தண்டனை வழங்கியமை)
- ➢. பிரதானிகளுக்கிடையே பிரச்சனைகளை ஏற்படுத்தி மோதலை உருவாக்கியமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. **கண்டி அரசனிற்கும் பௌத்த குருமாருக்குமிடையே முரண்பாடுகள் ஏற்படுவதற்கான காரணங்களைத் தருக.**

- பரணதல என்ற இளம் பிக்கு உட்பட பிக்குமார் பலரிற்கும் இராஜத்துரோக குற்றச்சாட்டின் பேரில் மரண தண்டனை விதித்தமை.
- பிக்குகளின் அனுமதியைப் பெறாமல் தலதா மாளிகையை நவீனப்படுத்தியமை.
- பௌத்த விரோத நடவடிக்கைகளை அரசன் மேற்கொண்டமை.

  (உ + ம் : போகம்பரை வாவி விஸ்தரிப்பு, போய மஜ விகாரை அகற்றுதல்)

27. **கண்டி அரசனிற்கும் பொது மக்களிற்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டமைக்கான காரணங்களைத் தருக.**

- மன்னனிற்கு எதிரான சப்ரகமுவ சதிப்புரட்சியில் ஈடுபடாத நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்களிற்கு மரண தண்டனை வழங்கியமை.
- எகலபொலவின் மனைவி மக்களைக் கைது செய்து கொடுமையான முறையில் மரண தண்டனைக்கு உட்படுத்தியமை.
- மன்னன் மதுவுக்கு அடிமையாகி மனிதாபிமானமற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டமை.

28. **ஜோன் டொயிலியினால் மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திரங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

- மலையகத்தின் பிரதானிகள், பௌத்த பிக்குகள் என்போரிடம் நன்கு பழகி மன்னன் தொடர்பான கருத்துக்களை அறிந்தமை.
- கண்டி இராச்சியத்தின் பலம், பலவீனம், படை பலம், கரையோரப்பிரதேசத்திலிருந்து கண்டிக்கான பாதைகள் பற்றிய தகவல்களை அறிந்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. யுத்த காலத்தில் மன்னன் மறைந்திருக்கும் இடங்கள் பற்றி அறிந்து கொண்டமை.
- ➢. மன்னனுக்கும் மக்களுக்குமிடையில் பிரிவினைகள் தோன்றத்தக்க வகையில் செயற்பட்டமை.
- ➢. கண்டிப் பிரதானிகள், பௌத்த துறவிகள், படைத்தளபதிகள் ஆகியோரை தன்வசப் - -படுத்தியமை.

**29. 1815 இல் றொபர்ட் பிரவுண்றிக் கண்டி மீது படையெடுக்கத்தூண்டிய காரணம் யாது?**

- ➢. 1814ல் கண்டிக்குச் சென்ற வர்த்தகர்களை ஒற்றர்கள் என சந்தேகித்து அவர்களின் கை, காது, மூக்கு என்பனவற்றை மன்னன் துண்டித்து அனுப்பியமை.
- ➢. மலைநாட்டுக் கிளர்ச்சியைத் தொடர்ந்து கண்டிப்படையினர் பிரித்தானியரின் ஆட்சிக்குட்பட்ட கிராமங்களுக்குத் தீயிட்டமை.

**30. 1815ல் றொபர்ட் பிரவுண்றிக் இலகுவாக கண்டியைகைப்பற்றிக் கொள்ள முடிந்தமைக்கான காரணங்களைத் தருக.**

- ➢. கண்டி மன்னரது செயற்பாடுகள்
- ➢. றொபர்ட்பிரவுண்றிக், ஜோன் டொய்லி ஆகியோரின் மதிநுட்பமும், ராஜதந்திரமும்.
- ➢. பிரித்தானியர் ஜோன்டொய்லி மூலம் கண்டி பற்றிய பூரண அறிவைப் பெற்றிருந்தமை.
- ➢. எகலபொல, மொல்லிகொட, எக்மெலிகொட போன்ற பிரதானிகளின் உதவியைப் பெற்றமை.
- ➢. கண்டி மன்னன் மக்கள், பௌத்த பிக்குகள், பிரதானிகளின் வெறுப்புக்கு உள்ளானமை.
- ➢. ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னனின் கடும்போக்கும் தூரநோக்கற்ற செயற்பாடுகளும் பிரித்தானியர் -களுக்கு சாதகமாக அமைந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. ஆங்கிலேயர் கண்டியை ஆக்கிரமித்த போது மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனும் ராணி ஸ்ரீரங்கம்மாவும் பாதுகாப்புக்கு ஒழித்திருந்த இடம் எது?

மெதமஹநுவர

32. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனும் அவனது இராணியும் "கொன் வோரிஸ்" எனும் கப்பல் மூலம் கொண்டு செல்லப்பட்ட இடம் யாது?

இந்தியாவில் உள்ள வேலூர்ச்சிறைக்கு

33. கண்டி உடன்படிக்கையின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடுக.

- 1815ல் கைச்சாத்திடப்பட்ட கண்டி உடன்படிக்கையானது 2000 வருடங்களுக்கு மேலாக சுயாதீன அரசாகத் திகழ்ந்த இலங்கை முழுமையாக அந்நியர் வசமானது.
- 1815மார்ச் மாதம் 2ம் திகதி பிரித்தானிய ஜோர்ஜ் மன்னன் சார்பாக ஆள்பதி றொபர்ட் பிறவுண்றிக்கும் கண்டியர்களின் சார்பில் பிரதானிகளும் கண்டி அரசசபை (மகுல்மடுவ) மண்டபத்தில் ஒன்று கூடி கைச்சாத்திட்டனர்.
- இவ்வுடன்படிக்கையின் ஷரத்துக்களை ஆங்கிலத்தல் ஜோன்டொயிலியும், சிங்களத்தில் முதலியர் டி.சேரமும் வாசித்துக் காட்டினர்.

34. கண்டி உடன்படிக்கையின் முக்கிய உறுப்புரைகளை எழுதுக.

உறுப்புரை : 01

- நாயக்க வம்சத் தலைவரின் சிம்மாசன உரிமைகள் அனைத்தும் நீக்கப்பட்டது.
- கண்டிய இராச்சியத்தின் சிம்மாசன உரிமைகள் அனைத்தும் பிரித்தானிய மூன்றாம் ஜோர்ஜ் மன்னருக்கு வழங்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்புரை : 02

➢. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் உள்ளிட்ட அவனது அனைத்து உறவினர்களுக்கும் கண்டி அரியணை மீதான சகல உரிமைகளும் நீக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது.

உறுப்புரை : 03

➢. நாயக்க வம்சத்து ஆண் இனத்தவர்கள் கண்டி இராச்சியத்தினுள் பிரவேசிக்க முடியாது.

உறுப்புரை : 04

➢. உள்நாட்டு பிரமுகர்களின் (மொஹட்டால, கோறளை, விதானை, பிரதானி) பதவிகளும் உரிமைகளும் பாதுகாக்கப்படும்.

உறுப்புரை : 05

➢. பௌத்த சமயமும், சமய குருமார்களும், தூபிகளும், விகாரைகளும் பாதுகாக்கப்படும்.

உறுப்புரை : 06, 07

➢. அங்கவீனப்படுத்தும் பழைய தண்டனை முறைகள் ஒழிக்கப்படும்.

➢. மரண தண்டனை வழங்கும் அதிகாரம் பிரித்தானிய ஆளுநருக்கு வழங்கப்பட்டது.

உறுப்புரை : 08

➢. பொதுமக்களின் குடியியல், குற்றவியல், வழக்குகள் சுதேச உத்தியோகத்தரினால் சம்பிரதாய முறைப்படி விசாரிக்கப்படும்.

35. **முதலாவது சுதந்திரப்போராட்டம் என்றால் என்ன? (1818 சுதந்திரப்போராட்டம்)**

1817 செப்ரெம்பர் மாதத்திலிருந்து 1818 ஒக்ரோபர் மாதம் வரை கண்டியில் நிலவிய ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான மக்கள் ஆயுத படைகளாகக் கிளர்ந்தெழுந்தமை முதலாவது போராட்டம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. 1818 ஆண்டு மலையக சுதந்திரப் போராட்டத்திற் -கான காரணங்களைத் தருக.

**உடனடிக்காரணம் :**

சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட வெல்லஸப் பிரதேச மடிகே முகாந்திரம் பதவிக்கு ஹஜ்ஜி மரிக்கார் எனும் முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட்டமை.

**ஏனைய காரணங்கள் :**

➤. கண்டி மக்கள் தங்களின் கண்ணுக்குப் புலப்படாத மன்னன் ஒருவனுக்கு அடிபணிந்து வாழ விரும்பாமை.

➤. பிரித்தானிய ஆட்சியின் கீழ் பௌத்த மதம் அழிந்துவிடும் என்ற அச்சம் ஏற்பட்டமை.

➤. பௌத்த பிக்குகள் புறக்கணிக்கப்பட்டமை.

கண்டிய பிரதானிகள் அதிருப்தி அடைந்தமை. பிரதானிகளின் நிந்தக வருமானங்களை இழந்தமை. அதிகாரச் செல்வாக்கு குறைந்தமை.

➤. மலைநாட்டு அரசுக்கு உரிமைகோரிக் கொண்டு துரைசாமி என்ற நபர் ஒருவர் ஊவாப் பகுதியில் வெளிப்பட்டமை.

➤. கண்டி ஒப்பந்தத்தின்படி ஆங்கில உத்தியோகத்தர் நடந்து கொள்ளாமையும், ஒப்புக்கொண்டபடி பௌத்த குருமாருக்கும், மதகுருமாருக்கும் உரிய மரியாதை வழங்கப்படாமையும்.

➤. சுதேசமொழி, பழக்கவழக்கங்கள் பற்றி அறிந்திராத பிரித்தானியரால் நாடு ஆளப்பட்டமை. மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியமை.

➤. வெளிநாட்டவர் ஆட்சியினால் தமது கலாசாரம், சம்பிரதாயங்கள் என்பன அழிந்தொழிந்து விடும் என மக்கள் பயந்தமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**37. 1818 சுதந்திரப் போராட்டத் தலைவர்களைக் குறிப்பிடுக.**

- ➢. கெப்பட்டிபொல திசாவை
- ➢. மடுகல்ல திசாவை
- ➢. திம்புலான திசாவை
- ➢. கிவுலேகெதர மொஹட்டால
- ➢. 2ம் பிலிமத்தலாவ அதிகாரம்
- ➢. பூட்டாவே ரட்டேரால
- ➢. கொஹுகும்புரே ரட்டேரால
- ➢. கொடே கெதர அதிகாரம்
- ➢. தம்பவின்ன திசாவை

**38. 1818 சுதந்திரப்போராட்டம் பரவிய இடங்களைக் குறிப்பிடுக.**

- ➢. தும்பறை / சம்பிரகமுவ
- ➢. ஹேவாஹெட்ட / ஊவா
- ➢. ஹரிஸ்பத்துவ / நுவரகலாவிய
- ➢. மாத்தளை / ஏழு கோரளை

**39. 1818 சுதந்திரப் போராட்டம் தோல்வியுற்றமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.**

- ➢. போராட்டம் ஒழுங்கான முறையில் திட்டமிடப்படாமை. பிரதேசத் தலைவர்களிடையே முறையான தொடர்பாடல் இன்மை, உள்ளூர்களில் தனித்தனிக் கிளர்ச்சியாக இடம் பெற்றமை.
- ➢. போராட்டத்தலைவர்களிடையே காணப்பட்ட பகைமைகள்.
- ➢. தேசிய உணர்வுடன் பிரதானிகள் கலகத்தில் ஈடுபடவில்லை. அதன் காரணமாக கலகம் வலுப்பெறமுடியவில்லை.
- ➢. மொல்லிகொட ஆங்கிலேயர் பக்கம் சார்ந்தமை காரணமாக இவருடைய கட்டுப்பாட்டிலிருந்த நான்கு கோறளை வழியாக கண்டிக்கு படைகள், ஆயுதங்கள், மருந்துக்கள் என்பனவற்றைக் கொண்டு செல்ல முடிந்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. கலகத்துக்கு எதிராக நிலத்தைப் பாழடையச் செய்யும் கொள்கைகள் பின்பற்றப்பட்டமை. வீடுகள் அழிக்கப்பட்டமை, விளைநிலங்கள நாசமாக்கப்பட்டமை, கால்நடைகள் களவாடப்பட்டமை போன்ற கொடூர நடவடிக்கைகள மேற்கொள்ளப் -பட்டமை.

➢. நீண்ட காலப்போராட்டத்திற்குத் தேவையான ஆயுதங்களோ வளங்களோ கண்டியரிடம் காணப்படாமை.

➢. சிம்மாசனத்திற்கு உரிமை கோரிய துரைசாமி போலியானவன் என்றும் வில்பாவே பிரதேசத்தைச் சார்ந்த பிக்கு எனவும் தெரியவந்தது. இதன் காரணமாக கெப்பட்டிபொல, மடுகல்ல, பிலிமத்தலாவ ஆகியோருக்கிடையில் முரண்பாடுகள் தோன்றின.

➢. 1818 செப்ரெம்பர் 21ம் திகதிக்கு முன்னர் சரணடைவோருக்கு உயிர்ப்பிச்சையளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டமை.

➢. இறுதியில் ஹெஸ்டபோ என்னும் இராணுவச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

**40. 1818 போரட்டத்தின் விளைவுகளைக் குறிப்பிடுக.**

➢. போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய கெப்பற்றிப்பொல, மடுகல்லே எனும் தலைவர்கள் இராணுவ நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகத் தீர்மானிக்கப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்டமை.

➢. எகலப்பொல உள்ளிட்ட இன்னொரு பிரிவினர் மொரீசியஸ் தவுக்கு நாடு கடத்தப்பட்டமை.

➢. 1815ம் ஆண்டு கண்டி ஒப்பந்தம் கைவிடப்பட்டு 1818 கண்டிப்பிரகடனம் மூலம் ஆங்கிலேயர் அதிகாரம் உறுதி செய்யப்பட்டது.

➢. கண்டிப்பிரதானிகளின் அதிகாரங்கள், சலுகைகள் நீக்கப்பட்டு அவை பிரித்தானிய அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டது.

➢. போராட்டத்தலைவர்களின் சொத்துக்கள் அரசுடமை ஆக்கப்பட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. 1848ம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்திற்கான மறுபெயர்கள் எவை ?

- ➢. இரண்டாம் சுதந்திரப் போராட்டம்
- ➢. விவசாயக் கிளர்ச்சி
- ➢. மாத்தளைக் கலகம்.

42. 1848ம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்களைத் தருக.

- ➢. கோல்புறுக் சீர்திருத்தத்தின் செல்வாக்கு.
  - ✎. 1833 கோல்புறுக் சிர்திருத்தங்களால் பெருந்தோட்டச் செய்கை உருவானதோடு, அதற்கான காணிகளை விற்பதற்கான கொள்கையும் கையாளப்பட்டது.
  - ✎. 1840ல் பிறப்பிக்கப்பட்ட காணிச்சட்டப்படி தமது நில உரிமையை உறுதிப்படுத்த முடியாதோரின் காணிகளை அரசாங்கம் தனதுரிமையாக்கிக் கொண்டது. அதன் மூலம் பொதுமக்கள் தமது விவசாய நிலங்களையும், வாழ்விடங்களையும் பேரளவில் இழந்தமை.
- ➢. பெருந்தோட்டச் செய்கை மீது பிரித்தானியர் கூடிய கவனம் செலுத்தியதால் கிராமிய விவசாயமும், மக்களின் வாழ்க்கை நிலையும் சீர்குலைந்தன.
- ➢. கிராமியப் பிரதேசங்களிலுள்ள குளங்கள், அணைக்கட்டுக்கள், கால்வாய்கள் என்பவற்றின் பராமரிப்பும், கிராமங்களில் சிறுபிரச்சனைகளைத் தீர்த்து வைத்த கிராம சபைகள் செயலிழந்தமை.
- ➢. அரசுக்கும், மக்களுக்குமிடையிலான தொடர்புகள குறைந்து சென்றமையால் மக்களின் தேவைகளை அறிந்து கொள்ள முடியாமை.
- ➢. மதுபானச்சாலைகள் திறக்கப்பட்டமையால் சமூகத்தின் ஒழுக்க விழுமியங்கள் சீர்குலைந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. ஆளுநர் ரொறிங்டனின் புதிய வரிக்கொள்கையாலும், கோப்பி வருமானம் வீழ்ச்சியடைந்ததாலும் வருமானத்தைப் போதியளவு பெற்றுக்கொள்ள புதிய வரிகள் அறவிடப்பட்டன. இப்புதிய வரிகளே இப்போராட்டத்திற்கான உடனடிக் காரணம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

**43. 1948ம் ஆண்டுப் போராட்டத்திற்கான வரிகளைக் குறிப்பிடுக.**

➢. முத்திரை வரி
➢. நாய் வரி
➢. தோணி வரி
➢. கடை வரி
➢. துப்பாக்கி வரி
➢. வண்டி வரி
➢. ஆள் வரி

**44. 1848ம் ஆண்டு போராட்டத்தில் பங்கு கொண்ட தலைவர்களைக் குறிப்பிடுக.**

➢. கொங்கல கொட பண்டா / பேலியகொட டேவிட்
➢. வீரபுரன் அப்பு / பிரான்சிஸ்கோ அங்குரங்கெத்த டிங்கிரால
➢. தினேஸ்
➢. குடாபொல பிக்கு / கடஹுறு பொல தேரர்

**45. இப்போராட்டம் பரவலடைந்த இடங்களைத் தருக.**

➢. மாத்தளை (மத்திய நிலையமாகத் திகழ்ந்தது.)
➢. குருணாகல்
➢. நுவரகலாவிய
➢. தமன் கடுவ
➢. ஹுரிஸ்பத்தவ

**46. 1848 போராட்டம் தோல்வியுற்றமைக்கான காரணங்களைத் தருக.**

➢. போராட்டம் திட்டமிட்ட முறையில் ஒழுங்கு -படுத்தப்படாமை.
➢. போக்குவரத்துப் பாதைகள் இக்காலத்தில் போதியளவு அமைக்கப்பட்டிருந்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. பிரித்தானியப் படையினர் உட்பட அனைத்து வளங்களையும் இலகுவில் பெறமுடிந்தமை.

➢. போராட்டக்காரர்களிடம் நவீன ஆயுதங்களுடன் பயிற்றப்பட்ட படையணி ஒன்று இல்லாமை.

➢. மலைநாட்டுப் பிரதானிகளின் ஆதரவு கிடைக்காமை.

➢. போராட்டத் தலைவர்களான வீரபுரன் அப்பு டிங்கிரால, கடஹப்பொல தேரர் ஆகியோர் உடன் சுட்டுக் கொல்லப்பட்டமை.

➢. போராட்டத் தலைவர்களில் ஒருவரான கொங்கல கொட பண்டார கசையடியுடன் மலாக்காவுக்கு நாடு கடத்தப்பட்டமை.

➢. ஆளுநர் ரொறிங்டன் மார்ஷல்லோ எனும் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தமை.

47. **1848ம் ஆண்டுப் போராட்டத்தின் விளைவுகளைத் தருக.**

➢. போராட்டத்தின் முடிவில் அதற்கான காரணங்களைக் கண்டறிவதற்காக பேலி என்பவரின் தலைமையில் விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

➢. குழுவினரின் சிபாரிசுக்கு இணங்க ஆளுநர் ரொறிங்டன், குடியேற்ற நாட்டுச் செயலாளர் எமர்ஸன் டெனன்ட் என்போர் பதவி நீக்கம் செய்யப்பட்டு இங்கிலாந்துக்கு திருப்பி அழைக்கப்பட்டனர்.

➢. கடைவரி, நாய் வரி என்பன நீக்கப்பட்டு, முத்திரை வரி, துப்பாக்கி வரி, ஆள் வரி என்பன மீள் பரிசீலனை செய்யப்பட்டன.

➢. விவசாயத்தையும், நீர்ப்பாசனத்தையும் மேம்படுத்த அரச நடவடிக்கை மேற்கொண்டமை.

➢. புனித தந்த தாதுவின் பொறுப்பு மீண்டும் ஒரு முறை பிரித்தானிய அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**48. ஐரோப்பிய இனத்தவர்கள் இலங்கைக்கு வருமுன்னர் இலங்கையில் நிலவிய பொருளாதார முறையின் சிறப்பம்சங்களைத் தருக.**

- ➢. கிராமிய விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறை காணப்பட்டது.
- ➢. சுயதேவைப் பூர்த்திப் பொருளாதார முறை நிலவியது.
- ➢. அரசாங்கத்திற்குத் தேவையான உழைப்பைப் பெறுவதற்கு இராஜகாரிய முறை நிலவியது.
- ➢. சமூகத்தில் சாதி அடிப்படையாகக் கொண்ட தொழில் முயற்சிகள் காணப்பட்டமை.
- ➢. உள்நாட்டு வியாபாரம் பண்டைய மாற்று முறையில் இடம்பெற்றது.
- ➢. அரசின் பிரதான வருமானமான நிலம் காணப்பட்டது.

**49. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் நிலவிய பொருளாதார முறையின் முக்கிய அம்சம் யாது?**

- ➢. 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் வருகையின் போது இராஜ காரிய முறை, சாதி முறை, சுயதேவைப் பொருளாதார முறை காணப்பட்டது.
- ➢. வர்த்தகத்தில் முக்கிய கவனம் செலுத்தினர்.
- ➢. விவசாயம் புறக்கணிக்கப்பட்டது.
- ➢. அரிசி இறக்குமதி செய்யப்பட்டதால் சுயதேவைப் பொருளாதார முறை வீழ்ச்சியுற்றது.
- ➢. ஒல்லாந்தர் வர்த்தகப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்தனர்.
- ➢. ஒல்லாந்தர் காலத்தில் தொழிலாளர் வர்க்கம் உருவானது.
- ➢. ஒல்லாந்தர் கண்டி, யாழ்ப்பாண சமூக வழக்கங்களுக்கு முக்கியத்துவம் வழங்கினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. **அத்தம் முறை என்றால் என்ன?**
விவசாய வேலைகளின் போது அயலவரின் ஒத்துழைப்பு பெறப்பட்டதுடன் அவர்களின் வேலைகளின் போதும் தமது உழைப்பை வழங்கும் உழைப்புப் பரிமற்றம் சமூகத்தில் மேற்கொள்ளப்படுதல் அத்தம் முறை எனப்படும்.

51. **இராஜகாரிய முறை என்றால் என்ன?**
சாதாரண மக்கள் தாம் பயன்படுத்திய மானிய நிலம் குறித்து அரசுக்கு சேவை செய்யும் முறை இராஜகாரியமுறை எனப்படும்.

52. **இருவகையான இராஜ காரிய முறையையும் விளக்கிக் கூறுக.**

➢. <u>நிலத்தை அனுபவிக்கும் இராஜ காரிய முறை.</u>
அரசன் தனக்கு சேவைகளை வழங்கும் அதிகாரிகளுக்கு நிலத்தை வழங்கினான். நிலத்தைப் பெற்றுக் கொண்ட அதிகாரிகள் அவற்றைப் பயிரிடுவதற்காக மக்களிடம் பகிர்ந்தளித்து மக்களிடமிருந்து பலவித வரிகளைப் பெற்றனர். அதிகாரிகள் அரசனின் சேவையின் நிமித்தம் நிலத்தை அனுபவிததல இராஜகாரிய முறை எனப்பட்டது.

➢. <u>கட்டாய இராஜகாரிய முறை</u>
நாட்டில் உள்ள வயது வந்த ஆண்கள் அனைவரும் ஆண்டொன்றில் குறிப்பிடப்பட்ட நாட்களுக்கு அரசுக்கு இலவசமாக சேவை செய்ய வேண்டும். இதுவே கட்டாய இராஜகாரிய முறை எனப்பட்டது.

53. **பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சிக்குப் பங்களித்த கோல்புறூக்கின் ஆலோசனைகளைத் தருக.**

➢. அரசாங்க காணிகளை விற்கும் கொள்கை ஒன்றினை அறிமுகம் செய்தமை. இக்கொள்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் ஐரோப்பியர்கள் நிலத்தை உடைமையாக்கிக் கொள்ள முடிந்தமை.

- ➢. உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குக் காணிகளைப் பணமாகக் கொடுத்து வாங்குவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியமை.
- ➢. தனியார் முதலீட்டாளர்களின் நோக்கங்களுக்குப் பொருத்தமான முறையில் கொள்கைகளை வகுத்தமை.

**54. பிரித்தானிய அரசாங்கத்தின் செலவைக் கட்டுப் -படுத்துவதற்காக கோல்புறூக் ஆணைக் குழுவினரால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் மூன்று தருக.**

- ➢. மலைநாட்டையும், தாழ் நாட்டையும் இணைத்து நிர்வாகம் நடத்துதல்.
- ➢. நிர்வாகச் செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்காக சில திணைக்களங்களை மூடுவதுடம் சிலவற்றை ஒன்றிணைத்தலும்.
- ➢. சிவில் சேவையாளர் தொகையைக் குறைத்தலும் அவர்களின் சம்பத்தைக் குறைத்தலும்.

**55. 1840ன் காணிச்சட்டத்தின் மூலம் பிரித்தானியர் பெற்றுக் கொண்ட நன்மைகளைத் தருக.**

- ➢. பெருந்தோட்டப்பயிர்ச்செய்கைக்குத் தேவையான காணிகளை இலகுவாகப் பெற்றுக் கொண்டமை.
- ➢. காணிகளை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொண்டமை.
- ➢. வெளிநாட்டவர் சுதந்திரமாக காணிகளை வாங்கியமை.
- ➢. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கான முதலீடுகள மேற்கொண்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. பெருந்தோட்ட தனியார் முதலீட்டாளர்களை ஊக்குவிப்ப -தற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை எழுதுக.

- ➢. முயற்சியாளர் தங்குதடையின்றி ஊழியரைப் பெறுவதை இலகுவாக்குவதற்காக இராஜகாரிய முறையை நீக்கியமை.
- ➢. தனியார் துறையின் முதலீடுகளை ஊக்குவிப்ப -தற்காக அரசாங்கத்தின் ஏகபோக உரிமையை நீக்கியமை.
- ➢. ஐரோப்பியர் நிலத்தை உடைமையாக்கிக் கொள்வதற்காக காணி விற்பனைச் சட்டங்களைத் தளர்த்தியமை.
- ➢. ஐரோப்பியர் இந்நாட்டில் சுதந்திரமாகக் குடியேறவும், முதலீடுகளை மேற்கொள்ளவும் வசதியாக கொள்கைகளை வகுத்தமை.
- ➢. சிவில் சேவையாளர்களுக்கு தனியார் முயற்சிகளில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டமை.
- ➢. ஐரோப்பிய முதலீட்டாளர்களுக்கு சட்டவாக்க கழகத்தின் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டமை.
- ➢. பெருந்தோட்டத் துறைக்கு முதலீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக சேமிப்பு வங்கியொன்று உருவாக்கப்பட்டமை.

57. இலங்கையில் பிரித்தானியாரால் அறிமுகம் செய்யப்பட்ட பொருளாதாரப் பயிர்களைக் குறிப்பிடுக.

(i) கோப்பி (ii) சிங்கோனா (iii) தேயிலை
(iv) தென்னை (v) இறப்பர்.

58. இலங்கையின் கோப்பிப் பயிர்ச்செய்கையின் ஆரம்ப நிலைகளைத் தருக.

- ➢. 1822ல் ஜோர்ஜ்பேர்ட் என்பவரால் கம்பளை சிங்ஹபிட்டி எனும் இடத்தில் முதன் முதலில் கோப்பித் தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. 1824ல் ஆளுநர் எட்வேட் பாண்ஸ்சினால் கன்னொருவையில் தனியார் கோப்பித் தோட்டம் ஆரம்பிக்கப்பட்டமை.

➢. 1825ம் ஆண்டு எட்வேட் பாண்ஸ் ஆளுநரால் கோப்பிக்கு விதிக்கப்பட்டிருந்த தீர்வை அகற்றப்பட்டது.

59. **கோப்பிப் பயிர்ச்செய்கை விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் எவை?**

➢. 1833ம் ஆண்டு கோல்புறூக் சீர்திருத்தத்தின் பின்னர் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவில் கோப்பித் தோட்டங்களில் முதலீடு செய்தமை.

➢. இங்கிலாந்தில் கோப்பிக்கான தீர்வை குறைக்கப் -பட்டமை.

➢. ஐரோப்பிய சந்தையில் கோப்பிக்கான கேள்வி அதிகரித்தமை.

➢. ஐரோப்பிய நாடுகளான பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய நாடுகளில் கோப்பி பருகும் பழக்கம் அதிகரித்தமை.

➢. அடிமை முறை இல்லாதொழித்தமையால் மேற்கத்திய தீவுகளில் கோப்பிச்செய்கை வீழ்ச்சியுற்றது. அதனால் ஐரோப்பிய சந்தையில் இலங்கைக் கோப்பிக்கான போட்டி குறைந்தமை.

➢. இங்கிலாந்திற்கு கோப்பியை ஏற்றுமதி செய்யும் போது விதிக்கப்பட்டிருந்த தீர்வை 1833ல் குறைக்கப்பட்டமை.

➢. கோப்பிச் செய்கைமூலம் அதிக இலாபம் கிடைத்தமை.

➢. மேற்கிந்திய தொழில்நுட்ப முறையைக் கையாண்டு குறைந்த செலவில் உயர்தர கோப்பியை உற்பத்தி செய்ய முடிந்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. **கோப்பிச் செய்கையின் வீழ்ச்சிக்கான காரணங்களைத் தருக.**

- ➢. 1848ல் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்த நிலை பல்வேறு வகையில் கோப்பிச் செய்கை பாதித்தது.
- ➢. 1848ல் ஹெமிலியா வலராறிக்ஸ் எனப்படும் வெளிறல் நோய் பரவியமை.
- ➢. 1881ல் கோப்பிச் செய்கை முற்றாக அழிவடைந்தது.
- ➢. புதிய பதிலீட்டுப் பயிர்களாக சிங்கோனா, கொக்கோ முதலியன அறிமுகப்படுத்தப்பட்டமை.
- ➢. ஐரோப்பாவில் கோப்பியை விட தேயிலைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டமை.

61. **தேயிலைப் பயிர்ச்செய்கை விருத்தி பற்றி எழுதுக.**

- ➢. 1839ம் ஆண்டளவில் பேராதனைப் பூங்காத் தோட்டம், ஹக்கலை தாவர பூங்காத்தோட்டம், நுவரெலியா, அரச மாளிகைத் தோட்டம் என்பனவற்றில் முதலில் தேயிலைச்செடி நாட்டப்பட்டது.
- ➢. இலங்கையில் ஜேம்ஸ்ரெயிலர் (1867ல்) என்பவரே இப்பயிரை அறிமுகப்படுத்தினான்.
- ➢. 1873ல் சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்ட தேயிலைச் செய்கை 10 ஆண்டுகளுக்குள் மிகவேகமாகப் பரவி 1887ல் ஒன்றரை லட்சம் ஏக்கருக்கு வியாபித்தது 1890ம் ஆண்டளவில் மிகுந்த முன்னேற்றம் கண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. தேயிலைச் செய்கையின் விருத்தியில் செல்வாக்குச செலுத்திய காரணிகளைத் தருக.

- உலகசந்தையில் இலங்கை தேயிலையின் விலை அதிகரித்தமை.
- கோப்பிக்கு அழிவை ஏற்படுத்திய அயன மண்டல மழைவீழ்ச்சி தேயிலைக்கு ஏற்றதாக அமைந்திருந்தமை.
- தென்னாசியாவிலிருந்து குறைந்த வேதனத்தில் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டமை.
- புகையிரதம் மற்றும் ஏனைய போக்குவரத்துத் துறைகள் விருத்தியடைந்தமை.
- கொழும்புத் துறைமுகம் விருத்தியடைந்தமை.
- குறைந்த உற்பத்திச் செலவில் கூடிய இலாபத்தை ஈட்டிக்கொள்ள முடியுமாயிருந்தமை.
- நவீன பசளைகள், கிருமிநாசினிகள் பயன்படுத்தப் பட்டதுடன் நவீன இயந்திர சாதனங்களுடான தொழிற்சாலை விருத்தியடைந்தமையும் தரமான பொருள் உற்பத்தி செய்யப்பட்டமையும்.

(தேயிலை ஆராய்ச்சி நிலையம் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள தலவாக்கொல்லை என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.)

63. தெங்குப் பயிர்ச்செய்கையின் முக்கியத்து -வத்தைத் தருக.

- பண்டையகாலம் தொட்டு இலங்கையில் வீட்டுத்தோட்டப்பயிராக பயிரிடப்பட்டுள்ளது.
- தென்மேற்கு தலைநகர்கள் இடம்பெயர்ந்த பின் தென்னைச் செய்கை அரச ஆதரவுடன் வளர்ச்சியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. 1850ல கோப்பி, சிங்கோனா வீழ்ச்சியைத் தொடர்ந்து தென்னை மீது கவனஞ் செலுத்தப்பட்டமை.
- ➢. தெங்குச் செய்கை சுதேசிகளின் கையில் முக்கியமாகத் தாழ்நாட்டு சிங்களவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.
- ➢. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தெங்கு ஏற்றுமதிப் பயிராகப் பயிரிடப்பட்டது.
- ➢. இலங்கையில் தென்னை, குருநாகல், கம்பஹா, சிலாபம் போன்ற முக்கோணப் பிரதேசத்தில் அதிகளவில் பயிரிடப்பட்டது.
- ➢. 1971ல், 37% நிலப்பரப்பிலும் 1990ல் 41% நிலப்பரப்பிலும் செய்கை பண்ணப்பட்டது.
- ➢. 1920ல் பிலிப்பைன்ஸ் உலகத் தெங்குப்பொருள் சந்தையில் பிரவேசிக்கும் வரை கொப்பரா ஏற்றுமதியில் இலங்கையே முதலிடம் வகித்தது.
- ➢. தெங்குப்பயிர்ச்செய்கை காரணமாக கரையோரப் போக்குவரத்து முறைகளும் விருத்தி செய்யப்பட்டன.
- ➢. லுணுவில எனுமிடத்தில் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

64. தெங்குச்செய்கையின் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் எவை?

- ➢. தேங்காய்
- ➢. வெட்டுத்தேங்காய்
- ➢. புண்ணாக்கு
- ➢. கொப்பறா
- ➢. தும்பு
- ➢. கயிறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. **இலங்கையில் இறப்பர் செய்கையின் அறிமுகம் பற்றி எழுதுக.**

- ➢. 1877ல் பேராதனை கௌரத் பூங்காவில் முதன்முதலாகப் பயிரிடப்பட்டது.
- ➢. களுத்துறை, கோகாலை, இரத்தினபுரி ஆகிய இடங்களிலும அறிமுகம் செய்யப்பட்டது.
- ➢. இங்கிலாந்து கியூ பூங்காவில் பயிரிடப்பட்டிருந்த இறப்பர் மரக் கன்றுகளே இங்கு வரவழைக்கப் -பட்டது.

66. **இலங்கையின் இறப்பர் செய்கையில் செல்வாக்குச செலுத்திய காரணிகளைத் தருக.**

- ➢. முதலாம் உலக மகா யுத்தத்தின் போது இறப்பரின் கேள்வி விலை அதிகரித்துச் சென்றமை.
- ➢. மோட்டார் வாகனக் கைத்தொழில் விருத்தியுடன் இறப்பர் பாவனையும் அதிகரித்தமை.
- ➢. இலங்கையில் இப்பயிருக்குப் பொருத்தமான மண் வளமும், காலநிலையும் காணப்பட்டமை.
- ➢. இலங்கை இறப்பருக்கு ஐக்கிய அமெரிக்காவில் அதிகமான கேள்வி நிலவியமை.
- ➢. களுத்துறை மாவட்டத்தில் பயிரிட்டத்தைத் தொடர்ந்து பிற்காலத்தில் சப்ரகமுவ, மேல், தென், மத்திய மாகாணங்களிலும் பரவலடைந்தது.
- ➢. இலங்கையின் சிறு காணிச் சொந்தக்காரர்களும் ஈடுபட்டமை.

67. **இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை -யினால் ஏற்பட்ட அனுகூலங்கள் எவை,?**

- ➢. இலங்கையில் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதார முறைமை தோற்றம் பெற்றது.
- ➢. இலங்கையின் தேசிய வருமானம் அதிகரித்ததுடன், பணப்பொருளாதாரம் ஆரம்பமானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. போக்குவரத்து செய்தித் தொடர்பாடல்கள் வளர்ச்சியடைந்தமை.
- ➢. புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவானது. (எழுதுவினைஞர், வங்கியாளர், ஒப்பந்தக்காரர், களஞ்சியக் கட்டுப்பாட்டாளர்)
- ➢. கொழும்புத் துறைமுகம் அபிவிருத்தியடைந்தது.

**68. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையினால் ஏற்பட்ட பாதக விளைவுகளைத் தருக.**

- ➢. வாழ்வாதாரப் பயிர்ச்செய்கை புறக்கணிக்கப்பட்டது. இதனால் அரிசி மற்றும உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன.
- ➢. கண்டி விவசாயிகள் காணிகளையும் மேய்ச்சல் நிலங்களையும் இழந்தனர்.
- ➢. இலங்கையின் பொருளாதாரம் உறுதியற்றதாக மாறியது.
- ➢. சர்வதேச விலைத்தளம்பல் இலங்கைப் பொருளாதாரத்தைப் பாதித்தது.
- ➢. மலையக மக்களின் வாழ்வாதாரம் குன்றியதுடன் பல்விதமான பிரச்சினைகள் எழுந்தன.
- ➢. குறைந்த கூலிக்கு வேலை செய்யும் கூட்டம் உருவாகியமை.
- ➢. இந்திய தோட்டத் தொழிலாளர்கள் வருகை அதிகரித்தமை.

**69. 1840ம் ஆண்டு காணிச்சட்டத்தினால் இலங்கை மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புககளைத் தருக.**

- ➢. 30 வருடங்கள் தொடர்ச்சியாக காணி உரிமையைத் தாம் அனுபவித்து வந்தமையை நிரூபிக்க முடியாததால் அரசு அக்காணிகளை அரசுடமையாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. வாழ்வாதாரச் செயற்பாடுகள் நலிவுற்றன.

➢. அந்நியர்களால் எமது காணிகள் அபகரிக்கப் -பட்டன.

➢. கிராமிய மட்டத்தில் விவசாயநிலங்கள் இழக்கப்பட்டமையால் விவசாயம் பாதிக்கப்பட்டது.

**70. 1850க்குப் பின்னர் பிரித்தானியரின் நீர்ப்பாசன புனரமைப்பில் கவனம் செலுத்தியமைக்குரிய காரணங்களைத் தருக.**

➢. கிராமிய மக்களின் நலனில் அக்கறை கொண்ட தேசாதிபதிகளின் வருகை.

➢. நெற்செய்கையை அபிவிருத்தி செய்வதன் மூலம் இறக்குமதிச் செலவைக் குறைக்க எண்ணியமை.

➢. 1848ம் ஆண்டுக் கிளர்ச்சிக்கு நீர்ப்பாசனம் புறக்கணிக்கப் -பட்டமையே காரணம் என உணர்ந்தமை.

➢. நீர்ப்பாசனம் மூலம் நாட்டின் வருமானம் அதிகரிக்கும் என பிரித்தானியர் நம்பியமை.

➢. இங்கிலாந்தின் தாராண்மை அதன் கொள்கைகள் முக்கியம் பெற்றமை.

**71. நீர்ப்பாசனப் புனரமைப்பில் கவனம் செலுத்திய ஆள்பதிகளையும், அவர்களது பணிகளையும் குறிப்பிடுக.**

**ஆளுநர் ஹென்றி வாட் :**

➢. 1855ல் நீர்ப்பாசன நடவடிக்கை தொடர்பான செயற்குழு ஒன்றை முதன் முதலில் அமைத்து புனரமைப்பில் ஈடுபட்டார்.

➢. கிழக்கு மாகாணத்தில் இறக்காமம், அம்பாறைக் குளங்கள் என்பவற்றைப் புனரமைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. தென் மாகாணத்திலும் கிரம, ஊறுபொக்க குளங்களைப் புனரமைத்தார்.

**ஹேர்குலிஸ் றொபின்சன் :**

➢. நீர்ப்பாசனம் தொடர்பாக ஆராய்வதற்கான ஆணைக்குழு ஒன்றை நியமித்தார்.

➢. சிறிய குளங்களைப் புனரமைப்பதில் ஈடுபட்டார்.

➢. திஸ்ஸ மகாராம குளத்தைப் புனரமைத்தார்.

**சேர் வில்லியம்ஸ் கிரகெரி**

➢. இராசரட்டைப் பகுதியில் கூடிய கவனம் செலுத்தினார்.

➢. 1872ல் கந்தளாய் குளத்தைப் புனரமைத்தார்.

➢. அநுராபுரத்தில் பசவக்குளம், திசவாவி என்பனவும், மதவாச்சியில் மஹாவாவி, கலாவாவி, கந்தளாய்க்குளம் என்பவற்றையும் புனரமைத்தார்.

➢. யோத கால்வாயின் ஒரு பகுதியை புனரமைத்தார்.

**தேசாதிபதி ஆதர்கோடன் :**

➢. கிரகெரி ஆரம்பித்து வைத்த ஜெயகங்கை காய்வாயத்திட்டம், திஸ்ஸமகாராமத் திட்டம் என்பவற்றைப் பூர்த்தி செய்தார்.

➢. ஊவா சப்பிரகமுவா மாகாணங்களை அண்டிய பகுதிகளில் நீர்ப்பாசன அமைப்புக்களையும் 42 குளங்களையும் புனரமைத்தார்.

**ஆளுநர் வெஸ்ட் றிட்ஜ்வே :**

➢. வட மாகாணத்தில் முதலில் நீர்ப்பாசனப் புனரமைப்பில் ஈடுபட்டார்.

➢. ஜோதவாவி, நாச்சதுவ வாவிகளைப் புனரமைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. 1900ம் ஆண்டில் நீர்ப்பாசனத் திட்டங்களை பலவற்றையும் மேற்கொண்டார்.

**ஹென்றி ஆதர் பிளேக் :**

➢. நுவரவாவியை புனரமைப்பு செய்தார்.

**மக்கலம் :**

➢. மினிப்பே கால்வாயைப் புனரமைப்புச் செய்தார்.

**72. கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்ட ஆண்டு, உருவாக்கியவர் ஆகியவற்றைக் குறிப்பிடுக.**

➢. கி.பி. 1911

➢. ஆளுநர் மக்கலம்

**73. கூட்டுறவு இயக்கத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.**

➢. விவசாயிகளுக்கு குறைந்தளவு வட்டியில் கடன்வழங்கல்

➢. விவசாயிகளை கடன் சுமையிலிருந்து விடுவித்தல்.

➢. விவசாயிகள் சுக நலன்களை மேம்படுத்தல்.

➢. கூட்டுறவு இயக்கத்தைப் பயன்படுத்தி கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 03
## இலங்கையின் சமய, தேசிய மறுமலர்ச்சி

01. மிஷனரி இயக்கம் என்றால் என்ன?

➢. கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்கும், மத அனுட்டானங்களைப் போதிப்பதற்குமாக ஈடுபட்ட அமைப்பே மிஷனறி இயக்கமாகும்.

அல்லது

➢. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் அரசாங்கத்தின் ஆதரவுடன் இந்நாட்டின் பல்வேறு பிரதேசங்களையும் தமக்குள் பங்கிட்டுக் கொண்டு கல்விப்போதனையில் ஈடுபட்டு வந்த இயக்கமே மிஷனறி இயக்கம் எனப்பட்டது.

02. மிஷனறியினர் சமயத்தைப் பரப்புவதற்கு ஈடுபடுத்திய ஊடகங்களைக் குறிப்பிடுக.

➢. கல்வி ➢. போதனை ➢. சமூக சேவைகள்

03. மிஷனறிமார் கல்வி மூலம் கிறிஸ்தவத்தைப் பரப்புவதில் மேற்கொண்ட நடவடிக்கைகள் நான்கு தருக.

➢. சுதேச மொழிகளைக் கற்றுத் தேர்ச்சி பெற்று அதனூடாகவே கல்வியை மேற்கொண்டமை.

➢. கிராமியப் பாடசாலைகளில் தமிழ், சிங்கள சுதேச மொழிகளில் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

➢. ஆங்கில மொழி மூலம் நகர்ப்புறப் பாடசாலைகளில கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை. (ஆங்கில மொழி மூலம் கற்பது கவர்ச்சியாகக் காணப்பட்டது)

➢. ஆங்கில மொழி மூலம் பாடசாலைகளில் மிஷனறிக் கல்வி கற்று வெளியேறிய சுதேச மக்களுக்கு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புலமைப்பரிசில்கள் வேலை வாய்ப்புக்கள் வழங்கித் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

**04. மிஷனறியின் போதனை மூலம் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதில் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தருக.**

➢. அச்சகங்களை நிறுவி சமயக் கருத்துக்களைக் கொண்ட புத்தகங்களையும், சஞ்சிகைகளையும் வெளியிட்டனர்.

➢. வேதாகமத்தையும், கிறிஸ்தவ சமயம் சார்ந்த புத்தகங்களை சுதேச மொழிகளில் மொழிபெயர்த்து அச்சிட்டு விநியோகித்தமை.

➢. இந்து, பௌத்த சமயத்தவர்கள் சிலைவணக்கம், போலியான நம்பிக்கை எனவும், அவர்களது சமய வழிபாடுகள் பயனற்றவை என்னும் பிரசாரங்களை போதனைகள் மூலம் பரப்பியமை.

➢. பௌத்த வழிபாட்டிடங்களுக்கு அண்மையிலும் மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களிலும் போதனைகள் செய்து தமது கருத்துக்களை மக்களிடையே கொண்டு சென்றமை.

**05. மிஷனறியினர் சமூக சேவை மூலம் கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தருக.**

➢. ஏழை எளிய மக்களுக்கும், ஆதரவற்றோருக்கும் உதவுதல்.

➢. நோயாளரைக் கவனித்து சிகிச்சை செய்தல்.

➢. சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுடன் நெருங்கிப் பழகி அவர்களின் அவசரத் தேவைகளை நிறைவேற்றியமை.

➢. நலன்புரி நிலையங்கள் அமைத்து அதனூடாக மனிதாபிமான உதவிகள் வழங்கியமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இலங்கைளில் செயற்பட்ட மிஷனறி இயக்கங்கள் பற்றிய விபரங்களை அட்டவணை மூலம் எடுத்துக் காட்டுக.

| மிஷனறி இயக்கங்கள் | இலங்கைக்கு வந்த காலம் | இறங்கிய இடங்கள் |
|---|---|---|
| லண்டண் மிஷனறி இயக்கம் | 1804 - 1805 | - |
| பெப்டிஸ்ட் மிஷனறி இயக்கம் | 1812 | கொழும்பை மையமாகக் கொண்டு செயற்பட்டமை. |
| வெஸ்லியன் மிஷனறி இயக்கம் | 1814 - 1815 | வடக்கு, தெற்குப் பகுதிகளில் செயற்பட்டமை. |
| அமெரிக்கன் மிஷனறி இயக்கம் | 1816 | யாழ்ப்பாணம் உட்பட வடபகுதி முழுவதிலும் இயங்கியமை. |
| சேர்ச் மிஷனறி இயக்கம் | 1818 | கொழும்பு, காலி, கற்பிட்டி, மன்னார், கண்டி ஆகிய பகுதிகளைக் கொண்டு செயற்பட்டமை. |

07. மிஷனறி இயக்கங்களைத் தமது சமயத்தைப் பரப்புவதற்காக வெளியிட்ட வெளியீடுகளைத் தருக.

| ஆண்டு | வெளியீடு | மிஷனறி |
|---|---|---|
| 1833 | மாசிக்கதேக்க | சேர்ச் மிஷனறி சங்கம் |
| 1840 | லங்கா நிதானய | சமய பூஸ்திகா சங்கம் |
| 1842 | உரகல | பப்டிஸ்ட் மிஷனறி இயக்கம் |

08. மிஷனறிச் செயற்பாடுகள் வெற்றி பெறுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைத் தருக.

- ➢. அரசாங்க உதவிகள் கிடைத்தல்.
- ➢. சமயத்தைப் பரப்புவாதற்குக் கல்வியைப் பயன்படுத்திக் கொள்ளல்.
- ➢. அச்சகங்களை நிறுவுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பனவற்றை வெளியிடக் கூடிய நிதி வசதிகளைக் கொண்டிருநந்தமை.
- மிஷனறிகளிடையே காணப்பட்ட கட்டமைப்பு ரீதியிலான பலம்.

**09. சுதேச மக்களின் நல்லுறவினைப் பாதித்த மிஷனறிமாரின் செயற்பாடுகளைத் தருக.**

- பௌத்த - இந்து மக்களின் வழிபாடுகளை இழிவுபடுத்தியமை.
- பௌத்த - இந்து மக்களின் வழிபாடுகளுக்கு அண்மையில் தங்களின் சமயப்பிரசாரங்களை மேற்கொண்டமை.
- பணம் படைத்த தமிழ் - சிங்கள இளம் சிறார்களை கல்வியினூடாகவே கிறிஸ்தவர்களாக மதம் மாற்றியமை.

**10. 19ம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் இலங்கை மக்களிடையே சமய எழுச்சி ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகளைத் தருக.**

- மிஷனறிமார்களின் சமயப்பிரசாரத்தால் தேசிய சமயங்கள் தாக்கப்பட்டமை.
- சிங்கள தமிழ் மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை.
- பிரித்தானியர் ஆட்சியில் தமது சமய, கலாசாரம் அழிவுறும் எனும் உணர்வு மக்களிடையே தோன்றியமை.

**11. சமய எழுச்சி / மறுமலர்ச்சி என்றால் என்ன?**

- மிஷனறிக் கல்வி முறையினால் சுதேச கலாசாரத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களை நிவர்த்தி செய்ய மேற்கொள்ளப்பட்ட இத்தகைய முயற்சிகள் அனைத்தும் சமய எழுச்சி / மறுமலாசசி எனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பௌத்த சமய மறுமலர்ச்சி ஏற்பட்டமைக்கான காரணங்களைத் தருக.

- ➢. மிஷனறியின் எழுத்து, சொற்பொழிவு பிரசாரங்கள், என்பன சிலை வணக்கங்களைக் கண்டித்தமை.
- ➢. பௌத்த பழக்க வழக்கங்கள் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டமை.
- ➢. சிங்கள மொழியிலான கல்விக்கு அரசின் உதவி கிடைக்காமை.
- ➢. பௌத்த சமயத்தவர்கள் அதிகளவில் கிறிஸ்தவ மதத்தையும் மிஷனறிக் கல்வி முறையும் பின்பற்ற முயன்றமை.

13. இலங்கையில் அமைக்கப்பட்ட பௌத்த பிரிவெனாக்களை அட்டவணைப்படுத்துக.

| பிரிவெனாக்கள் | ஆண்டு | தலைமைவகித்த பிக்குமார் |
|---|---|---|
| இரத்மலான பரமதம்ம சேதிய பிரிவெனா | 1841 | வலானே சித்தார்த்த தேரர். |
| மாளிகாகந்த வித்தியோதய பிரிவெனா | 1873 | ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் |
| பேலியகொட வித்தியா லங்கார பிரிவெனா | 1875 | இரத்மலானை ஸ்ரீ தர்மலோக தேரர் |

14. பௌத்தமத மறுமலர்ச்சிக்காக நிறுவப்பட்ட அச்சகங்கள் எவை?

- ➢. லங்கோபகார அச்சகம்
  (காலி, 1862 - நிறுவியவர் : ஸ்ரீ சுமண திஸ்ஸ தேரர்)
- ➢. கவடகதிக அச்சகம்
- ➢. சுதர்ஷன அச்சகம்
- ➢. சரசவி சந்தரெஸ அச்சகம்.

15. பௌத்தமத விருத்திக்காக நிறுவப்பட்ட பத்திரிகைகள் சிலவற்றைத் தருக.

1862 - லக்மினி பஹனலங்கா லோகய -
- ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1880 - சரசவிசந்தரெஸ - ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட்
1902 - சிங்கள பௌத்தயா - அநகாரிக தர்மபால
சிங்களஜாதிய - பியதாஸ சிறிசேன

16. பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைத் தருக.

- பிரிவெனாக் கல்வி நிறுவனங்கள் அமைக்கப்பட்டமை.
- வாதப்பிரதிவாதங்கள் மேற்கொள்ளப்பட்டமை.
- நாடகங்கள் மேடையேற்றப்பட்டமை.
- பௌத்த சமயம்சார் கவிதைகள், உரைநடைகள் என்பன எழுதப்பட்டமை.
- பத்திரிகைகள் வெளியிடப்பட்டமை.
- பௌத்த ஆங்கிலப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை.

17. இலங்கையில் ஐம்பெரும் விவாதங்களையும், அவை இடம்பெற்ற ஆண்டுகளைக் குறிப்பிடுக.

| விவாதம் | ஆண்டு |
|---|---|
| பத்தேகம | 1865 |
| வராகொட | 1865 |
| உதம்மிட்ட | 1866 |
| கம்பளை | 1871 |
| பாணந்துறை | 1873 |

18. ஐம்பெரும் விவாதங்களில் பங்குபற்றிய பௌத்த குருமார்களைக் குறிப்பிடுக.

- மீகெட்டுவத்த குணானந்த தேரர்
- ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
- பொத்துவில் இந்திரசோதி தேரர்
- வஸ்கடுவ ஸ்ரீசுபூதி தேரர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. பஞ்சமா விவாதங்களின் பிரதிபலன்களைக் குறிப்பிடுக.

- ➢. பௌத்த மறுமலர்ச்சியால் புது யுகம் ஒன்று உருவானது.
- ➢. இவ்விவாதங்கள் வெளிநாடுகளில் பரவலடைந்து பௌத்த மதம் பற்றிய ஓர் தெளிவு ஏற்பட்டது.
- ➢. விவாத நிகழ்வுகளை அறிந்து வெளிநாட்டு வேற்று மதத்தவர்களின் கவனம் பௌத்த மதத்தின்பால் திரும்பியது.
- ➢. அமெரிக்கரான ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட் மற்றும் இரஷ்ய நாட்டவரான ஹெலனா பலவெட்ஸ்கி அம்மையார் முதலியோர் இலங்கை வந்தனர்.

20. பணாந்துறை விவாதம் பற்றிக் குறிப்பிடுக.

- ➢. பஞ்சமா விவாதங்களில் பிரபலமான விவாதமாகும்.
- ➢. இவ்விவாதத்திற்குத் தலைமை தாங்கியவர் மீகெட்டுவத்த குணானந்த தேரர் ஆவார்.
- ➢. இவ்விவாதத்தின் மூலம் கிறிஸ்தவ குருமார்களின் கருத்துக்கள் தகர்க்கப்பட்டன.
- ➢. மீக்கெட்டுவத்த குணாந்த தேரரின் கிறிஸ்தவம் பற்றிய அறிவும், ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரரின் ஆலோசனைகளும், குணானந்த தேரரும் அவரது பேச்சாற்றலும் சமய ஞானமும் இதனது வெற்றிக்கு வழி வகுத்தன.

21. மீக்கெட்டுவத்த குணானந்த தேரரின் பௌத்த சமயப் பணிகளைத் தருக.

- ➢. விவாதங்கள் மூலமாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.
- ➢. பௌத்த மக்கள் மத்தியில் மத உணர்ச்சியைத் தூண்டியமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. வண. கோகர்லி பாதிரியாரின் பொய்ப்பிரசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தமை.

➢. பௌர்ணமி விடுமுறையை மீண்டும் பெற்றுக் கொள்ளும் முகமாக பிரம்ம ஞான சங்கத்தை நிறுவியமை.

➢. கொழும்பு மாளிகா கந்தையில் வித்யோதய பிரிவெனவை அமைப்பதில் பங்களிப்புச் செய்தமை.

22. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களின் அறிமுகத்தினைத் தருக.

➢. 1832 ஆகஸ்ட் 2ம் திகதி அமெரிக்காவின் நியூஜேர்சி எனும் இடத்தில் பிறந்தவர் ஆவார்.

➢. கடற்படைத் தளபதியாகப் பணியாற்றியவர்.

➢. கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த இவர் பாணந்துறை விவாதத்தினால் கவரப்பட்டு 1880 மே 07ம் திகதி இலங்கை வந்தார்.

➢. வெலிகந்தை விஜயானந்தா பிரிவெனாவில் இணைந்து பௌத்த மதத்தைத் தழுவினார்.

23. ஹென்றி ஸ்மீல் ஒல்கொட் அவர்களின் பௌத்த மதச் சேவைகளைத் தருக.

➢. ஞாயிறு பாடசாலைகளை ஏற்படுத்தியதுடன், பௌத்த பாடசாலைகளுக்கான நிதியம் ஒன்றை உருவாக்குவதில் முனைந்து நின்றார்.

➢. வெசாக் தினத்தை விடுமுறையாக்கப் பாடுபட்டார்.

➢. பௌத்த கொடி உருவாக்கத்திற்கு பங்களிப்பு வழங்கினார்.

➢. சரசவி சந்தரெஸ, த புடிஸ்ற் போன்ற பத்திரிகைகள் மூலம் பௌத்த மக்களுக்கு அறிவூட்டினார்.

➢. பௌத்த பிரம்ம ஞான சங்கத்தை நிறுவி அதன் மூலம் பௌத்த பாடசாலைகளை நிறுவினார்.
உ-ம். கொழும்பு ஆனந்தா கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொழும்பு நாலந்தா கல்லூரி
- கொழும்பு மியூசியஸ் கல்லூரி
- கொழும்பு விசாகா கல்லூரி
- காலி சங்கமித்த பெண்கள் கல்லூரி
- காலி மஹிந்த கல்லூரி
- கண்டி தர்மராஜ கல்லூரி
- நாவலப்பிட்டி அநுருத்த கல்லூரி

**24. அநகாரிக தர்ம பால பற்றிய அறிமுகம் தருக.**

➢. தொன்டோவிட் ஹேவா விதாரண எனும் இளமைப் பெயர் கொண்ட இவர் இருபதாவது வயதில் அநகாரிக தர்மபால எனும் பெயரைச் சூடிக்கொண்டார்.

➢. துறவு பூண்ட பின்னர் சிறி தேவ மித்த எனும் பெயரால் அழைக்கப்பட்டார்.

➢. 1891ல் மகாபோதி சங்கம் எனும் பௌத்த சங்கத்தினை ஆரம்பித்து அதன் மூலமாக பணிகள் பல ஆற்றினார்.

➢. இவர் இந்தியாவின் சாரணாத் நகரத்தில் உயிர் நீத்தார்.

**25. அநகாரிக தர்ம பால அவர்களின் பௌத்த சமயப் பணிகளை எழுதுக.**

➢. பௌத்த பாடசாலைகளை அமைக்கும் பணிகளை மேற்கொண்டார்.
(கொழும்பு ஆனாந்த பாலிகா மகளிர் கல்லூரி, பன்னிப்பிட்டிய தர்ம பால வித்தியாலயம்)

➢. தேசிய கலாசாரத்தைப் பாதுகாப்பதில் நின்றுழைத்தார்.

➢. புத்தகாயா உட்பட இந்தியாவின் வழிபாட்டு இடங்களைப் பாதுகாத்துக் கொள்ளப்பாடுபட்டார்.

➢. இலங்கையர்களை மதுப்பாவனையிலிருந்து மீட்டெடுக்க மதுவிலக்கு இயக்கத் தலைவர்களில் ஒருவராகச் செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. பௌத்தக் கொடி உருவாக்கத்திலும் தனது பங்களிப்பை நல்கினார்.
- ➢. சிங்களா பௌத்தயா எனும் பத்திரிகையையும், மஹாபோதி எனும் சஞ்சிகையையும் வெளியிட்டார்.
- ➢. வெளிநாடுகளில் பௌத்த விகாரைகளை நிறுவினார். (இந்தியாவில் சாரணாத் விகாரை, லண்டன் விகாரை)
- ➢. கல்கத்தா, சாரணாத், டில்லி, பம்பாய், சென்னை போன்ற பல நகரங்களில் மகாபோதி சங்கக் கிளைகளை ஆரம்பித்தார்.

**26. இந்து சமய மறுமலர்ச்சி என்றால் என்ன?**

இலங்கையின் வட பகுதியில் மிஷனறி இயக்கங்களின் தீவிர செயற்பாடு காரணமாக இந்து சமயமும், தமிழ் மொழியும் நலிவுறத் தொடங்கியது. இதன் மூலமாக இந்து சமயச் சடங்குகள் சம்பிரதாயங்கள் அழிந்து விடாமல் பாதுகாப்பதற்காக தமிழ்த்தலைவர்களாலும், சைவப் பெரியார்களாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே இந்துசமய மறுமலர்ச்சி எனப்படும்.

**27. இந்து சமய மறுமலர்ச்சிக்காக பாடுபட்ட தலைவர்களைக் குறிப்பிடுக.**

- ➢. ஆறுமுக நாவலர்.
- ➢. சேர் பொன் இராமநாதன்
- ➢. சேர் பொன் அருணாச்சலம்.

**28. ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆற்றிய சமயப் பணிகளைத் தருக.**

- ➢. இலங்கையில் இந்துமத மறுமலர்ச்சிக்குத் தலைமைத்துவத்தை வழங்கியவர்.
- ➢. இந்துசமயப் பாடசாலைகளை அமைப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டார்.
  - ✎. சைவப்பிரகாச வித்தியாசாலை (1849) - வண்ணார் பண்ணை
  - ✎. இந்துக்கல்லூரி (1872) - யாழ்ப்பாணம்.
- ➢. இந்து சமய கலாசாரத்தையும், தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் வளர்ப்பதற்குப் பாடுபட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. பாலா பாடம் என்னும் பாட நூல்களை மூன்று பாகங்களாக வெளியிட்டார்.
- ➢. கந்தபுராணம், பெரிய புராணம், சேதுபுராணம், திருக்குறள், நாலடியார் எனும் நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டார்.
- ➢. சைவபரிபாலன சபை, இந்துக் கல்விச் சபை என்பனவற்றை ஆரம்பித்து இந்துப் பாடசாலைகளை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.
- ➢. "உதய பானு" என்னும் பத்திரிகையை வெளியிட்டு மதத்துக்கும், மொழிக்கும் பணியாற்றினார்.

**29. சேர்.பொன். இராமநாதன் பற்றியும் அவரது பணி பற்றியும் குறிப்பிடுக.**

- ➢. கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்று, இலண்டன் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி கற்றவர் ஆவார்.
- ➢. கல்வி கற்ற இலங்கையர் எனும் சிறப்புப் பெயர் கொண்டவர்.
- ➢. யாழ் பரமேஸ்வராக் கல்லூரி (இன்றைய யாழ் பல்கலைக்கழகம்), யாழ் இராமநாதன் வித்தியாலயம் (யாழ் நுண் கலைப் பீடம்) போன்றவற்றை தாபித்து யாழ் பகுதி மக்களின் வளர்ச்சிக்கு உதவினார்.
- ➢. 1912ல் படித்த இலங்கையின் முதலாவது பிரதிநிதியாக சட்டவாக்கக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.
- ➢. 1915ல் சிங்கள - முஸ்லிம் கலவரத்தின் போது பிரித்தானிய அரசாங்கத்தால் பௌத்தர்களுக்கு நேர்ந்த அநீதிக்கு எதிராக குரல் கொடுத்தார்.

**30. இஸ்லாம் சமய மறுமலர்ச்சிக்கு பாடுபட்டோரைக் குறிப்பிடுக.**

- ➢. எம். சீ. எம். சித்திலெப்பை
- ➢. ம.பி.ஜாயா
- ➢. ஓராபி பாஷா (எகிப்து)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. **சித்திலெப்பை அவர்களின் பணிகளைக் குறிப்பிடுக.**

- ➢. முஸ்லீம் பெண்கள் கல்வித்துறையில் பின்தங்கிக் காணப்பட்டனர். இதன் காரணமாக கண்டியில் பெண்கள் பாடசாலை நிறுவி முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். (சித்திலெப்பை முஸ்லிம் மகளிர் கல்லூரி)
- ➢. 1882ல் மருதானையில் சாஹிராக் கல்லூரியை ஆரம்பித்தார்.
- ➢. மத்ரஸா எனும் இஸ்லாமியப் பாடசாலை முறையை புனரமைப்புச் செய்தார்.
- ➢. முஸ்லிம் நேசன் ஞான தீபம் முதலிய பத்திரிகைகளை வெளியிட்டார்.
- ➢. பாடநூல்கள் , சமய நூல்களை வெளியிட்டார். (உ + ம் : கருத்துஸ் ஸலாத்)
- ➢. இவரின் இஸ்லாமிய செயற்பாட்டுக்கு தோள் கொடுத்து பக்க பலமாக இருந்தவர் எகிப்து நாட்டவரான ஓராபி பாஷா ஆவார்.
- ➢. 1891ம் ஆண்டு முஸ்லிம் சங்கத்தை ஆரம்பித்தார்.

32. **டீ.பி. ஜாயாவின் பணிகளைத் தருக.**

- ➢. கலகெதரையினைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வேல்ஸ் இளவரசர் கல்லூரியிலும் ஆனந்தாக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.
- ➢. அரபுமொழிக் கல்வியை முஸ்லீம் மக்களுக்கு வழங்குவதற்காக அரும்பாடுபட்டார்.
- ➢. கொழும்பு சாஹிராக் கல்லூரியின் அதிபராகவும் கடமையாற்றினார்.
- ➢. 1914ல் சிலோன் முஸ்லிம் றிவ்யூ எனும் சஞ்சிகையை ஆரம்பித்து முஸ்லிம் மக்களின் கல்வி முக்கியத்துவத்தை விளக்கி தொடர் கட்டுரைகளையும் எழுதினார்.
- ➢. இலங்கையில் சட்டவாக்க கழக உறுப்பினராகவும் செயற்பட்டார். 1948ல் பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் பணியாற்றினார்.
- ➢. சிங்கள தமிழ் தலைவர்களுடன் சேர்ந்து போராடினார்.
- ➢. மக்காவில் முஸ்லீம்களது ஹஜ் வழிபாட்டிற்காக விடுதி ஒன்றினை அமைப்பதற்குப் பாடுபட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 04
# இந்திய சுதந்திரப்போராட்ட இயக்கம்

01. **இந்தியாவுக்கு வருகை தந்த ஐரோப்பியர் யார்? எத்தனையாம் ஆண்டு வருகை தந்தார்?**
வாஸ்கொடகாமா (1498) - போர்த்துக்கல் நாட்டைச் சோந்தவர். (கள்ளிக்கோட்டையில் வந்திறங்கினார்.

02. **ஐரோப்பியர் இந்தியாவுக்கு வரும் போது தெற்கில் இருந்த அரசு எது?**
விஜய நகரப்பேரரசு

03. **1509ல் கீழைத்தேச போர்த்துகேய அரச பிரதி நிதியாக நியமிக்கப்பட்டவர் யார்?**
அல்போன்ஸ் டி அல்பகூர்க்

04. **இந்தியாவில் போர்த்துக்கேயரின் ஆட்சி பற்றிக் குறிப்பிடுக.**

- இந்தியாவுக்கு முதன் முதலாக கடற்பாதைகளைக் கண்டுபிடித்தவன் வாஸ்கொடகாமா ஆவான்.
- போர்த்துக்கல் மன்னன் "இமானுவேல்" என்பவரின் அனுசரணையுடன் 1498ல் தென்னிந்தியாவின் கள்ளிக்கோட்டைத் துறைமுகத்தை வந்தடைந்தனர்.
- கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காகவும், வாசனைத் திரவியங்களைப் பெறுவதற்காகவும் இந்தியாவுக்கு வந்தோம் எனக் கூறினான்.
- 1509ல் கீழைத்தேய போர்த்துக்கேய அரசப் பிரதிநிதியாக நியமனம் பெற்று வந்த "அல்பொன்ஸ் டி அல்பகூர்க்" 1510ல் கோவாவைக் கைப்பற்றி அதனைக் கீழைத்தேய போர்த்துக்கேய மத்திய நிலையமாக்கிக் கொண்டான்

05. **ஒல்லாந்தர் அதிகாரத்தை ஆசியாவில் பரப்புவதற்கு செயற்பட்ட அரச பிரதிநிதி யார்?**
பீட்டர் சேர் கூன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. இந்தியாவில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரான்சியர் ஆகியோரின் ஆதிக்கம் பரவிய இடங்களைத் தருக.

- ➢. போர்த்துக்கேயர் : முப்பாய், கோவா, கள்ளிக் கோட்டை, சென்னை
- ➢. ஒல்லாந்தர் : குஜராத், ஒரிஸா, வங்காளம், பீகார்.
- ➢. பிரான்சியர் : பாண்டிச்சேரி, சந்திர நாகூர், காரைக்கால்.

07. இந்தியாவில் பிரான்சியருக்கு எதிரான போர்களில் பிரித்தானியர் வெற்றியீட்டியமைக்கான காரணங்களைத் தருக.

- ➢. பிரித்தானியரிடம் காணப்பட்ட கடற்படை, பீரங்கிப்படை வலிமை,.
- ➢. பிரித்தானிய அரசு கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனிக்கு ஆதரவு வழங்கியமை போன்று பிரான்சிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனிக்கு அரசு ஆதரவு கிடைக்காமை.
- ➢. பிரித்தானியப் படைத்தளபதிகளின் ஒற்றுமையும், கூட்டுமுயற்சியும்.

08. மொகலாயப் பேரரசு பற்றிக் குறிப்பிடுக.

- ➢. டெல்லி சுல்தானிய பேரரசின் வீழ்ச்சியின் பின் உருவானது.
- ➢. கி.பி. 1525ல் பாபர் எனும் ஆட்சியாளர் மொகலாய பேரரசைத் தோற்றுவித்தான்.
- ➢. மொகலாயப் பேரரசு மன்னர்கள் :

  பாபர் - பேரரசின் முதல் மன்னன்
  ஹிமாயூன் - பாபரின் மகன்
  மகா அக்பர் - பாபரின் பேரன்
  ஜஹாங்கீர் - மகா அக்பரின் மகன்
  சாஜஹான் - மகா அக்பரின் பேரன்
  ஔரங்கசீப் - பேரரசின் கடைசி மன்னன.
- ➢. பாபரின் பேரனான மகா அக்பர் கி.பி. 1556 - 1605 வரை ஆட்சி செய்து மொகலாயப் பேரரசை விசாலமடையச் செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. அக்பரின் பின் வலிமை பெற்ற ஆட்சியாளராக சாஜஹான் விளங்கினான்.
(இவனால் தனது மனைவி மும்தாஜ் ஞாபகார்த்தமாக இந்தியாவில் அக்ராவில் ஜமுனா நதிக்கரையில் அமைக்கப்பட்டதே தாஜ்மஹால் ஆகும்.)

➢. ஒளரங்கசீப் மன்னன் காலத்தில் மொகலாயப் பேரரசு வீழ்சசி அடையத் தொடங்கியது.

09. பிரித்தானியர் இந்தியப்பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொள்ள ஏதுவாய் அமைந்த விடயங்களை எழுதுக.

➢. இந்தியா பல பிரதேச அரசுகளாக (சிற்றரசுகளாக) பிரிந்து செயற்பட்டமை.

➢. அச்சிற்றரசுகளுக்கிடையே ஒற்றுமை காணப்படாமை.

➢. ஆங்கிலேயரின் கடற்படை வலிமை.

➢. இந்தியாவின் நியமனம் பெற்று வந்த ஆளுனர்களின் யுத்த தந்திரங்களும், தந்திரோபாயங்களும்.

➢. யுத்த நடவடிக்கைகள்.

➢. விடுதலைப்பத்திரங்கள் மூலம் சட்ட ரீதியாக அரச பரம்பரையைச் சேர்ந்த அரச வாரிசின்றி மரணிக்கும் ஆட்சியாளருடைய அரசுகளை தம் வசப்படுத்தல்.
(உ + ம் : ஜெய்ப்பூர், நாக்பூர்)

➢. உதவி ஒப்பந்தங்கள் மூலம் அரசுகளின் நிலப் பகுதியினை பிரித்தானியர் பெற்றுக் கொண்டமை.
உ + ம் : ஹைதராபாத், மைசூர்)

10. இந்தியாவில் சிப்பாய் இராணுவம் / சிப்பாய் வீரர்கள் எனப்படுபவர்கள் பற்றி அறியத்தருக.

➢. ஆங்கிலேயரின் கீழ் இராணுவசேவையில் இணைக்கப் பட்டிருந்த இந்தியப் படைவீரர்கள் ஆவர்.

➢ இந்தியா மிகப்பெரிய நாடாகையால் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஆங்கிலேயப் படை வீரர்கள் போதாமையினால் ஆங்கிலப்படை வீரர்களைவிட இந்தியப் படைவீரர்கள் அதிகளவில் இணைக்கப் -பட்டிருந்தனர்.

➢. இப்படைகளில் இந்துக்களும், முஸ்லீம்களும் பெரும்பாலானோராவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. **கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கிளர்ச்சிகளைத் தருக.**

1798 - மைசூர் கலகம்.

1800 - தென்னிந்திய கலகம்

1805 - பாஞ்சாலம் குறிச்சிப்போர்

1806 - வேலூர் கிளர்ச்சி

1824 - பரக்பூர் கிளர்ச்சி

(மேலும் 1844, 1849, 1850, 1852 ஆகிய ஆண்டுகளிலும் பல கிளர்ச்சிகள் ஏற்பட்டு அவை அடக்கப்பட்டன.)

12. **இந்திய சிப்பாய் கலகம் ஏற்படுவதற்கு ஏதுவாய் அமைந்த காரணங்களைத் தருக.**

➢. பிரித்தானியர் பின்பற்றிய கொள்கைகள் தொடர்பில் இந்தியர்களின் எதிர்ப்பு.

➢. பிரித்தானிய வர்த்தக கம்பனியால் இலாப நோக்குடன் செயற்பட்ட ஆட்சி (தேசிய கைத்தொழில்கள் வீழ்ச்சி, வேலையின்மை)

➢. கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப பிரித்தானியர் ஆதரவு அளித்தமை.

உ + ம் : சுதேசிகளின் பாரம்பரியம், நம்பிக்கைகள் கவனத்தில் கொள்ளாமை.

➢. இந்திய சிப்பாய்க்கு குறைந்த சம்பளம், பதவி உயர்வு வழங்கப்படாமை.

➢. சிப்பாய்கள் மத்தியில் ஆங்கிலேயர் தொடர்பில் நிலவிய வெறுப்பு.

13. சிற்பாய் **கலகத்திற்கான உடனடிக்காரணம் யாது?**

➢. இந்திய சிப்பாய்களுக்கு புதிதாகக் தயாரிக்கப்பட்ட என்பீல்ட் வகைத் துப்பாக்கிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

➢. அத்துப்பாக்கிகளுக்கான தோட்டாக்களில் (குண்டுகள்) பன்றியினதும், பசுவினதும் கொழுப்பு பூசப்பட்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. அத்தோட்டாக்களை உறைகளில் இருந்து எடுக்கும் போது வாயினால் கடித்துத் திறக்க வேண்டி இருந்தது.

➢ பசுவைத் தெய்வமாக மதிக்கும் இந்துக்களும், பன்றியை அசுத்தமான விலங்காகக் கருதும் முஸ்லீம்களும் இதனைக் கீழ்த்தரமாக எண்ணி அத்துப்பாக்கிகளைப் பயன்படுத்த மறுத்தனர்.

➢. உபயோகிக்க மறுத்த சிப்பாய்களுக்கு தண்டனைகள் விதித்ததன் காரணமாக கலகம் ஆரம்பமானது.

14. சிற்பாய் கலகம் முதலில் தோன்றிய இடத்தினைக் குறிப்பிட்டுக் காரணத்தைத் தருக.

➢. மீரட் படை முகாம்.

➢. மங்கல் பாண்டே எனும் சிப்பாய் பிரித்தானிய படைத்தளபதி ஒருவரைச் சுட்டதனால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதனால் கோபம் கொண்ட சிப்பாய்கள் 1857 மே மாதம் மீரட் படை முகாமிலிருந்த சிப்பாய்கள் ஆங்கிலப் படை அதிகாரிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு கைதிகளை மீட்டனர்.

15. சிப்பாய்க் கலகத் தலைவர்கள் மூவரைக் குறிப்பிடுக.

➢. பகதூர்ஷா - பஞ்சாப் சிங்கம் / பேரரசர் சிப்பாய்க்கலகத் தளபதி.

➢. நானாசாகிப - இந்தியாவின் மேன்மையாளர் / கான்பூரில் கலகத்தை வழி வழிநடத்திய தலைவர்.

➢. லட்சுமிபாய் - ஜான்ஸியில் கலகத்திற்கு தலைமை தாங்கியவர்.

16. சிப்பாய்ககலகம் தோல்வியுற்றமைக்கான காரணங் -களைத் தருக.

➢. கலகக்காரர்களுக்கிடையில் ஒருங்கிணைந்த தலைமைத்துவம் காணப்படாமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. கலகம் ஒழுங்கான முறையில் திட்டமிடப்படாமை, எதிர்காலத்திட்டமின்மை.
- ➢. ஆங்கிலப்படையை எதிர்கொள்ளத்தேவையான ஆயுதங்கள் இல்லாமை.
- ➢. இந்தியர்களில் ஒருசாரார் ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருந்தமை.
- ➢. இக்கலகம் மீரட்டிலும், டில்லியிலும் பின்னர் ஜான்சி போன்ற சில குறிப்பிட்ட இடங்களில் மாத்திரமே இடம்பெற்றது. ஆனால் ஆங்கிலேயர் ஆதிக்கம் இந்தியா முழுவதும் பரந்திருந்தது.
- ➢. சிங்பாய்கள் இடையே தகவல் பரிமாற்றத் தொடர்புகள் இல்லாமை.

17. சிப்பாய்க்கலகத்தின் விளைவுகளைத் தருக.
- ➢. இந்தியாவில் பிரித்தானியாவின் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.
- ➢. இந்தியா பிரித்தானிய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் வந்ததது.
- ➢. இந்தியப்பிரதேசங்களை மேலும் கைப்பற்றாதிருக்கவும், பேரரசர்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்ளவும் பிரித்தானியா இணங்கியமை.
- ➢. இந்தியர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட தேசிய இயக்கத்தை முன்னெடுத்துச் செலல்ல முன் வந்தமை.
- ➢. சமய சுதந்திரம் வழங்கப்பட்டது.

18. இந்தியர்கள் மத்தியில் தேசிய உணர்வு வளர்ச்சி அடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைத தருக.
- ➢. ஆங்கிலேயர் இந்தியர்களை அடிமையாக நடாத்தியமை.
- ➢. ஆங்கிலக் கல்வி காரணமாக பல்வேறுமொழிகள் பேசும் இந்தியரிடையே ஒருமைப்பாடு ஏற்பட்டமை.
- ➢. ஆங்கிலக்கல்வியினூடாக மேற்கு நாடுகளின் தேசிய உணர்வுகளை அறிந்து கொண்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இந்தியாவில் கல்வி கற்ற மத்தியதர வர்க்கத்தினர் தேசிய உணர்வினை ஊட்டியமை.
- இந்தியத் தலைவர்கள் பிரித்தானியர்களால் மதிக்கப்படாமை.
- ஆங்கிலேயர் ஏற்படுத்திய அடிப்படை வசதிகள் காரணமாக "நாம் அனைவரும் இந்தியர்" என்ற ஒற்றுமை உணர்வு ஏற்பட்டமை.
- இந்திய தேசிய சங்கம் தோற்றுவிக்கப்பட்டமை.

19. **19ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியியில் இந்திய சிந்தனைகளை உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்ட இயக்கங்களைக் குறிப்பிடுக.**

- பிரம்ம சமாஜம் - இந்துக்களின் கலாசார இயக்கம்
- பிரார்த்தனை சமாஜம் - இந்துக்களின் கலாசார இயக்கம்
- ஆரிய சமாஜம் - இந்துக்களின் கலாசார இயக்கம்
- அகமதியா இயக்கம் - முஸ்லீம்களின் கலாசார இயக்கம்
- அலிகான் இயக்கம் - முஸ்லீம்களின் கலாசார இயக்கம்
- சிங்சபை - சீக்கியர்களின் கலாசார இயக்கம்

20. **இந்திய தேசிய சங்கம் / இந்திய தேசிய காங்கிரஸ் பற்றிய அறிமுகத்தைத் தருக.**

- பிரித்தானிய அரசின் கீழ் சிவில் சேவையாளராகப் பதவி வகித்து வந்த பிரித்தானிய நாட்டைச்சார்ந்த "ஹெலன் ஒக்டேவியன் ஹியும்" என்பவரின் வழிகாட்டலிலேயே இந்திய தேசிய சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.
- 1885ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.
- இச்சங்கத்தின் முதலாவது தலைவர் W.C. பெனர்ஜி ஆவார்.
- இரண்டாவது தலைவர் தாதாபாய் நவ்ரோஜி ஆவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

- ➢. சாதி, இன, மத பிரதேச வேறுபாடுகளைக் கருதிற்கொள்ளாது தேசிய வாதத்தை வளர்த்தல்.
- ➢. இந்தியாவுக்கு பூரண சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தல்.
- ➢. இந்தியர் மத்தியில் நட்புறவையும், நாட்டுப் பற்றையும் வளர்த்தல்.
- ➢. இந்தியா கல்விமான்களின் கருத்துக்களை ஒன்று திரட்டி சமூக முரண்பாடுகளைக் கண்டறிதல்.
- ➢. இந்திய மக்களின் பொது நலனுக்காக எதிர்காலத் திட்டங்கள், ஆலோசனைகளை முன் வைத்தல்.

22. இந்திய தேசிய சங்கத்தின் மிதவாதிகள், தீவிரவாதிகள் என்போர் பற்றி வரையறுக்குக.

- ➢. **மித வாதிகள்** : பிரித்தானிய அரசுடன் இணைந்து ஒத்துழைத்து செயலாற்றினர். (W.C. பெனர்ஜி, தாதாபாய் நவ்ரோஜி, சுரேந்திரநாத் பெனர்ஜி)
- ➢. **தீவிரவாதிகள்** : சுயாட்சிக்கான கோரிக்கைகளை போராட்டம் மூலமே வென்றெடுக்க முடியும் எனக் கருதியவர்கள்.

  (பாலகங்கா தரதிலகர், பிபின் சந்திரபோஸ், லால்லஜபதிராய்)

23. ஆரம்ப கால தேசிய சங்கத்தினால் அரசிடம் முன்வைத்த கோரிக்கைகளைத் தருக.

- ➢. இராணுவச் செலவினைக் குறைத்தல்.
- ➢. சட்டசபையை விஸ்தரித்து அதன் அதிகாரங்களைப் பரவலாக்குதல்.
- ➢. இந்திய சட்டமன்றத்தில் இந்தியர்களின் பிரதி நிதித்துவத்தை அதிகரித்தல்.
- ➢. சிவில் சேவையாளர் ஆட்சேர்ப்புப் பரீட்சையை இந்தியாவிலும் நடாத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. ஆரம்ப காலத்தில் (1885 -1905) மிதவாதிகளின் செயற்பாடுகளைத் தருக.

- அதிகாரிகளிடம் கலந்துரையாடல்.
- அதிகாரிகளிடம் மனுதாக்கல் செய்தல்.
- கூட்டங்களை நடாத்தித் தீர்மானங்களை மேற்கொள்ளப் -பட்டமை.
- எழுத்துடகங்கள் மூலமாக பிரசாரம் மேற்கொண்டமை.
- மிகுந்த சகிப்புத்தன்மையுடன் நடந்து கொண்டமை.

25. 1905 - 1919 காலப்பகுதியில் இந்திய தேசிய சங்கத்தின் தீவிரவாத செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடுக.

- இந்தியர்களுக்கான பூரண சுதந்திரத்தை வலியுறுத்தியமை.
- சுயாட்சிக்கான போராட்டத்தை வலியுறுத்தியமை.
- பிரித்தானியப் பொருட்களைப் பகிஷ்கரிக்கும் சுதேச இயக்கத்தைத் தோற்றுவித்தமை.
- சுதேசப் போராட்ட இயக்கத்தினூடாக பொருளாதார சுதந்திரத்தைப் பெற்றிருந்தமை.
- சுயாட்சி பெறுவதற்காக போராட்டங்கள் நடாத்தியமை.

26. ஆங்கிலேயரால் இந்தியாவுக்கு வழங்கப்பட்ட சீர்திருத்தங்கள் எவை?

- 1909ல் மோர்லி - மின்டோ சீர்திருத்தம்.
- 1919ல் மொன்டேகு - செம்பஸ்பர்ட் சீர்திருத்தம்.

27. 1919ல் பிறப்பிக்கப்பட்ட ரோலட்சட்டம் (ரௌலத் சட்டம்) என்பது யாது?

- இந்திய சுதந்திரப்போராட்டத்தைக் கட்டுப்படுத்த பிரித்தானியர் அறிமுகப்படுத்திய சட்டமாகும்.
- அரசுக்கு எதிராக செயற்படும் எந்த ஒரு நபரையும் அல்லது சந்தேகத்திற்கு உரித்தானவரையும் எவ்வித விசாரணையும் இன்றி இரண்டு வருடங்கள் சிறைப்படுத்தும் அதிகார பூர்வ செயற்பாட்டைக் குறிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. **ஜாலியன் வாலா பாக் படுகொலை என்றால் என்ன?**

➢. 1919 ஏப்ரல் மாதம் ரோலட் சட்டத்தை எதிர்த்து பஞ்சாப் மாநிலத்திலுள்ள அமிர்தசாகி ஜாலியன் வாலா பாக் மைதானத்தில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

➢. கூட்டம் நடைபெற்ற வேளையில் ஜெனரல் டயர் என்ற பிரித்தானிய தளபதியும் அவரது பிரித்தானியப்படை வீரர்களும் மைதானத்தினுள் நுழைந்து நிராயுதபாணிகளான மக்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தனர்.

➢. இச்சம்பவத்தில் 400க்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். 1,200 க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

➢. இதுவே ஜாலியர் வாலா பாக் படுகொலை என அழைக்கப்பட்டது.

29. **ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிடுக. (1920 - 1922)**

➢. சுதந்திரப்போராட்டத்தில் தலைமை வகித்த திலகர் 1920ல் மரணமடைய, சுதந்திரப்போரில் காந்தியின் போராட்டம் தொடங்கியது எனலாம்.

➢. 1920ல் கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் காந்தியால் ஒத்துழையாமை இயக்கம் நடத்துவது பற்றி முடிவு செய்யப்பட்டது.

➢. ஒத்துழையாமை இயக்கத்தின்செயற்றிட்டங்கள்.

- பிரித்தானியரால் வழங்கப்பட்ட பட்டங்கள், பதவிகளைத் துறத்தல்.
- பிரித்தானியப் பொருட்களை பகிஷ்கரித்தல்.
- அரச விழாக்களில் கலந்து கொள்வதைத் தவிர்த்தல்.
- நீதிமன்றம் உட்பட அரச நிறுவனங்களைப் பகிஷ்கரித்தல்.
- சட்ட மன்றத்தைப் பகிஷ்கரித்தல்.

(மகாத்மா காந்தி, C.R. தாஸ் ஆகிய தலைவர்கள் இவ்வியக்கத்தை முன்னெடுத்துச் சென்றனர்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. 1920க்குப் பின்னர் இந்திய தேசிய காங்கிரஸ் முன்னெடுத்த நடவடிக்கைகளைத் தருக.

➢. 1921ல் ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப் -படுத்தினர்.

➢. 1928ம் ஆண்டு இந்திய யாப்புச்சீர்திருத்தங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட சைமன் ஆணைக்குழுவுக்கு எதிராக ஹர்த்தால் இயக்கத்தினை நடைமுறைப்படுத்தினார்.

➢. 1928ல் சகல கட்சிகளும் இணைந்து மாநாடு மூலம் இந்தியாவுக்குப் பொருந்தும் வகையில் அரசியல் யாப்புச்சட்ட மூலம் ஒன்றினை உருவாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை.

➢. 1929ம் ஆண்டு பூரண சுயாட்சி என்பதை இலக்காகக் கொண்டு நடவடிக்கை மேற்கொண்டமை.

➢. 1930ம் ஆண்டு அரசுக்கு எதிராக சிவில் சட்டத்தை மீறும் இயக்கம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

➢. 1942ம் ஆண்டளவில் "வெள்ளையனே வெளியேறு" எனும் போராட்ட வாசகத்தை மையமாகக் கொண்டு சத்தியாக்கிரகத்தினை மேற்கொண்டமை.

31. பிரித்தானிய அரசினால் சிறைவாசம் அனுபவித்த தலைவர்கள் நால்வரைக் குறிப்பிடுக.

➢. மகாத்மா காந்தி

➢. பால கங்காதர திலகர்

➢. ஜஹாலால் நேரு

➢. C.R. தாஸ்

32. அகில இந்திய முஸ்லிம் சங்கம் பற்றிக் குறிப்பிடுக.

➢. 1906ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆகாகான் தலைமையில் உருவானது.

➢. முகமது அலி ஜின்னா 1913ல் இணைந்து, 1919ல் இச்சங்கத்தின் தலைவரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்கள்.

- ➢. முஸ்லீம்களை மத ரீதியில் ஒன்றுபடுத்தி ஒரே குரலாக ஒலிக்கச் செய்தல்.
- ➢. இந்தியாவில் சிவில் சேவையில் இணைவதற்கு முஸ்லீம்களுக்கான வாய்ப்பை விஸ்தரித்தல்.
- ➢. சட்டமன்றத்தில் முஸ்லிம்களுக்கு போதுமான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொடுத்தல்
- ➢. முஸ்லீம் மக்களின் உரிமைகளை வென்றெடுத்தல்.

**33. பிரித்தாளும் கொள்கை என்றால் என்ன?**

- ➢. குடியேற்ற நாடுகளில் மக்கள் தமது ஆட்சிக்கு எதிராக ஒன்றிணைவதைத் தடுப்பதற்காக பிரதேச மற்றும் இன அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்தி பெரும்பான்மை இனத்தவருக்கு எதிராக சிறுபான்மை இனத்தவரைச் செயற்படத் தூண்டுதல் ஆகும்.
- ➢. இவ்வாறான நோக்கில் 1916ல் உருவானதே முஸ்லிம் லீக் கட்சி ஆகும்.

**34. பிரித்தானியர் இந்தியர்களின் போராட்டங்களை அடக்குவதற்கும், இந்தியாவினை தனது ஆளுமைக்குட் -படுத்தவும் மேற்கொண்ட நடவடிக்கைத் தருக.**

- ➢. மக்களை விசாரணையின்றிக் கைது செய்தல்.
- ➢. இந்திய சுதந்திரப் போராட்டத்தலைவர்களைக் கைது செய்தல்.
- ➢. பிரித்தாளும் கொள்கையைக் கடைப்பிடித்தல்

உ + ம் : 1905ம் ஆண்டு வங்காளம், கிழக்கு வங்காளம், மேற்கு வங்களம் எனப்பிரிந்தமை.

- ➢. சலுகைகளை வழங்கிப் புரட்சித் தலைவர்களை தம்வசப்படுத்தல்.
- ➢. பொலிஸ், இராணுவம் என்பவற்றைப் பயன்படுத்தி போராட்டங்களையும் கூட்டங்களையும் இடை நிறுத்தல்.
- ➢. துப்பாக்கிச் சூட்டுப்பிரயோகங்களை மேற்கொள்ளல்.
- ➢. பத்திரிகைகள், அச்சகங்களை தடைசெய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. இந்திய சுதந்திரப் போராட்டத்தைத் தடுக்க பிரித்தானியர் மேற்கொண்ட மென்போக்குக் கொள்கைகளைத் தருக.

➢. யாப்பு சீர்திருத்தங்களை மேற்கொண்டமை.

➢. பல்வேறு ஆணைக்குழுக்களை நியமித்தல்.

➢. சீர்த்திருத்தங்களை மேற்கொண்டமை.

➢. சீர்திருத்தங்கள் தொடர்பான கருத்துக்களைக் கேட்டறிதல்.

➢. கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.

36. பிரித்தானியருக்கும் இந்தியருக்கும் இடையில் இடம்பெற்ற வட்டமேசை மாநாடுகள் பற்றி எழுதுக.

➢. இந்தியப்பிரச்சனை பற்றி விவாதிக்க முதலாவது வட்ட மேசை மாநாடு 1930ல் இலண்டனில் நடந்தது. அதில் இந்திய காங்கிரஸ் கலந்து கொள்ளாததினால் தோல்வியில் முடிந்தது.

➢. 2வது வட்டமேசை மாநாட்டில் சிறையிலிருந்த காந்தியைப் பங்கு கொள்ள வைத்து வைஸ்ராய் இர்வின் காந்தியுடன் கலந்துரையாடினார். காந்தி சில நிபந்தனைகளை முன்வைக்க, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு காந்தி - இர்வின் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

➢. 1931இல் லண்டனில் இடம்பெற்ற வட்டமேசை மாநாட்டில் காந்தி 45 நிமிடங்கள் உணர்ச்சி பொங்க சுதந்திர முழக்கமிட்டார். உலகம் முழுவதும் உள்ள பத்திரிகையில் இவரது பேச்சு வெளியானது. இதனால் காந்தி உலக ஆதரவைப் பெற்றுக் கொண்டார்.

➢. சாதி ரீதியாகத் தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையினால் 3வது வட்ட மேசை மாநாடு தோல்வியுற 1935ல் இந்தியச்சட்டம் உருவாக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. 1940ம் ஆண்டின் பின் காணப்பட்ட இந்திய அரசியல் போரட்டத்தின் இயல்புகளைத் தருக.

- இந்தியாவுக்கு சுதந்திரம் வேண்டி நடைபெற்ற போராட்டங்கள் மிகத் தீவிரமடைந்தன.
- இந்தியாவை மேலும் குடியேற்ற நாடொன்றாக வைத்திருக்க முடியாது என்பதனைப் பிரித்தானியர் உணர்ந்து கொண்டமை.
- பிரித்தானிய அரசு இந்திய தலைவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டு சுதந்திரத்தை வழங்குவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டமை.
- முகம்மது அலிஜின்னா தலைமையில் முஸ்லிம் லீக் பாகிஸ்தான் எனும் வேறொரு நாட்டை உருவாக்கிக் கொள்வதற்கான இயக்கம் ஒன்றை முன்னெடுத்துச் சென்றமை.

மகாத்மா காந்தி (1869 - 1948)



- இயற்பெயர் மோகன் தாஸ் கரம் சாந் காந்தி
- இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் கத்திவார் போர்ப்பந்தல் எனும் இடத்தில் 1869.10.02ல் பிறந்தார.
- தந்தை : கரம்சாந்காந்தி
- தாயார் : புத்திரிபாய்
- கல்வித்தகைமை : பாரிஸ்டர் பட்டம் - லண்டன்
- இவரின் முதலாவது அகிம்சைப்போராட்டம் - தென்னாபிரிக்க வெள்ளையருக்கு எதிரானது 1893
- மனைவியின் பெயர் : கஸ்தூரி பாய்
- சுயசரிதை நூல் - சத்தியசோதனை
- அகிம்சைப்போராட்ட உத்திகள் : சத்தியக்கிரகம் மேற்கொள்ளல், அரசுக்கு ஒத்துழையாமை அதிகமாக பாத யாத்திரைகளை மேற்கொள்ளுதல், சிவில் சட்டத்தை மீறல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. சுதந்திரப்போராட்டத்தின் முக்கிய கட்டங்கள்:
- ஒத்துழையாமை இயக்கம் - 1920 - 1922
- உப்புச்சட்ட மறுப்பு இயக்கம் - 1930
- இரண்டாவது வட்டமேசை மாநாடு - 1931
- வெள்ளையனே வெளியேறு இயக்கம் - 1941

➢. **1930ல் தண்டி யாத்திரை**
இந்தியரின் உப்பு உற்பத்திக்காக மிகக் குறைந்தளவு பணமே செலவிடப்பட்டாலும், அரசு அதிக வரிகளைப் பிறப்பித்து உப்பு விற்பனையின் மூலம் அதிக இலாபமீட்டியது. 1930ல் காந்தி தலைமையில் சிவில் சட்டத்தை மீறும் இயக்கத்தினூடாக உப்பு தொடர்பான அரசின் சட்டங்களைத் தகர்த்து எதிர்ப்பினைக் காண்பித்த நிகழ்வு தண்டி யாத்திரை எனப்படும்.

➢. 1930ல் சபர்மதி ஆச்சிரமத்திலிருந்து தண்டி கடற்கரை வரை சுமார் 400 மைல் தூரம் 78 தொண்டர்களுடன் 25 நாட்கள் கால் நடையாகப் பிரயாணம் செய்தார். 1930 ஏப்ரல் 6ல் தன்கையால் உப்பை அள்ளி சட்டமறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

➢. ஆங்கிலேயருக்கு எதிராக வரி செலுத்தாது உப்பைப் பெறமுடியும் என்பதை நிருபித்த நிகழ்வு தண்டி யாத்திரை ஆகும்.

➢. சுதந்திரப்போராட்டத்தில் காந்தியின் பங்களிப்பு பற்றிய சுருக்கமான தொகுப்பு.
- இந்திய சுதந்திரப் போராட்டத்தை அகிம்சைப் போராட்டமாக மாற்றியவர்.
- ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்தமை. 1920 - 1922
- உப்புச்சட்ட மறுப்பு இயக்கம் - 1930
- 2வது வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்டமை - 1931
- வெள்ளையனே வெளியேறு இயக்கம் - 1942
- தண்டி யாத்திரை மேற்கொண்டமை - 1930


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதா பாய் நவ்ரோஜி



- இவர் 1825ம் ஆண்டு மும்பையில் பிறந்தார்.
- இந்தியாவின் மேன்மையாளா எனச் சிறப்பிக்கப்படுகின்றார்.
- மும்பையின் எல்பின்ஸ்டன் நிறுவன கணித விரிவுரையாளராகக் கடமை ஆற்றினார்.
- பிரித்தானிய அரசின் சுரண்டல் மற்றும் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்தார்.
- இலண்டன் நகருக்குச் சென்று இந்திய அரசின் பொருளாதார நிலைகளை இங்கிலாந்து மக்களுக்கு தெளிவுபடுத்துவதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றினார்.
- ஆங்கிலேயரின் பொருளாதாரக் கொள்கை காரணமாக இந்தியா வறிய நாடாக மாறிவரும் விதத்தை ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்தினார்.
- இந்திய தேசிய சங்கத்தின் ஆரம்ப உறுப்பினராவார்.

சுரேந்திர நாத் பெனர்ஜி



- இவர் கல்கத்தாவில் 1848ல் பிறந்தார்.
- இந்திய தேசிய சங்கத்தின் தந்தை என அழைக்கப்பட்டார்.
- முதல் இந்திய சிவில் சேவ்வையா -ளராகப் பணியாற்றினார்.
- இவர் ரிப்பன் கல்லூரி எனும் பாடசாலையையும், வங்காளம் எனும் பத்திரிகையும் ஆரம்பித்தார். இப்பத்திரிகை மூலமாக இந்தியர்களுக்கு தேசிய உணர்வு ஊட்டினார்.
- 1876ல் இந்தியதேசிய சங்கத்தை தோற்றுவிப்பதில் முக்கிய பங்காற்றினார்.
- மிதவாதியான இவர் இந்திய தேசிய தலைவர்களுள் முதன்மையானவர்.
- இரு தடவைகள் தேசிய சங்கத்தின் தலைவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால கங்காதர திலகர்.



➢. 1856ல் மகாராஷ்டிரா மாநிலத்தில் பிறந்தார்.

➢. கணித பாடத்தில் அதிவிசேட சித்திபெற்று, உயர்கல்வி பெற்று முன்னணிக் கல்விமானாகத் திகழ்ந்தார்.

➢. "டெக்கான்" (தக்கிண) கல்விச் சமூகம் எனும் அமைப்பை உருவாக்கினார்.

➢. **உலக அபிமானி** திலகர் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார்.

➢. சுயாட்சி என்பது எனது பிறப்புரிமையாகும் எனக் குறிப்பிட்டார்.

➢. மக்களுக்கு அறிவூட்ட கேசரி, மருதம் என்னும் இரு பத்திரிகைகளை ஆரம்பித்தார்.

➢. பாடசாலைகள் பலவற்றை நிறுவினார்.

மௌலான அப்துல் கலாம்.



➢. 1888ம் ஆண்டு பிறந்தார்.

➢. இந்திய சங்கத்தில் இருந்த முன்னணி முஸ்லீம் தலைவராவார்.

➢. இந்து முஸ்லிம் ஒற்றுமை மூலம் ஐக்கிய இந்தியா ஒன்றினை உருவாக்குவதில் தன்னை அர்ப்பணித்தார்.

➢. "அல்ஹிலால்" எனும் பெயரில் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தார்.

➢. அனைவரது நன்மதிப்பை பெற்ற இவர் மகாத்மா காந்தியின் நெருங்கி நண்பர் ஆவார்.

➢. இந்திய தேசியத் தலைவர்களது கருத்து முரண் -பாடுகளைத் தடுத்து தேசியத் போராட்டத்திற்கு முன்னின்று பாடுபட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. 8 ஆண்டுகள் தேசிய சங்கத்தின் தலைவராகப் பணியாற்றினார்.

➢. பிரித்தானியப் பேரரசு ஹிட்லரின் அதிகாரத்தை தோற்கடிப்பதில் வெற்றிகண்டாலும் மகாத்மா காந்தியின் அகிம்சாவாதத்தை தோற்கடிப்பதில் வெற்றி காணவில்லை எனும் கூற்றின் மூலம் காந்தியினதும், அகிம்சாவாதத்தின் சிறப்பையும் எடுத்துக்காட்டியவர்.

**ஜவஹர்லால் நேரு**



➢. தந்தையின் பெயர் - மோதிலால் நேரு,

➢. தாய் பெயர் - கமலா.

➢. 1889ம் ஆண்டு அலகாபாத்தில் பிறந்தார்.

➢. ஆரம்பக்கல்வியை இந்தியாவில் கற்று இங்கிலாந்து சென்று உயர்கல்வியில் சட்டத்தைப் பயின்றவர். (பாரிஸ்டர் பட்டம் 1902)

➢. இந்திய தேசிய சங்கத்துடன் இணைந்து தேசியத் தலைவராகச் செயலாற்றினார்.

➢. இந்திய சுதந்திரத்தின் பின்னர் முதல் பிரதமராகக் கடமையாற்றியவர் ஆவார்.

➢. புதிய இந்தியாவைக் கட்டியெழுப்ப அயராது பாடுபட்டார்.

➢. இவர் எழுதிய பல நூல்களுள் **"நேருவின் உலக வரலாறு"** பிரபல்யமானது.

➢. நேருவின் புதல்வி இந்திரா காந்தி அவர்களே இந்தியப் பெண் பிரதமராவார்.

➢. "நவ இந்தியாவின் சிற்பி", "ஆசியா தந்த அணையாத ஜோதி" எனச் சிறப்பிக்கப்பட்டவர் ஆவார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொகம்மட் அலிஜின்னா



➢. கராச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

➢. அதி உயர்கல்வித் தகைமை கொண்ட வழக்கறிஞர் ஆவார்.

➢. முஸ்லீம் லீக் கட்சியின் தலைவராகவும் விளங்கினார.

➢. முஸ்லீம் மக்களுக்காக பாகிஸ்தான் என்னும் நாட்டை உருவாக்குவதில் குறியாக இருந்தார்.

➢. 1931ல் இலண்டன் வட்ட மேசை மாநாட்டில் கலந்துகொண்டவர்களுள் இவரும் ஒருவராவார். முஸ்லிம்களின் நலன் பற்றி விளக்கினார்.

➢. 1940ல் முஸ்லீம்களுக்கு தனிநாடு அவசியம் என்ற கருத்தை முன்வைத்துப் போராடினார்

➢. 1947 ஆகஸ்ட் 14ல் பாகிஸ்தான் உருவாக இவரே காரணகர்த்தா ஆவார்.

➢. பாகிஸ்தானின் முதல் தேசாதிபதியாக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 05

## இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களும், தேசிய சுதந்திர இயக்கமும்.

01. அரசியல் யாப்பு என்பது யாது?

அரசொன்றின் அமைப்பு அதிகாரம் தொழிற்பாடு ஆகியவற்றையும், அவ்வரசின் எல்லைக்குட்பட்ட மக்களின் உரிமைகளையும் கடமைகளையும் அம்மக்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையிலான உறவுகளையும் தெளிவாக விளக்கும் விதிகளின் தொகுப்பே அரசியல் யாப்பாகும்.

02. பிரித்தானியரால் இலங்கையில் நடைமுறைப்படுத்தப் -பட்ட அரசியல் யாப்புக்களைக் குறிப்பிடுக.

- 1833 - கோல்புறுக் கமரன் யாப்பு
- 1910 - குறூ மக்கலம் யாப்பு
- 1920 - மானிங் யாப்பு
- 1924 - மானிங் - டிவன்சியர் யாப்பு
- 1931 - டொனமூர் யாப்பு
- 1947 - சோல்பரி யாப்பு

03. கோல்புறுக் ஆணைக்குழு நியமிக்கப்பட்டதன் நோக்கம் யாது?

ஆண்டுதோறும் இலங்கையில் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வருமானத்தினை விட செலவு அதிகரித்துச் சென்றது. அதனை ஆராய்ந்து சீர்திருத்த ஆலோசனைகளை முன்வைப்பதாகும்.

04. கோல்புறுக் குழுவினரின் விசாரணைக்குட்பட்ட துறைகளைக் குறிப்பிடுக.

- W.M.G. கோல்புறுக் அவர்களால் அரச வருமான வரிகள், செலவின நடவடிக்கைகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.
- சார்ள்ஸ் கே. கமரன் அவர்களால் நீதிமன்றம், நீதித்துறைச் சீர்திருத்தம் பற்றி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| |
|---|
| குறிப்பு : 3 துறைகள் |
| (i) நிர்வாகம், வருமானம், செலவுகள். |
| (ii) அரசாங்க நிர்வாக நிறுவனங்கள் |
| (iii) நீதித்துறைகள் |

05. 1833 கோல்புறூக் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்களைத் தருக.

- ➢. சட்டவாக்க, சட்ட நிர்வாக சபைகள் தோற்றுவிக்கப் -பட்டமை.
- ➢. கண்டி, கரையோரப்பிரதேசங்களை இணைத்து ஒரே ஆட்சிக்குட்படுத்தப்பட்டமை.
- ➢. நிர்வாக வசதிக்காக நாட்டை 5 மாகாணங்களாகப் பிரித்தமை.
- ➢. கட்டாய சேவையாக இருந்த இராஜகாரியமுறை நீக்கப்பட்டமை.
- ➢. அரசின் வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டமை.
- ➢. ஆங்கிலக்கல்வி பரவலாக்கப்பட்டமை. (ஆங்கிலக் கல்வி அரச கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.)
- ➢. காணிகளை விற்கும் கொள்கை ஆரம்பிக்கப்பட்டமை.
- ➢. ஆளுநரின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படாமை.

06. 1833 கோல்புறுக் - கமரன் யாப்பில் சட்டவாக்க அமைப்பைத் தருக.

சட்டவாக்கக் கழகம்
(15)

| உத்தியோகப் பற்றுள்ளோர். (09) | உத்தியோகப் பற்றற்றோர் (06) |
|---|---|
| | ஐரோப்பியர் - 03 |
| | பறங்கியர் - 01 |
| | தமிழர் - 01 |
| | சிங்களவர் - 01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இச்சபைக்கு ஆளுநர் தலைமைதாங்குவார். அத்தருணத்தில் ஆளுநர் ரொபர்ட்வில்மட் என்பவரே ஆளுநராகத் தலைமை தாங்கினார்.

**07. கோல்புறுக் - கமரன் யாப்பின் சட்ட நிர்வாகக் கழக அங்கத்தவர்களைக் குறிப்பிடுக.**

- குடியேற்றச் செயலாளர்.
- நில அளவையாளர்
- பொருளாளர்
- சுங்க அறவீட்டாளர்
- கணக்காளர்
- கொழும்பு அரசாங்க அதிபர்.

**08. 1833ல் உருவாக்கப்பட்ட மாகாணங்களையும் அதன் நிர்வாக மையங்களையும் தருக.**

| மாகாணம் | நிர்வாக மையங்கள் |
|---|---|
| வட மாகாணம் ..................... | யாழ்ப்பாணம் |
| கிழக்கு மாகாணம் ............. | திருகோணமலை |
| தென் மாகாணம் ................. | காலி |
| மேல் மாகாணம் ................. | கொழும்பு |
| மத்திய மாகாணம் ............. | கண்டி |

**09. கோல்புறுக் இராஜகாரிய முறையை நீக்கியமைக்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.**

- மக்களின் சுதந்திரத்திற்கு தடையாக இருந்தமை.
- அடிப்படை உரிமை மீறலாகக் கருதியமை.
- பணம் (கூலி) வழங்காது உழைப்பைச் சுரண்டியமை.
- பெருந்தோட்டங்களுக்கு கூலிகள் பெறுவதற்கு தடையாக இருந்தமை.
- தாராளவாதக் கொள்கைக்கு தடையாக இருந்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கோல்புறுக் சீர்திருத்தத்தின் நன்மைகளைத் தருக.

- ➢. எமது நாட்டின் முதலாவது அரசியல் யாப்பாக அமைந்தது.
- ➢. இந்நாட்டின் பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு அடித்தளமிட்டது.
- ➢. ஆங்கிலக்கல்வி அறிமுகமானதால் ஆங்கில அறிவு வளர்ச்சி கண்டது.
- ➢. பெருந்தோட்டத்துறை அறிமுகப்படுத்தப்பட்டு ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதார முறை உருவாகியது.
- ➢. கட்டற்ற வர்த்தகம் அறிமுகப்படுத்தப்பட்டதால் எல்லோரும் வர்த்தகத்தில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்பட்டது.

11. கோல்புறுக் சீர்த்திருத்தங்களின் குறைபாடுகளைத் தருக.

- ➢. இனவாரிப் பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்-பட்டமை பிற்காலத்தில் இனப்பிரச்சனை தோற்றுவதற்கு அடி கோலியது.
- ➢. ஆளுநருக்குச் சார்பாகவே சட்டசபை விளங்கியது.
- ➢. பெருந்தோட்டத்துறை அறிமுகப்படுத்தப்பட்டு அதில் கவனம் செலுத்தியமையினால் விவசாயம் புறக்கணிக்கப்பட்டது.
- ➢. ஆங்கிலக் கல்வி முறையினால் சொந்த மொழி, கலாசாரம் என்பன கைவிடப்படும் நிலை உருவாகியது.
- ➢. கட்டற்ற வர்த்தகம் அறிமுகம் காரணமாக வெளிநாட்டவர்களின் தலையீட்டால் இலங்கை மக்களுக்கும் அவர்களுக்கும் இடையே முரண்பாடு உண்டானது.

12. கோல்புறுக் சட்டவாக்கக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சுதேசிகளின் பெயர்களைத் தருக.

- ➢. ஜொகன்னஸ் பிலிப்ஸ் விஜயகோன் பண்டித ரத்ன - முதலாவது தெரிவு செய்யப்பட்ட சிங்களவர்.
- ➢. ஆறுமுகம்பிள்ளை குமாரசாமி - முதலாவது தெரிவு செய்யப்பட்ட தமிழர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. த்ரு.பி.பீ பாணபொக்க - முதலாவது தெரிவு செய்யப் -பட்ட மலைநாட்டுச் சிங்களவர்

➢. ஜனாப்.எம்.சி. அப்துல்ரஹ்மான் - முதலாவது தெரிவு செய்யப்பட்ட இஸ்லாமியர்.

13. ஐரோப்பியர் கோல்புறூக் சீர்திருத்தங்களில் மாற்றம் வேண்டிப் போராடியமைக்குரிய காரணங்களைத் தருக.

➢. பெருந்தோட்டப் பிரதேசங்களுக்கு பாதை வசதிகளை விருத்தி செய்தல்.

➢. தபால், தகவல், தொடர்பாடல் வசதிகளை விருத்தி செய்தல்.

➢. ஆளுநரின் அங்கத்தவர் நியமனம் தொடர்பாக அபிவிருத்தி.

➢. ஐரோப்பிய பிரதிநிதிகளுக்கு சட்டவாக்க சபையில் அதிகாரங்கள் குறைவாக இருந்தமை.

14. 20ம் நூற்றாண்டு ஆரம்ப காலப்பகுதியில் அரசியல் போராட்டங்களுக்கு தலைமை வகித்த மத்தியதர வர்க்கத்தினரைக் குறிப்பிடுக.

➢. சேர். பொன். இராமநாதன்

➢. சேர். பொன். அருணாசலம்

➢. சேர். ஜேம்ஸ்பீரிஸ்

➢. H.G.C. பெரேரா

15. 20ம் நூற்றாண்டில் மத்தியதர வர்க்கத்தினரால் யாப்பு கோரிக்கைகளுக்காக உருவாக்கப்பட்ட சங்கங்கள் எவை?

➢. சிலாபச் சங்கம்

➢. யாழ்ப்பாணச் சங்கம்

➢. கரையோர உற்பத்தியாளர் சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. 20ம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் இலங்கையர் முன்வைத்த யாப்புச் சீர்திருத்த கோரிக்கைகளைத் தருக.

- ➢. சட்டவாக்கக் கழகத்திற்கு அங்கத்தவர்களை நியமிக்கும் போது இன ரீதியான முறையை நீக்கி மாகாணப் பிரதிநிதித்துவ முறையை அறிமுகப்படுத்தல்.
- ➢. சட்டவாக்கக் கழகத்திற்கு வாக்குரிமை மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்.
- ➢. சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்களை விரிவு -படுத்துதல்.
- ➢. சட்டவாக்க கழகத்தில் உத்தியோகச் சார்பற்றோர் தொகையை அதிகரித்தல்.
- ➢. நிர்வாகக் கழகத்திற்கும் உத்தியோக சார்பற்றோரில் இருந்தும் அங்கத்தவர்களை நியமித்தல்.

17. குறூ - மக்கலம் சட்டசபையின் கட்டமைப்பைத் தருக.

சட்டவாக்கக் கழகம் (1910 - 1912)
(21)

- உத்தியோகப் பற்றுள்ளோர் (சார்புள்ளோர்) (11)
- உத்தியோகப் பற்றற்றோர் (சார்பற்றோர்) (10)
  - வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் (04)
    - ஐரோப்பியர் -02
    - பறங்கியர் -01
    - கல்விகற்ற இலங்கையா - 01
  - நியமனம் மூலம் (06)
    - கரையோரச் சிங்களவர் - 02
    - தமிழர் - 02
    - கண்டிச்சிங்களவர் - 01
    - முஸ்லீம் - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. 1910 குறூ - மக்கலம் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்களைத் தருக.

➢. சட்டவாக்கக் கழகத்தின் உத்தியோகச் சார்பற்றோர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

➢. கல்வி கற்ற இலங்கையர் சார்பாக ஒருவருக்கு அங்கத்துவம் கிடைத்தமை. (சேர்.பொன். இராமநாதன்)

➢. தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டமை.

➢. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை முதன்முதல் கிடைக்கப்பெற்றது.

19. குறூ - மக்கலம் சீர்திருத்ததின் நன்மைகளைத் தருக.

➢. சட்டசபையின் அடுத்தகட்ட வளர்ச்சியாக அமைந்தது.

➢. இதன் மூலம் அறிமுகமான தேர்தல் முறையானது எதிர்காலத்தில் சர்வஜன வாக்குரிமையை வழங்கப்பட காரணமாயிற்று.

➢. படித்த இலங்கையருக்கு இடம் கிடைத்தமையால் கற்றோர் குழாம் அரசியலில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்பட்டது.

20. குறூ - மக்கலம் சீர்திருத்ததின் (யாப்பின்) குறைபாடுகளை எழுதுக.

➢. வாக்குரிமை 4% மட்டுமே கிடைக்கப்பெற்றது.

➢. இனவாரிப்பிரதிநிதித்துவம் மேலும் நீடித்தமை.

➢. ஆளுநரின் அரசியல் அதிகாரம் நீடித்தமை.

➢. நிர்வாகத்துறைக்கும், சட்டவாக்கத்துறைக்கும் தொடர்பு இல்லாமை.

21. இலங்கை தேசிய சங்கத்தின் தோற்றத்திற்கு ஏதுவாக அமைந்த உடனடிக்காரணம் என்ன?

1915ல் இடம்பெற்ற சிங்கள முஸ்லீம் கலவரமும் அதனை பிர்த்தானியர் அடக்கிய முறைகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. தேசிய சங்கத்தின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுக.

- ➢. 1919ம் ஆண்டு உருவானது.
- ➢. சிலாபச்சங்கம், யாழ்ப்பாணச்சங்கம், இலங்கைதேசிய சங்கம், இலங்கை சீர்திருத்தச் சங்கம் ஆகிய சங்கங்களை இணைத்து சேர்.பொன். அருணாசலம் தலைமையில் தோற்றம் பெற்றது.

23. தேசிய சங்கத்தின் நோக்கங்களைத் தருக.

- ➢. பிரித்தானிய ஏகாபத்தியத்தின் கீழ் சுயாட்சி பெறல்.
- ➢. தொடர்ச்சியான சீர்திருத்தங்களினூடாக பொறுப்பு அரசாங்கத்தைப் பெறுதல்.
- ➢. இலங்கையர் அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளல்.
- ➢. சட்டவாக்கக் கழகத்தில் இலங்கையர் பிரதி நிதித்துவத்தை அதிகரித்தல்.
- ➢. வாக்குரிமை மூலம் சட்டவாக்க சபை உறுப்பினர்களின எண்ணிக்கையை அதிகரித்தல்.
- ➢. தேசியத் தலைவர்கள் ஆட்சி நடவடிக்கைகளில் கூடுதலான பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளுதல்.

24. இலங்கை தேசிய சங்கத்தின் செயற்பாடுகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

- ➢. பிரித்தானிய அரசிடம் மனுச்சமர்ப்பித்தல்.
- ➢. குடியேற்ற நாட்டு செயலாளரிடம் கோரிக்கைகளை முன் வைத்தல்.
- ➢. கூட்டங்கள் மூலமாக மக்களுக்கு அறிவூட்டியமை.
- ➢. சட்டவாக்க சபையின் வாதப்பிரதிவாதங்களை நிகழ்த்துதல்.
- ➢. ஆளுநரின் அபிமானத்தை வென்றெடுக்க முயற்சி செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. மனிங் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் அங்கத்தவர் கட்டமைப்பைத் தருக.

சட்டவாக்கக் கழகம் (1920) (37)

- உத்தியோகச் சார்புள்ளவர் (14)
- உத்தியோகச் சார்பற்றோர் (23)
    - வாக்குரிமை (16)
    - நியமனம் (07)

26. மனிங் யாப்பின் முக்கிய அம்சங்களைத் தருக.

- ➢. உத்தியோகச் சார்புள்ளவரை விட உத்தியோகச் சார்பற்றோர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை.
- ➢. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப் - படுத்தியமை.
- ➢. மாகாண ரீதியான தெரிவு இடம்பெற்றமை.
- ➢. சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்கள் விஸ்தரிக்கப்பட்டமை.
- ➢. வாக்குரிமை சிறிய அளவில் அதிகரிக்கப்பட்டமை.
- ➢. சட்ட நிர்வாக சபையில் உத்தியோகச் சார்பற்றவர்க -ளுக்கு நியமனம் கிடைத்தமை.
- ➢. இந்தியர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது.

27. மனிங் அரசியல் சீர்திருத்தத்தின் நன்மைகளைத் தருக.

- ➢. உத்தியோகச்சார்பற்றவரின் எண்ணிக்கையானது உததியோக சார்புள்ளோரை விட அதிகரித்தமையால இலங்கையரின் வலுவினை மேலும் அதிகரித்தது.
- ➢. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகம் செய்யப்பட்டமையால் பிரதேச அபிவிருத்தி துரித கதியில் இடம்பெற வாய்ப்பளித்தது.
- ➢. இந்திய வம்சாவழியினரும் அரசியலில் பங்கு கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. வாக்குரிமை மூலம் தெரிவுசெய்யும் முறை விரிவாக்கப்பட்டமை.
- ➢. சட்டவாக்கச் சபையின் அதிகாரம் மேலும் விரிவாக்கப்பட்டமை.

28. மனிங் அரசியல் யாப்பின் குறைபாடுகளைத் தருக.
- ➢. பிரதேசவாரிப்பிரதிநிதித்துவத்தின் மூலம் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதித்துவம் குறைவடைந்தது.
- ➢. இனப்பிளவும், பிரதேசப்பிளவும் ஏற்பட வழிவகுத்தது.
- ➢. ஆளுநர் தொடர்ந்தும் சட்ட நிர்வாகம் அதிகாரம் படைத்தவர்களாகவே விளங்கினர்.
- ➢. நிர்வாக சபைக்கும் சட்டவாக்க சபைக்கும் இடையே தொடர்பு காணப்படவில்லை.
- ➢. அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்படவில்லை.

29. மனிங் - டிவன்சியர் அரசியல் யாப்பில் அங்கத்தினா கட்டமைப்பைத் தருக.

**சட்டவாக்க சபை (1924)**
**(49)**

- உத்தியோகச் சார்புள்ளோர் (12)
- உத்தியோகச் சார்பற்றோர் (37)
  - வாக்குரிமை (29)
    - மாகாணத் தேர்தல் மூலம் (23)
    - இன ரீதியான நியமனம் மூலம் (6)
      - ஐரோப்பியர் - 03
      - பறங்கியர் - 02
      - மேல்மாகாண இலங்கைத் தமிழர் - 01
  - நியமனம் (08)
    - முஸ்லிம்கள் - 03
    - இந்தியத் தமிழர் - 02
    - ஆளுநர் தெரிவு - 03


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

30. மனிங் - டிவன்சியர் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

➢. சட்டவாக்கக் கழகத்தின் உபதலைவராக அங்கத்தவர்களுள் ஒருவர் வாக்குரிமை அடிப்படையில் தெரிவு செய்துகொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

➢. நிர்வாகக் கழகத்திற்கு உத்தியோகச் சார்பற்றவர்கள் மூவர் நியமிக்கப்பட்டமை.

31. மனிங் - டிவன்சியரின் சீர்திருத்தத்தின் நன்மைகளைத் தருக.

➢. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் விரிவாக்கப்பட்டமை பிரதேச ரீதியான அபிவிருத்திக்கு வழிகோரியது.

➢. தமிழர்கள் கோட்டுக் கொண்டதிற்கிணங்க மேல்மாகாணத்தில் தமிழ்ப் பிரதி நிதித்துவம் கிடைக்கப்பெற்றமை கொழும்பில் தமிழர் நலன்பேணும் விடயமாக அமைந்தது.

➢. சட்டவாக்கச் சபையில் ஆளுநரின் பெரும்பான்மை பலம் இல்லாது போனமை.

➢. சுதேசிகளின் வலுவானது மேலும் அதிரித்தமை.

32. மானிங் - டிவன்சியர் யாப்பின் குறைபாடுகளைத் தருக.

➢. பொறுப்பும் அதிகாரமும் வேறாக்கப்பட்டமையால், பொறுப்புள்ளவர்களுக்கு அதிகாரம் கிடைக்கவில்லை

➢. வாக்குரிமை தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை, வாக்காளர்களாவதற்குரிய தகுதி தொடர்பில இலங்கையர் திருப்தி அடையவில்லை.

➢. தேசாதிபதிக்கு சட்ட மறுப்பாணை அதிகாரம் வழங்கப்பட்டமையானது சுதேசிகளின் வலுவினைக் குறைத்தது.

➢. இனவாரிப்பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் நிலவியமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**33. டொனமூர் அரசியல் யாப்பு எவ்வாறு உருப்பெற்றது?**

- ➢. 1927ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் திகதி டொனமூர் தலைமையிலான குழு இலங்கை வருகை.

  தலைவர் : டொனமூர் பிரபு


  அங்கத்தவர்கள் : சேர். மெதிவ் நேதன்
  சேர். ஜெப்பி பட்லர்
  பேராசிரியர் டிரமன்ட் ஹீல்ஸ்

- ➢. 1928 ஜனவரி 18ம் திகதிவரை கொழும்பு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, காலி ஆகிய இடங்களில் 34 முறை கூடி 141 பிரமுகர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து அவற்றிற்கேற்ப சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட யாப்பே டொனமூர் யாப்பாகும்.

**34. 1931ம் ஆண்டு அறிமுகமான டொனமூர் அரசியல் யாப்பின் தோற்றத்திற்கான காரணங்களைத் தருக.**

- ➢. முன்னைய யாப்பின் குறைபாடுகள்.
- ➢. அரசியல் சீர்திருத்தம் வேண்டும் என்ற இலங்கையர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகள்.
- ➢. பிரித்தானியாவில் தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தமையும், அக்கட்சி குடியேற்ற நாடுகளின் கோரிக்கைகளை பரிசீலிக்க முன் வந்தமையும்.
- ➢. இந்திய சுதந்திரப்போராட்டத்தின் தாக்கம்.

**35. டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் அங்கத்தவர் கட்டமைப்பினைத் தருக.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. டொனமூர் அரசியல் யாப்பின் சிபாரிசுகளைத் தருக.
- ➢. அரசுக்கழகம் உருவாக்குதல்.
- ➢. சர்வஜன வாக்குரிமையை வழங்கல்.
- ➢. இனவாரிப் பிரதி நிதித்துவ முறை நீக்கப்பட்டமை.
- ➢. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் விரிவாக்கப்பட்டமை.
- ➢. நிர்வாகக் குழு முறை அமைக்கப்பட்டமை.
- ➢. அரசுக்கழகத்தில் உத்தியோகத்தர்கள் மூவரை உள்வாங்குதல்.
- ➢. ஆளுநர் அதிகாரங்களை மறுசீரமைத்தல்.
- ➢. அரசுக்கழகத்தின் பதவிக்காலம் 5 வருடங்களாகும்.

37. சர்வஜன வாக்குரிமை வழங்குவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைத் தருக.
- ➢. அமுக்கத்திற்குட்பட்டுள்ள ஜனக்குழுக்களை அரசியல் ரீதியாகப் பலப்படுத்தி அவர்களுக்கு அபிவிருத்தியைப் பெற்றுக் கொடுத்தல்.
- ➢. கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையேயான சமமற்ற அபிவிருத்தியை இல்லாது செய்தல்.
- ➢. வரையறுக்கப்பட்ட வாக்குரிமையின கீழ் இடம்பெறும் உயர்குழாம் வகுப்பினரின் ஆட்சி உரிமையை அகற்றுதல்.
- ➢. அனைத்து மக்களையும் அரசியல் ரீதியான கவனத்தை ஈர்க்க வேண்டியமை.

38. சர்வ ஜன வாக்குரிமையின் சாதக, பாதக விளைவு -களைத் தருக.

சாதகமான விளைவுகள்
- ➢. சமூக பொதுநலன்கள் பாதுகாக்கப்பட்டமை.
- ➢. பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை மக்கள் பலப்படுத்தல்.
- ➢. அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்கான தளம் இடப்பட்டமை.
- ➢. வங்கிகள், நிறுவனங்கள் உருவக்கப்பட்டமை.
- ➢. மக்களிடையே அரசியல் அக்கறை ஏற்பட்டமை.
- ➢. மக்களின் நலனில் பிரதிநிதிகள் கவனம் செலுத்தியமை. (பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் சர்வஜனவாக்குரிமை பெற்ற முதல் நாடு இலங்கையாகும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாதகமான விளைவுகள்**

- ➢. பொருளாதார சமத்துவம் இல்லாத நிலையில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை சாதாரண மக்களை விட பொருளாதார பலம் மிக்கவர்களுக்கு சாதகமாக அமைந்தது.
- ➢. சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டாலும் தொடர்ந்தும் ஆட்சிப்பீடம் ஏறியவர்கள் உயர் குழாம் உறுப்பினர் ஆவார்.
- ➢. வாக்குகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை.

**39. இனவாரிப் பிரதிநிதித்துவ முறை நீக்கப்பட்டமைக்கான காரணம் யாது?**

- ➢. இனங்கள் மத்தியில் பேதங்கள் ஏற்பட வழிவகுத்தது.
- ➢. அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்கு தடையாக விளங்கியமை.

**40. நிர்வாகக்குழு முறைமையினைப் பற்றிக் குறிப்பிடுக.**

- ➢. அரசுக்கழக உறுப்பினரில் 3 காரியதரிசிகள், சபாநாயகர் தவிர்ந்த ஏனைய 57 பேரும் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் 7 குழுக்களாகப் பிரிக்கப் பட்டனர்.
- ➢. ஒவ்வொரு குழுவும் பெரும்பாலும் 8 அங்கத்தவர் - களைக் கொண்டு விளங்கும் எனினும் ஒரு குழுவில் ஆககுறைந்த 6 அங்கத்தவர்களும் கூடியது 9 ஆக இருக்க வேண்டுமென அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.
- ➢. டொனமூர் யாப்பில் நிர்வாகக் குழு பின்வருமாறு அமைந்தது :

| நிர்வாகக் குழு | தலைவர். |
|---|---|
| உள்நாட்டு அலுவல்கள் ........... | டி.பி. ஜயதிலக |
| காணி / விவசாயம் .................... | டி.எஸ். சேனநாயக |
| உள்ளூராட்சி / சுகாதாரம் ........ | சீ. பட்டுவான் துடாவ |
| தொழில் / வர்த்தகம் ............... | பி. சுந்தரம் |
| கல்வி ........................................ | C.W.W. கன்னங்கரா |
| போக்குவரத்து ........................... | M.N. மாக்கன் மாக்கர். |
| சுகாதாரம் ................................... | டி.பி. பானபொக்க |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. இந்நிர்வாகக் குழுமுறைமை எமது எதிர்கால அரசியல்வாதிகள் பொறுப்புமிக்கதோர் ஆட்சியை நடாத்துவதற்குத் தேவையான பயிற்சியையும் அனுபவத்தினையும் அளித்தது.

➢. நிர்வாகக் குழு முறைமை எமது நாடு பாராளுமன்ற ஆட்சிமுறையை நோக்கிய ஒரு பயணத்தின் ஒரு முக்கிய மைல்கல்லாக விளங்கியது.

**41. 1931டொனமூர் யாப்பின் கீழ் ஆளுநருக்கு வழங்கப் -பட்ட அதிகரங்களைத் தருக.**

➢. அரசியல் யாப்பின் பாதுகாவலராக இருந்தார்.

➢. அரசாங்க சபையைக் கலைக்கும் அதிகாரம் பெற்றிருந்தார்.

➢. அரசுக்கழகம் பிறப்பிக்கும் சட்ட மூலங்களுக்கு இறுதி அங்கீகாரம் வழங்குதல்.

➢.. விசேட நிலைகளில் சட்டவாக்கம் செய்யும் அதிகாரம்.

➢. பிரித்தானிய அரசைப் பாதிக்கும் சட்டங்களை இரத்து செய்யும் உரிமை.

➢. அரச அதிகாரிகளை நியமித்தல், இடமாற்றம் செய்தல், பதவி நீக்கம் செய்தல்.

**42. டொனமூர் அரசியல் யாப்பில் ஏற்பட்ட நன்மைகளைத் தருக.**

➢. சமூக நலன் கருதும் திட்டங்கள் உருவானமை.
உ + ம் : 1945ல் இலவச கல்வித்திட்டம்,
தொழிலாளர் நிவாரணச்சட்டம் - 1945

➢. அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றன.
உ + ம் : லங்கா சமசமாஜக்கட்சி

➢. இலங்கைக்கு சுயாட்சி தொடர்பான பயிற்சியை வழங்கியது.

➢. இலங்கையருக்கு கணிசமான அளவு அதிகாரங்களும், பொறுப்புக்களும் வழங்கியமை.

➢. மக்கள் அரசியலில் பங்கேற்பதற்குத் தூண்டப் - பட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. டொனமூர் யாப்பின் குறைபாடுகளைத் தருக.

- ➢. இலங்கையருக்கு பூரணத்துவமான பொறுப்பாட்சி வழங்கப்பட்டமை.
- ➢. சுதேச மந்திரிமார்களைத் தவிர்த்து மூன்று அரசாங்க உத்தியோகத்தர்களுக்கே முக்கிய பொறுப்புக்கள் (பாதுகாபபு, நிதி, சட்டம்) வழங்கப்பட்டிருந்தமை.
- ➢. இலங்கைக்கு 7/10 பங்கு சுதந்திரமே வழங்கப் பட்டிருந்தது.
- ➢. அமைச்சர்களுக்கு மூன்று செயலாளர்கள் தடைகளை ஏற்படுத்தியமை.
- ➢. நிர்வாகக் குழு முறைமை வீண் கால தாமதத்தை ஏற்படுத்தியது.
- ➢. கூட்டுப்பொறுப்புடைய அமைச்சரவை நிலவவில்லை.

44. 1947 சோல்பரி யாப்பின் பின்னணியைத் தருக.

- ➢. டொனமூர் யாப்பின் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் சீர்திருத்தமாக அமைந்தது.
- ➢. 1943 இன் அரச பிரகடனத்தின் மூலம் பொறுப்பாட்சி வழங்குவதற்கான அனுமதி கிடைத்தமை.
- ➢. 1944 இல் இலங்கை அமைச்சர் குழுவினர் யாப்புச்சட்ட மூலத்தை பிரித்தானிய அரசிடம் சமர்ப்பித்தமை.
- ➢. 1945ல் சோல்பரி ஆணைக்குழுவினர் யாப்பின்படி அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்தமை.
- ➢. 1947ல் சோல்பரி அரசியல் யாப்பு நடைமுறைப் -படுத்தப்பட்டது.

45. சேர். ஐவர். ஜெனிங்ஸ் என்பவர் யார்?

- ➢. இலங்கையில் சோல்பரி யாப்புக்கான சட்ட மூலம் ஒன்றை உருவாக்க அமைச்சர்களுக்கு உதவி புரிந்த பிரித்தானியர்.
- ➢. பல்கலைக்கழக உருவாக்கத்திற்கு காரணமாக இருந்தவர்.
- ➢. அரசியல் யாப்பின் சிற்பி என்னும் சிறப்புப் பெயர் கொண்ட இவர், முதலாவது உபவேந்தராகவும் பணியாற்றினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. சோல்பரி யாப்பின் அம்சங்களைத் தருக.

- ➢. ஆளுநர் எனும் பதவி நீக்கப்பட்டு "ஆளுநர் நாயகம்" எனும் பதவி தோற்றுவிக்கப்பட்டமை.
- ➢. இரு சபைகள் கொண்ட பாராளுமன்றம் தோற்றுவிக்கப்பட்டமை.
- ➢. பிரதமர் தலைமையிலான அமைச்சரவை உருவாக்கப்பட்டது.
- ➢. நீதிச்சேவை ஆணைக்குழுவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவும் உருவாக்கப்பட்டமை.

47. சோல்பரி யாப்பில் ஆளுநர் நாயகத்தின் அதிகாரங்களைத் தருக.

- ➢. பிரித்தானிய முடியின் பிரதிநிதியாக விளங்கினார்.
- ➢. பிரதமரின் ஆலோசனைப்படி செயற்படுவார்.
- ➢. நாட்டின் நிறைவேற்றுத்துறையின் தலைவராகத் தொழிற்படுவார்.
- ➢. சட்டத்துறை, நிர்வாகத்துறை, நிதித்துறை தொடர்பான அதிகாரங்கள் கொண்டிருந்தமை.
- ➢. நாம நிர்வாகியாகவே செயற்பட்டார்.

48. 1947 சோல்பரி யாப்பின் கீழ் ஆளுநர் நாயகங்களாகத தொழிற்பட்டவர்களைக் குறிப்பிடுக.

| ஆளுநர் நாயகம் | பதவிக்காலம். |
|---|---|
| ஹென்றிமங்மேசன்மூர் | 1947 - 1949 |
| சோல்பரிப் பிரபு | 1949 - 1954 |
| ஒலிவர் குணதிலக | 1954 - 1962 (முதலாவது இலங்கையரான ஆளுநர் நாயகம்) |
| வில்லியம் கோபல்லாவ | 1962 - 1972 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. சோல்பரி யாப்பின் கீழ் பாராளுமன்ற கட்டமைப்பைத் தருக.

- பாராளுமன்றம் (131)
  - பிரதிநிதிகள் சபை (101)
    - சர்வஜன வாக்குரிமையால் தெரிவு (95)
    - ஆளுநர் நாயகத்தினால் நியமனம் (06)
  - செனட் சபை (30)
    - பிரதிநிதிகள் சபையால் தெரிவு (15)
    - ஆளுநர் நாயகத்தினால் நியமனம் (15)

➢. இரு சபைகள் கொண்ட பாராளுமன்றமாக விளங்கியது.

➢. 131 அங்கத்தினர்களைக் கொண்டது.

➢. பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 5 வருடங்களாகும்.

➢. செனற்சபை (மூதவை சபை) இரண்டாம் மன்றமாக விளங்கியது. இதன் பதவிக்காலம் 6 ஆண்டுகளாகும்.

➢. சபைக்கு சபாநாயகர் தலைமை தாங்குவார்.

➢. சபைக்குப் பிரதமர் பொறுப்புடையவராக இருப்பார்.

50. சோல்பரி யாப்பில் பிரதமர் தலைமையிலான அமைச்சரவை பற்றிக் குறிப்பிடுக.

➢. நிறைவேற்று அதிகாரம் அமைச்சரவையிடம் காணப்பட்டது.

➢. ஆளுநர் நாயகம் பிரதி நிதிகள் சபையின் நம்பிக்கையைப் பெற்றவரை பிரதமராக நியமிப்பார்.

➢. பிரதமரின் ஆலோசனைப்படி அமைச்சர்கள் ஆளுநர் நாயகத்தால் நியமனம் பெறுவர்.

➢. செனற் சபையிலிருந்து இருவர் அமைச்சர்களாகத் தெரிவு செய்யப்படுவர்.

➢. பாதுகாப்பு, வெளிநாட்டு விவகார அமைச்சுகளின் பொறுப்புக்களை பிரதமர் வகிக்கும் அதேவேளை நீதி அமைச்சரும் மேலும் இன்னொரு அமைச்சரும் செனற்சபையிலிருந்து நியமனம் செய்யப்படுவர்.

➢. அமைச்சரவை கூட்டாகப் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டியிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. சோல்பரி யாப்பில் செனட் சபை உருவாக்கப் - -பட்டதன் நோக்கம்?

- சிறுபான்மையினருக்கு எதிராகக் கொண்டுவரும் சட்ட மூலங்களைத் தாமதப்படுத்துதலின் மூலம் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பளித்தல்.
- பிரதிநிதிகள் சபையால் தூர நோக்கற்ற முறையில் அவசரமாக இயற்றப்படும் சட்டங்களைத் தடுத்தல்.
- நாட்டின் உன்னதமாக அறிவாளிகள் சேவைகளை சட்டவாக்கத் துறைக்குப் பெற்றுக் கொள்ளுதல்.

52. 1947 ல் சோல்பரி யாப்பின் கீழ் தொழிற்பட்ட அமைச்சர்களை அட்டணைப்படுத்துக.

- பிரதமர் - D.S. சேனநாயகா
- நிதி அமைச்சர் - J.R. ஜெயவர்த்தனா
- நீதி அமைச்சர் - லலித் ராஜபக்ஷ
- கல்வி அமைச்சர் - E.A. நுகேவெல
- சுகாதாரம், உள்நாட்டு நிர்வாகம் - SW.R.D. பண்டாரநாயக
- விவசாயம், காணி அமைச்சு - டட்லி சேனநாயகா
- வதி, கைத்தொழில் அமைச்சர் - ஜோன். கொத்தலாவ
- தபால் - தொலைத்தொடர்பு - C. சிற்றம்பலம்
- உணவு - கூட்டுறவு - A. இரட்ணாயக்க
- உள்ளூராட்சி - E.A.P. விஜேயரட்ண
- தொழில் அமைச்சர் - T.B. ஜாயா
- அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் - A.E. குணசிங்க

53. 1947 பாராளுமன்றத்தின் பணிகளைத் தருக.

- நாட்டின் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரித்தல்.
- நாட்டுக்குத் தேவையான சட்டங்களை இயற்றுதல்.
- இயற்றப்பட்ட சட்டங்களை அமுல்படுத்தல்.
- நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. 1947 அமைச்சரவையின் பணிகளைத் தருக.

- ➢. சட்டமூலகங்களைத் தயாரித்தலும், அமுலாக்கம் செய்தலும்.
- ➢. வெளிநாட்டுக்கொள்கைகளைத் தீர்மானித்தலும், அமுலாக்கம் செய்தலும்.
- ➢. அரசாங்கக் கொள்கைகளை வகுத்தலும், அமுலாக்கம செய்தலும்.
- ➢. பாராளுமன்றத்துக்கு கூட்டாகப் பொறுப்புக் கூறல்.

55. சோல்பரி யாப்பின் நன்மைகளைத் தருக.

- ➢. பிரித்தானிய பாராளுமன்ற முறையிலான ஆட்சிமுறை அறிமுகம் செய்யப்பட்டது.
- ➢. கட்சி அரசியல் முறை வளர்ச்சியடைந்தது.
- ➢. சிறுபான்மையினரின் நலவுரிமைகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.
- ➢. அரசாங்கச் சேவை, நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டது.

56. சோல்பரி யாப்பின் குறைபாடுகளைத் தருக.

- ➢. இந்நாட்டுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்படாமை.
- ➢. பிரித்தானிய முடியினரால் ஆளுநர் நாயகம் நியமிக்கப்பட்டமை.
- ➢. செனட் சபை மூலம் எதிர்பார்த்த பயன் கிட்டாமை.
- ➢. சிறுபான்மையினரின் காப்பீடு தொடர்பான குறைபாடுகள்.

57. 1947 சோல்பரி யாப்பின் கீழ் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு ஏற்பாடு பற்றிக் குறிப்பிடுக.

- ➢. யாப்பின் 29வது பிரிவில் 2ம் சரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ➢. செனற்சபை உருவாக்கம்.
- ➢. பல அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி முறை.
- ➢. ஆறு நியமன உறுப்பினர்கள் பிரதிநிதிகள் சபைக்கு நியமனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. சோல்பரி யாப்பின் கீழ் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களையும், வெற்றி பெற்ற கட்சிகளையும் அட்டவணைப்படுத்துக.

| தேர்தல் | | வெற்றிபெற்ற கட்சிகள் |
|---|---|---|
| (i) | 1947 ஆகஸ்ட - 23 - செப் 26 | ஐக்கிய தேசியக் கட்சி |
| (ii) | 1952 மே 24 - 30 வரை | ஐக்கிய தேசியக் கட்சி |
| (iii) | 1956 ஏப்ரல 02 - 10 வரை | மக்கள் ஐக்கிய முன்னணி |
| (iv) | 1960 மார்ச் 19 | ஐக்கிய தேசியக் கட்சி |
| (v) | 1960 ஜுலை 20 | ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி |
| (vi) | 1965 மார்ச் 19 | ஐக்கிய தேசியக் கட்சி |
| (vii) | 1970மே 27 | ஐக்கிய முன்னணி |

58. 1947 சோல்பரியாப்பின் கீழ் செயற்பட்ட பிரதமர்களையும், பதவிக் காலங்களையும் அட்டவணைப்படுத்துக.

| பிரதமர் | பதவிக்காலம் | |
|---|---|---|
| | ஆரம்பம் | முடிவு |
| தேசபிதா D.S. சேனநாயக்க | 24.09.1947 | 23.03.1952 |
| டட்லி சேனநாயக்க | 26.03.1952 | 12.10.1953 |
| சேர்.ஜோன் கொத்தலாவ | 12.10.1953 | 11.04.1956 |
| S.W.R.D. பண்டார நாயக்க | 11.04.1956 | 26.09.1959 |
| கலாநிதி W. தஹநாயக்க | 26.09.1959 | 20.03.1960 |
| டட்லி சேனநாயக்க | 21.03.1960 | 21.07.1960 |
| சிறிமாவோ பண்டாரநய்க்க | 21.07.1960 | 27.03.1965 |
| டட்லி சேனநாயக்க | 27.03.1965 | 28.05.1970 |
| சிறிமாவோ பண்டாரநயக்க | 29.05.1970 | 22.05.1972 |
| சிறிமாவோ பண்டாரநயக்க | 22.05.1972 | 23.07.1977 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 06
## சுதந்திரத்தின் பின் இலங்கை

01. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் நடைமுறையில் இருந்த அரசியல் யாப்புகளைத் தருக.

யாப்பு — பிரதமர்

- ➢. சோல்பரி அரசியல் யாப்பு - 1947 டி.எஸ். சேனநாயகா (முதல்)
- ➢. குடியரசு யாப்பு - 1972 சிறிமாவோ பண்டாரநாயக்கா
- ➢. 2ம் குடியரசு யாப்பு - 1978 J.R. ஜெயவர்த்தனா

02. இலங்கையில் உருவான முக்கிய அரசியல் கட்சிகளின் பட்டியலைத் தருக.

| ஆரம்பிக்-கப் பட்ட ஆண்டு | கட்சி | கட்சித் தலைவர் |
|---|---|---|
| 1923 | தொழிலாளர் கட்சி | A.E. குணதிலகா |
| 1935 | லங்கா சமசமாஜக்கட்சி | N.M. பெரேரா |
| 1943 | இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | S.A. விக்ரமசிங்க |
| 1943 | போல்ஸ்விக் லெனின கட்சி | கொல்வின் R.D. சில்வா |
| 1946 | ஐக்கிய தேசியக்கட்சி | D.S. சேனநாயகா |
| 1949 | இலங்கை தமிழரசுக்கட்சி | S.J.V. செல்வநாயகம் |
| 1955 | ஸ்ரீ லங்காசுதந்திரக்கட்சி | S.W.R.D. பண்டாரநாயகா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. 1947 முதலாவது பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளை அட்டவணைப்படுத்துக.

| போட்டியிட்ட கட்சிகள் | வெற்றி பெற்ற ஆசனங்கள் |
|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி (UNP) | 42 |
| லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) | 10 |
| தமிழ் காங்கிரஸ் (ACTC) | 7 |
| இலங்கை இந்திய காங்கிரஸ (CIC) | 6 |
| போல்ஸ்விக் லெனின கட்சி(BLP) | 5 |
| அகில இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (CP) | 3 |
| தொழிற்கட்சி | 1 |
| ஐக்கிய இலங்கை காங்கிரஸ் (UCC) | 0 |
| சுயாட்சி கட்சி (SP) | 0 |
| சுயேட்சை | 21 |

04. 1947 பாராளுமன்றத் தேர்தலின் முக்கியத்துவங்-களைக் குறிப்பிடுக.

➢. சோல்பரி யாப்பின் கீழ் இடம் பெற்ற முதலாவது தேர்தல் ஆகும். (1947 ஆகஸ்ட் 23 - 26 வரை)

➢. ஐக்கிய தேசியக் கட்சியின் சுயேட்சை அங்கத்தவர் சிலரின் உதவியுடன் தேசபிதா D.S. சேனநாயகா அவர்கள் அரசாங்கத்தை அமைத்தார். அவரே இந்நாட்டின் முதலாவது பிரதமரானார்.

➢. கலாநிதி N.M.பெரேரா அவர்கள் (லங்கா சமசமாஜக்கட்சி) முதலாவது எதிர்க்கட்சித் தலைவரானார்.

➢. 21 சுயேட்சை உறுப்பினர்கள் வெற்றி பெற்றமை சிறப்பம்சமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. சோல்பரி யாப்பின் கீழ் இலங்கைப் பிரதமர்களை அட்டவணைப்படுத்துக.

| நியம ஒழுங்குகள் | பிரதமர்கள் | பிரதமரின் பதவிக்காலம் | |
|---|---|---|---|
| | | பதவிக்கால ஆரம்பம் | பதவி முடிந்த காலம் |
| 1வது பிரதமர் | தேசபிதா D.S. சேனநாயக்க | 24.09.1947 | 22.03.1952 |
| 2வது பிரதமர் | டட்லி சேனநாயக்க | 26.03.1952 | 12.10.1953 |
| 3வது பிரதமர் | சேர்.ஜோன் கொத்தலாவ | 12.10.1953 | 11.04.1956 |
| 4வது பிரதமர் | S.W.R.D சேனநாயக்க | 11.04.1956 | 26.09.1959 |
| 5வது பிரதமர் | கலாநிதி W. தஹநாயக்க | 26.09.1959 | 20.03.1960 |
| 6வது பிரதமர் | டட்லி சேனநாயக்க | 21.03.1960 | 21.07.1960 |
| 7வது பிரதமர் | சிறிமாவோ பண்டாரநாயக்கா | 21.07.1960 | 27.03.1965 |
| 8வது பிரதமர் | டட்லி சேனநாயக்க | 27.03.1965 | 28.05.1970 |
| 9வது பிரதமா | சிறிமாவோ பண்டாரநாயக்கா | 29.05.1970 | 22.05.1972 |
| | சிறிமாவோ பண்டாரநாயக்கா | 22.05.1972 | 23.07.1977 |

07. 1952 இரண்டாவது பொதுத்தேர்தல் முடிவுகளைத் தருக.

| போட்டியிட்ட கட்சிகள் | வெற்றி பெற்ற ஆசனங்கள் |
|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி (UNP) | 54 |
| லங்கா சுதந்திரக் கட்சி (SLFP) | 9 |
| லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) | 9 |
| கம்யூனிஸ்ட் கட்சி + நவலங்கா சமசமாஜக் கட்சி | 4 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (ACTC) | 4 |
| அகில இலங்கை தமிழரசுக்கட்சி (FP) | 2 |
| தொழிற் கட்சி (LP) | 1 |
| கூட்டரசுக் கட்சி (RP) | 0 |
| பௌத்த கூட்டரசுக் கட்சி (BRP) | 0 |
| சுயேட்சை | 12 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. இரண்டாவது பாராளுமன்றத் தேர்தலின் முக்கியத்துவங்களைத் தருக.**

- ➢. பிரதமர் D.S. சேனநாயக்காவின் மரணத்தை அடுத்து அவரது மகன் டட்லி சேனநாயகா பிரதம மந்திரியானார்.
- ➢. பிரதமர் டட்லி சேனநாயகாவின் ஆலோசனைப்படி ஆளுநர் நாயகம் சோல்பரிப்பிரபு பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு வழியமைத்தார்.
- ➢. கொள்கை முரண்பாடு காரணமாக S.W.R.D. பண்டாரநாயகா 1951ல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார்.
- ➢. 1952 பொதுத்தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி மீண்டும் அரசாங்கத்தை அமைத்ததுடன் அதன் தலைவரான டட்லி சேனநாயகா பிரதமரானார்.

**09. 1952 - 1956 காலப்பகுதியில் இலங்கையின் அரசியல் நடவடிக்கைகளைத் தருக.**

- ➢. அரிசி உட்பட உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பால் அரசுக்கு எதிராக ஹர்த்தால் ஆரம்பிக்கப்பட்டது.
- ➢. ஹர்த்தாலின் விளைவாக டட்லி சேனாநாயகா பதவி விலகினார்.
- ➢. சேர். ஜோன். கொத்தலாவல பிரதமராக நியமிக்கப்பட்டார்.
- ➢. சேர். ஜோன். கொத்தலாவல காலத்திலேயே (1955) இலங்கை ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றது. 1954ல் கொழும்புத்திட்ட மகாநாடு கூட்டப்பட்டது.

  நேரு - கொத்தலாவல ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது.
- ➢. குறிப்பிட்ட ஆட்சிக்காலத்திற்கு முன்னரே அரசாங்கம் கலைக்கப்பட்டு மூன்றாவது 1956ல் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. (1956) மூன்றாவது பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளை அட்டவணைப்படுத்தித் தருக.

| போட்டியிட்ட கட்சிகள் | வெற்றி பெற்ற ஆசனங்கள் | சதவீதம் |
|---|---|---|
| மக்கள் ஐக்கிய முன்னணி (SLFP, VLSSP, BPC) | 51 | 39.5 |
| லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) | 14 | 10.4 |
| அகில இலங்கை தமிழரசுக்கட்சி (FP) | 10 | 5.4 |
| ஐக்கிய தேசியக் கட்சி (UNP) | 8 | 27.9 |
| கம்யூனிஸ்ட் கட்சி | 3 | 4.5 |
| அகில இலங்கை தமிழ காங்கிரஸ் கட்சி (ACTC) | 1 | 0.3 |
| சுயேட்சை | 8 | 12 |

11. 1956ல் மக்கள் ஐக்கிய முன்னணியில் உள்ள மூன்று முக்கிய கட்சிகளைத் தருக.

- ➢. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி (SLFP) (S.W.R.D. பண்டாரநாயகா)
- ➢. புரட்சிவாத சமசமாஜக்கட்சி (VLSSP) (பிலிப் குணவர்த்தனா)
- ➢. பாசா பெரமுன கட்சி (BCP) W. தகநாயகா

12. 1956ம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளைத் தருக.

- ➢. உள்நாட்டுக் கைத்தொழில், விவசாய விருத்திகள் மேற்கொள்ளப்பட்டன.
- ➢. அரசாங்க சர்வதேச ரீதியாக அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்தது.
- ➢. சோஷலிச நாடுகளுடன் உறவுகள் ஏற்படுத்தியமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. சிங்கள மொழி அரச கரும மொழியாக்கப்பட்டது. (தனிச்சிங்களச் சட்டம் 15.06.1956ல்)

➢. துறைமுகம், போக்குவரத்து போன்ற தனியார் உடமைகள் தேசிய மயமாக்கப்பட்டமை.

➢. பிரித்தானிய கடற்படை, வான்படை வெளி -யேற்றப்பட்டமை.

➢. ஊழியர் சேமலாப நிதியம் உருவாக்கப்பட்டமை.

| |
|---|
| குறிபபு : <br> 26.09.1959ல் பண்டாரநாயகா கொலை செய்யப்பட W. தகநாயக்கா பிரதமரானார். பின்னர் 05.12.1959ல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.) |

**13. 1960ல் மார்ச் மாதத் தேர்தலின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடுக.**

➢. கூடுதல் ஆசனங்கள் பெற்று டட்லி சேனநாயகா பிரதமரானார்.

➢. அவருக்கு அறுதிப் பெரும்பாண்மை கிடைக்கா -மையால் அரசாங்கம் (33 நாட்கள் மாத்திரமே நீடித்தது) பிரதமரின் ஆலோசனைப்படி மகாதேசாதிபதி ஒலிவர் குணதிலகா அவர்களால் கலைக்கப்பட்டது.

➢. 1960 ஜுலை மாதம் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடைபெற்றது.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

| Class No: | 900 |
|---|---|
| Acc No | 530 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. 1960 மார்ச் மாதத் தேர்தல் முடிவுகளைத் தருக.

| போட்டியிட்ட கட்சிகள் | வெற்றி பெற்ற ஆசனங்கள் | சதவீதம் |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி (UNP) | 50 | 29.4 |
| ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (SLFP) | 46 | 20.9 |
| அகில இலங்கை தமிழரசுக்கட்சி (FP) | 15 | 5.5 |
| லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) | 10 | 10.5 |
| மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) | 10 | 10.5 |
| ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி (CDP) | 4 | 4.4 |
| கம்யூனிஸ்ட் கட்சி | 3 | 4.8 |
| ஜாதிக விமுக்தி பெரமுன (JVP) | 2 | 0.3 |
| அகில இலங்கை தமிழ காங்கிரஸ் கட்சி (ACTC) | 1 | 1.2 |
| போசத் பண்டாரநாயக்கா முன்னணி (BBP) | 1 | 0.32 |
| சமாஜவாதி மகாஜன பெரமுன (SMP) | 1 | 0.75 |
| லங்கா ஜாதிக பெரமுன (SJP) | 1 | 0.36 |
| சுயேட்சை | 7 | 9.1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. 1960 ஜுலை பொதுத்தேர்தலின் முடிவுகளைத் தருக.

| போட்டியிட்ட கட்சிகள் | வெற்றி பெற்ற ஆசனங்கள் | சதவீதம் |
|---|---|---|
| ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (SLFP) | 75 | 33.6 |
| ஐக்கிய தேசியக் கட்சி (UNP) | 30 | 37.6 |
| அகில இலங்கை தமிழரசுக்கட்சி (FP) | 16 | 7 |
| லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) | 12 | 7.4 |
| கம்யூனிஸ்ட் கட்சி | 4 | 3 |
| மகாஜன எக்சத் பெரமுன (MEP) | 3 | 3.5 |
| தேசிய விமுக்தி பெரமுன (NVP) | 1 | 0.4 |
| ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி (CDP) | 2 | 1 |
| அகில இலங்கை தமிழ காங்கிரஸ் கட்சி (ACTC) | 1 | 1.5 |
| சுயேட்சை | 7 | 6.04 |

16. 1960 ஜுலை பொதுத்தேர்தலின் முக்கியத்துவங்-களைத் தருக.

- ➢. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டு முன்னணி அமைத்து அரசாங்கத்தை அமைத்தமை.
- ➢. சிறிமாவோ பண்டாரநாயக்கா எந்தவொரு தேர்தல் தொகுதியிலும் போட்டியிடவில்லை. செனட் சபை அங்கத்தவரான சிறிமாவோ அவர்கள் நாட்டின் ஐந்தாவது பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டமை.
- ➢. 1960 ஜுலை 20 இல் உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமை பெற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. 1960 ஜூலை தேர்தலில் வெற்றி பெற்று அமைந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளைத் தருக.

➢. தேசிய மயமாக்கல் கொள்கையை முன்னெடுத்துச் சென்றமை.
➢. 1964ல் சிறிமா - சாஸ்திரி இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமை.
➢. பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டமை.
➢. இலங்கை வங்கி அரசாங்க வங்கி ஆக்கப்பட்டமை.
➢. 1961ல் மக்கள் வங்கி நிறுவப்பட்டமை.
➢. விவசாயிகளுக்கான கடன் வசதிகள் ஏற்படுத்தப்பட்டமை.
➢. பொருளாதாரச் சிக்கல், அரசியல் நெருக்கடி காரணமாக குறிப்பிடப்பட்ட காலத்திற்கு முன்னரே அரசாங்கம் கலைக்கப்பட்டது.

17. 1965ம் (6வது) ஆண்டுத தேர்தல் முடிவுகளைத் தருக.

| போட்டியிட்ட கட்சிகள் | வெற்றி பெற்ற ஆசனங்கள் | சதவீதம் |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி (UNP) | 66 | 36.3 |
| ஸ்ரீ லங்கா சுதந்திரக் கடசி (SLFP) | 41 | 30.2 |
| அகில இலங்கை தமிழரசுக்கட்சி (FP) | 14 | 5.4 |
| லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) | 10 | 7.5 |
| ஸ்ரீலங்கா சுதந்திர சோசலிசக் கட்சி (LSSP) | 5 | 3.2 |
| கம்யூனிஸ்ட் கட்சி | 4 | 2.7 |
| அகில இலங்கை தமிழ காங்கிரஸ் கட்சி (ACTC) | 3 | 2.4 |
| தேசிய விமுக்தி பெரமுன (NVP) | 1 | 0.5 |
| மகாஜன எக்சத் பெரமுன (MEP) | 1 | 2.4 |
| சுயேட்சை | 6 | 6.4 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. 1965 பொதுத்தேர்தலின் முக்கியத்துவங்களைத் தருக.

- ➢. ஐக்கியதேசியக் கட்சி, வேறு சில கட்சிகளுடன் சேர்ந்து கூட்டரசாங்கத்தை அமைத்தது.
- ➢. டட்லி சேனநாயக்கா அவர்கள் மூன்றாவது முறை பிரதமரானார்.
- ➢. 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டமை.
- ➢. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சரானார்.
- ➢. அழிக்கமுடியாத மை வாக்காளர் விரலில் பூசும் முறை அறிமுகப்படுத்தப்பட்டமை.
- ➢. முழுமையான காலம் வரை பதவிவகித்த அரசாங்கமாக இவ்வரசாங்கம் பெருமை பெற்றது எனலாம்.

19. 1970 (7வது) பாராளுமன்றத்தேர்தல் முடிவுகளைத் தருக.

| போட்டியிட்ட கட்சிகள் | வெற்றி பெற்ற ஆசனங்கள் | சதவீதம் |
|---|---|---|
| ஸ்ரீ லங்கா சுதந்திரக் கடசி (SLFP) | 91 | 36.9 |
| லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) | 19 | 8.7 |
| ஐக்கிய தேசியக் கட்சி (UNP) | 17 | 37.9 |
| அகில இலங்கை தமிழரசுக்கட்சி (FP) | 13 | 4.9 |
| கம்யூனிஸ்ட் கட்சி | 6 | 3.4 |
| அகில இலங்கை தமிழ காங்கிரஸ் கட்சி (ACTC) | 13 | 2.3 |
| மகாஜன எக்சத் பெரமுன (MEP) | 0 | 0.9 |
| சுயேட்சை | 2 | 5.0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. ஏழாவது பாராளுமன்றத்துப் பொதுத்தேர்தல் முக்கியத்துவங்களைத் தருக.

- ➢. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி "ஐக்கிய முன்னணி" அமைத்து தேர்தலில் 2/3 பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று அரசாங்கத்தை அமைத்தமை.
- ➢. திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் 2வது தடவையாகப் பிரதம மந்திரியானார்.
- ➢. ஐக்கிய தேசியக் கட்சியைத் சேர்ந்த திரு. J.R. ஜெயவர்த்தன எதிர்க்கட்சித் தலைவரானார்.

21. 1970 ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் செயற்பாடுகளைத் தருக.

- ➢. 1971ல் ஜனதா விமுக்திபெரமுனாவின் அரசுக்கு எதிரான ஆயுதப்புரட்சி முறியடிக்கப்பட்டமை.
- ➢. 1972ல் புதிய அரசியல் யாப்பு (1வது குடியரசு அரசியல் யாப்பு) அறிமுகப்படுத்தப்பட்டு நாடு குடியரசாக்கப்பட்டமை.

22. 1972 குடியரசு அரசியல் யாப்பின் பிரதான அம்சங்களைத் தருக.

- ➢. இலங்கை "ஸ்ரீ லங்கா" என அழைக்கப்பட்டமை.
- ➢. இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப் பட்டமை.
- ➢. தேசிய அரசுப்பேரவை அமைக்கப்பட்டமை.
- ➢. பெயரளவு ஜனாதிபதி அறிமுகப்படுத்தப்பட்டமை.
- ➢. பிரதமர் தலைமையிலான அமைச்சரவை அமைக்கப்பட்டமை.
- ➢. நீதிமன்றத் தொகுதி நிறுவப்பட்டமை.
- ➢. அடிப்படை மனித உரிமை பற்றியும் அறிமுகப் -படுத்தப்பட்டமை.
- ➢. அரசியல் அமைப்பு நீதிமன்றம் அறிமுகப் -படுத்தப்பட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. **1972ம் யாப்பின் படி தேசிய அரசுப் பேரவையின் செயற்பாடுகளைத் தருக.**

- ➢. நாட்டின் அதிஉயர் சட்டமன்றமாக விளங்கியமை.
- ➢. ஓரங்க சட்ட சபையாக விளங்கியமை.
- ➢. இதன் பதவிக்காலம் 6 வருடங்கள் ஆகும்.
- ➢. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை மாத்திரம் கொண்டிருந்தது.
- ➢. சட்டம் இயற்றுதல், நிதி நிர்வாகம், நிறைவேற்று நிர்வாகம் போன்ற மூன்று முக்கிய துறைகளின் அதிகாரங்களைக் கொண்டதாக விளங்கியமை.

24. **1972ம் யாப்பின்படி ஜனாதிபதியின் நிலைப் - பாட்டினைத் தருக.**

- ➢. அரசின் தலைவராகவும், ஆட்சித்துறைத் தலைவராகவும் விளங்கினார்.
- ➢. பிரதமர் உட்பட அமைச்சர்கள் உயர் அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதுவர்களை நியமனம் செய்வார்.
- ➢. நாம நிர்வாகியாகவே காணப்படுவார்
- ➢. ஜனாதிபதி பிரதமரின் ஆலோசனைப்படி நியமிக்கப்படுவார்.
- ➢. ஜனாதிபதி மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னிலையில் சத்தியப்பிரமானம் செய்து பதவி ஏற்பர்.
- ➢. ஜனாதிபதியின் பதவிக்காலம் 04 வருடங்களாகும்.
- ➢. பிரதமரின் ஆலோசனைப்படி கருமங்களை ஆற்றுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. முதலாம் குடியரசு யாப்பு (1972ல்) ஜனாதிபதி -யின் கடமைகளையும் அதிகாரங்களையும் தருக.

- பிரதமரின் ஆலோசனைப்படி தேசிய அரசுப் பேரவையை கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல்.
- தேசிய அரசுப்பேரவையின் அரச கொள்கைத் தத்துவத்தை வாசித்தல்.
- பிரதமரை நியமித்தல், ஏனைய அமைச்சர்களை நியமித்தல்.
- வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர் அதிகாரிகளை நியமித்தல்.
- முப்படைத் தளபதிகளை நியமித்தல்.
- உயர் மன்ற நீதிபதிகளை நியமித்தல்.
- குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கல்.
- அரச இலச்சனையைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.

26. பிரதமர் தலைமையிலான அமைச்சரவையைப் பற்றித் தருக.

- நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்தியது.
- அமைச்சரவையின் தலைவராக பிரதமர் விளங்கினார்.
- பிரதமரின் ஆலோசனைக்கமைய அமைச்சர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.
- அமைச்சரவை தேசியப் பேரவைக்கு கூட்டுப் பொறுப்புடையதாக விளங்கியது.
- ஜனாதிபதி பெயரளவு நிர்வாகியாக இருக்க பிரதமரே உண்மையான நிர்வாகியாக இருப்பார்.

27. 1972 யாப்பின் கீழ் அமைச்சரவையின் அதிகாரங்களைத் தருக.

- சட்டங்களைத் தயாரித்தலும் அமுலாக்கலும்.
- கொள்கைத் திட்டமிடலும் அமுலாக்கலும்.
- வரவு செலவுத்திட்டமும் அங்கீகாரங்களும்.
- பொது நிதியைப் பரிபாலனம் செய்தல்.
- அரசியல் யாப்பு சீர்திருத்தம், யாப்பு மாற்றம் போன்றவற்றை மேற்கொள்ளல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. 1972 குடியரசு யாப்பின் நீதிமன்றக் கட்டமைப்பு பற்றித் தருக.

- ➢. 1972 யாப்பின் கீழ் நிறுவப்பட்ட நீதிமன்றங்கள்
  - ✍. உச்ச நீதிமன்றம்
  - ✍. உயர் நீதிமன்றம்
  - ✍. மாவட்ட நீதிமன்றம்
  - ✍. மஜஸ்ரேட் நீதிமன்றம்
  - ✍. அரசியல் அமைப்பு நீதிமன்றம்
- ➢. 1972 யாப்பின் கீழ் பிரதான நீதிமன்றங்களாக உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் விளங்கியது.
- ➢. பிரித்தானியாப் பிரிவின் கவுன்சிலுக்கு இதுவரை நிலவிய மேன்முறையீடு செய்யும் முறைமை நீக்கப்பட்டது.
- ➢. அரசியல் அமைப்பு நீதிமன்றம் பாராளு-மன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் சட்டமூலம் அரசியல் யாப்புக்கு ஏற்புடையதா என்பதைப் பரிசீலித்தது.

29. 1977 (எட்டாவது) பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளை அட்டவணைப்படுத்துக.

| போட்டியிட்ட கட்சிகள் | வெற்றி பெற்ற ஆசனங்கள் | சதவீதம் |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி (UNP) | 140 | 50.9 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) | 18 | 6.4 |
| ஸ்ரீ லங்கா சுதந்திரக் கடசி (SLFP) | 8 | 29.7 |
| இலங்கை தொழிலாளர்காங்கிரஸ்(CWC) | 1 | 1 |
| லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) | 0 | 3.6 |
| மகாஜன எக்சத் பெரமுன (MEP) | 0 | 0.4 |
| கம்யூனிஸ்ட் கட்சி (CP) | 0 | 2 |
| சுயேட்சை | 1 | 5.6 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. 1977ம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலின் முக்கியத்துவங்களை எழுதுக.

- ➢. ஐக்கிய தேசியக்கட்சி தேசிய அரசுப்பேரவையில் 5/6 பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றது.
- ➢. அக்கட்சியின் தலைவர் J.R. ஜெயவர்த்தனா பிரதமராகப் பதவி ஏற்றார்.
- ➢. தமிழர் கூட்டணித் தலைவர் அ. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார்.
- ➢. J.R. ஜெயவர்த்தனா அவர்கள் இரண்டாவது குடியரசு யாப்பின் மூலமாக (1978 யாப்பு) நிறைவேற்று ஜனாதிபதியானார். ஆர். பிரேமதாசா அவர்கள் பிரதமர் ஆனார்.

31. 1978ஆம் ஆண்டு யாப்பின் முக்கிய அம்சங்களைத் தருக.

- ➢. இலங்கை ஸ்ரீ லங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசாக்கப்பட்டது.
- ➢. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிப் பதவி அறிமுகப்படுத்தப்பட்டது.
- ➢. விகிதாசாரத் தேர்தல் அறிமுகமானது.
- ➢. மக்கள் தீர்ப்பு அறிமுகம்.
- ➢. ஓம்புட்ஸ்மன் என்ற பதவி அறிமுகம்.
- ➢. தேசிய அரசுப்பேரவை மீண்டும் பாராளுமன்றம் ஆக்கப்பட்டது.

32. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறிப்பிடுக.

- ➢. அரசாங்கத்தின் தலைவராகவும், முப்படையின் தலைவராகவும் இருப்பர்.
- ➢. அரச கொள்கைத் தத்துவத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- ➢. பாராளுமன்றத்தை கூட்டுதல், ஒத்திவைத்தல், கலைத்தல்.
- ➢. பாராளுமன்றக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- ➢. பிரதமர் உட்பட மந்திரிகளை நியமித்தல்.
- ➢. வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர் அதிகாரிகள், ஆணைக்குழுத் தலைவர்களை நியமித்தல்.
- ➢. பிரதம நீதியரசர் உட்பட உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு மன்ற நீதிபதிகளை நியமித்தல்.

**33. 1978 நிறைவேற்று ஜனாதிபதியின் பொறுப்புக்களைத் தருக.**

- ➢. தேசிய இலச்சினை வைத்திருத்தல்
- ➢. தேசிய விழாக்களுக்குத் தலைமை தாங்குதல்.
- ➢. அரச ஆவணங்களில் ஒப்பமிடுதல்.
- ➢. சர்வதேச ரீதியாக குடியரசைப் பிரதிநிதித்துவப் படுத்தல்.
- ➢. கட்டற்ற மன்னிப்பு வழங்கல்.

**34. பாராளுமன்றத்தின் அமைப்பினைத் தருக.**

- ➢. பாராளுமன்றம் ஒற்றை மனறமாக அமைக்கப் -பட்டது.
- ➢. அங்கத்தவர்கள் தொகை 225 ஆகும். பதவிக்காலம் 5 வருடங்களாகும்.
- ➢. 196 பேர் விகிதாசாரத் தேர்தல் மூலமாகவும், 29 பேர் தேசியப்பட்டியல் மூலமாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.
- ➢. பாராளுமன்றத்துக்கு சபாநாயகர் தலைமை தாங்குவார்.
- ➢. பாராளுமன்றத்துக்குப் பொறுப்பானவர் பிரதம மந்திரியாவார்.

**35. 1978 பாராளுமன்றத்தின் செயற்பாடுகளைத் (பணிகள்) தருக.**

- ➢. நாட்டுக்குத் தேவையான சட்டங்களை இயற்றுதல்.
- ➢. ஆண்டு வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. நாட்டின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல்.
- ➢. ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணையை முன் வைத்தல்.
- ➢. அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.
- ➢. அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளுதல்.

**36. 1978 ம் ஆண்டு யாப்பின் கீழ் நீதித்துறைக் கட்டமைப்புக்களைத் தருக.**

- ➢. உச்ச நீதிமன்றம்
- ➢. மேன்முறையீட்டு நீதிமன்றம்
- ➢. உயர் நீதிமன்றம்
- ➢. மாவட்ட நீதிமன்றம்
- ➢. குடும்ப நீதிமன்றம்
- ➢. மஜஸ்ரேட் நீதிமன்றம்
- ➢. ஆரம்ப நீதிமன்றம்

**37. உச்ச நீதிமன்றத்தின் செயற்பாடுகளைத் தருக.**

- ➢. அடிப்படை உரிமை பற்றிய வழக்குகளைத் தீர்த்தல்.
- ➢. ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரித்தல்.
- ➢. தேர்தல் முறையீடுகள் தொடர்பான வழக்குகளை விசாரித்தல்.
- ➢. இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றமாகச் செயற்படுதல்.

**38. இரண்டாம் குடியரசு யாப்பில் (1978 யாப்பு) அடிப்படை மனித உரிமைகள் யாவை?**

- ➢. பேசுவதற்கும், சுதந்திரமாகக் கருத்து வெளியிடுவதற்குமான உரிமை.
- ➢. விரும்பிய தொழிலைச் செய்வதற்கான உரிமை
- ➢. விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை.
- ➢. சட்டத்தின் முன் சமமாக மதிக்கப்படும் உரிமை
- ➢. இம்சையிலிருந்து விடுபடும் உரிமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. 1978 யாப்பில் இடம்பெறும் மக்கள் தீர்ப்பு முறை பற்றி குறிப்பிடுக.

➢. ஜனாதிபதி அல்லது உயர்நீதிமன்றக் கட்டளைக்கு அமையவே மக்கள் தீர்ப்பு ஏற்பாடு செய்யப்படும்.

➢. மக்கள் தீர்ப்பில் "ஆம்", "இல்லை" என்ற முடிவை மாத்திரமே எடுக்க முடியும்.

➢. 1982ம் ஆண்டு ஜனாதிபதி தொடர்பான விடயம் மக்கள் தீர்ப்புக்கு விடப்பட்டு முடிவு செய்யப்பட்டது.

40. மக்கள் தீர்ப்பிற்கு விடப்படக் கூடிய விடயங்கள் எவை?

➢. அமைச்சரவை சிபாரிசு செய்த விடயம்.

➢. உச்ச நீதிமன்றம் குறிப்பிடும் விடயம்.

➢. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம்.

➢. ஜனாதிபதி குறிப்பிடும் விடயம்.

41. ஓம்புட்ஸ் மன் (குறைகேள் அதிகாரி) என்பவர் யார்?

➢. அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுதல், நிர்வாகத்தினால் அநீதி இழைக்கப்படுதல், முறைகேடான ஆட்சியினால் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகள் முதலானவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் அதிகாரமுடையவர்.

42. சுதந்திரத்தின் பின் நெற் பயிர்ச்செய்கையினை விருத்தி செய்ய மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தருக.

➢. உலர் வலயத்தில் விவசாயக் குடியேற்றத் திட்டங்களை அமைத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. மகாவலி அபிவிருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை.
- ➢. நெல் ஆராய்ச்சி நிலையங்கள நிறுவப்பட்டமை.
- ➢. புதிய நெல் இனங்கள் அறிமுகப்படுத்தியமை.
- ➢. 1948ல் உத்தரவாத விலைத்திட்டம் அறிமுகப் -படுத்தப்பட்டமை.
- ➢. விவசாய சேவை நிலையங்கள் ஆரம்பித்தமை.
- ➢. விவசாயிகளுக்கு அரசாங்கங்கள் வங்கிகள் மூலம் கடன் வழங்கப்பட்டமை.

**43. உலர் விவசாயக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப் -பட்டதன் நோக்கங்களைத் தருக.**

- ➢. நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரித்தல்.
- ➢. ஈரவலயத்தில் அதிகரித்து வரும் சனத்தொகை நெருக்கடிக்குத் தீர்வு காணல்.
- ➢. வேலைவாய்ப்புக்களை உருவாக்கலும், வேலை இல்லாப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணலும்.
- ➢. உலர் வலயத்தில் உள்ள பிரதான குளங்களை புனரமைப்பு செய்து நிலத்தை அபிவிருத்திக்குப் பயன்படுத்தல்.

**44. உலர்வலயப்பிரதேச விவசாயக் குடியேற்றங்களைத் தருக.**

- ➢. கல்லோயா, கந்தளாய், மின்னேரியா, பதவியா, இரணை மடு, இராஜாங்கனை, மினிப்பே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங் - -களைத தருக.

- ➢. உலர்வலய விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நிரந்தரமான நீர்வசதியைப் பெற்றுக்கொடுத்தல்.
- ➢. மின் வலுவைப் பெற்றுக் கொள்ளல்.
- ➢. புதிய குடியேற்றத் திட்டங்களை அமைத்தல்.
- ➢. விவசாயத் துறையில் வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
- ➢. வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தல்.
- ➢. நன்னீர் மீன் வளர்ப்பதை விருத்தியுறச் செய்தல்.
- ➢. புதிய நகரங்களை உருவாக்குதல்.
- ➢. நிலமற்ற விவசாயிகளுக்குக் காணிகளைப் பெற்றுக்கொடுத்து பயிர்ச்செய்கையை பரவல அடையச் செய்தல்.

46. துரித மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் உருவான நீர்த்திதேக்கங்களைக் குறிபபிடுக.

- ➢. கொத்மலை நீர்த்தேக்கம் - சுவீடன் நாட்டின் உதவி பெறல்.
  (நிலத்துக்குக் கீழ் மின் நிலையம் அமைத்தமை)
- ➢. விக்டோரியா நீர்த்தேக்கம் - பிரித்தானிய உதவி வழங்கியமை.
  (மிகக்கூடிய மின் உற்பத்தி கொண்டது)
- ➢. ரந்தெனிகல நீர்த்தேக்கம் - மேற்கு ஜேர்மனி உதவி வழங்கியமை.
  (மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் அமைந்த பாரிய நீர்த்தேக்கம்)
- ➢. மாதுறு ஓயா நீர்த்தேக்கம் - கனடா உதவி வழங்கல்.
- ➢. ரன்தம்பே, உல்ஹிட்டிய, ரத்கிந்த போன்ற நீர்த்தேககங்களையும் குறிப்பிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. **சுதந்திரத்துக்குப் பின்னர் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

- ➢. 1959 ஆம் ஆண்டு முதலாவது கைத்தொழில் பேட்டை ஏக்கலையில் உருவாக்கப்பட்டது.
- ➢. 1960 ஆம் ஆண்டு இரத்னமலையில் கைத்தொழில்ப்பேட்டை நிறுவப்பட்டது.
- ➢. 1958 - 1968 வரையான பத்தாண்டுத் திட்டத்தில் இரும்பு, உருக்கு, ஒட்டுப்பலகை, சீனி போன்ற கைத்தொழில்கள் வளர்ச்சி பெற்றன.
- ➢. 1970 - 1977 காலப்பகுதியில் பதிலீட்டுக் கைத்தொழில்கள், சிறுகைத்தொழில்கள் விருத்தியடைந்தன.
- ➢. 1978 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுதந்திர வர்த்தக வலயங்கள் நிறுவப்பட்டன. (கட்டுநாயக்கா, பியகம, கொக்கல)

48. **சுதந்திரத்தின் பின் கல்வித்துறையில் முன்னேற் -றத்திற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகளைத் தருக.**

- ➢. அரசாங்கப் பாடசாலைகளை நிறுவியமை.
- ➢. கல்வி விருத்திக்கு அதிக பணம் செலவிட்டமை.
- ➢. பாடத்திட்டத்தை விருத்தி செய்து ஆசிரிய பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- ➢. விஞ்ஞான ஆய்வு கூட, நூல் நிலைய வசதிகளை விரிவாக்கல்.
- ➢. இலவசப்பகலுணவு, வைத்தியம் போன்றவற்றை வழங்கல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. மாணவர்கள் நலன்புரி சேவைகளை மேற்கொள்ளல்.

➢. சலுகை விலையிலான போக்குவரத்துக் கட்டணங்கள் வழங்குதல்.

➢. தொழிற்கல்வி நிறுவனங்களை அமைத்தமை.

➢. பல்கலைக்கழகங்களை நிறுவியமை.

(கொழும்பு, பேராதனை, மொரட்டுவ, கட்டுபெத்த, யாழ்ப்பாணம்)

➢. திறந்த பல்கலைக்கழகம் நிறுவப்பட்டமை.

➢. மகாபொல நிதியுதவிகள் வழங்கப்பட்டமை.

**49. சுதந்திரத்திற்குப் பின் சுகாதாரத்துறையில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளைத் தருக.**

➢. தாய், சேய் நலன் நடவடிக்கைகளைப் பேணல்.

➢. நோய்த் தடுப்பூசிகள், வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தல்.

➢. கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் புதிய வைத்தியசாலைகளை நிர்மாணித்தல்.

➢. புதிய மருத்துவ பீடங்களைத் தாபித்தல்

➢. வைத்திய முகாம்களை நடாத்துதல்.

➢. 1947 - யானைக்கால் நோய் ஒழிப்புத்திட்டம், 1949 - காசநோயைத் தடுப்பதற்கான B.C.G. தடுப்பு மருந்து அறிமுகம், 1954 - குஷ்டரோக ஒழிப்புத்திட்டம் என்பன செயற்படுத்தப்பட்டன.

➢. 1962 - போலியோ சொட்டு மருந்து அறிமுகப் - படுத்தப்பட்டது.

➢. 1965 - அம்மை நோய் ஒழிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. 1969 - கற்பிணித் தாய்மாருக்கான ஏற்புவலி தடை மருந்து அறிமுகம்.

➢. 1970 - கொலரா நோய் ஒழிக்கப்பட்டது.

**50. சுதந்திரத்தின் பின் குறைந்த வருமானம் பெறும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டத்தைத் தருக.**

➢. இலவச அரிசி வழங்கல்.
➢. வீட்டு உதவிகள் வழங்கல்.
➢. உணவு முத்திரை வழங்கல்.
➢. புதிய வீடு வழங்கல்

**51. சுதந்திரத்துக்குப் பின் கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தருக.**

➢. கிராமப்புற போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தல்.

(பேருந்து சேவைகள், வீதிகளைப் புனரமைத்தல்)

➢. கிராமங்களுக்கு மின்சாரவசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

➢. தபால், தொலைபேசித் தொடர்புகளை கிராமமட்டம் வரை விரிவாக்குதல்.

➢. கூட்டுறவு, வங்கி போன்ற சேவை வழங்கும் நிறுவனங்களை ஆரம்பித்தல்.

➢. குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 01
## கணிப்பீட்டுப் பயிற்சி
### இலங்கையின் கரையோரப்பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படுதல்.

➢. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. கண்டி இராசதானியுடன் நீண்டகாலம் நட்புறவு கொண்ட ஐரோப்பியர்,
(1) ஆங்கிலேயர் (2) ஒல்லாந்தர்
(3) போர்த்துக்கேயர் (4) பிரான்சியர்

02. ஒல்லாந்தரால் இலங்கையில் இறுதியாகக் கைப்பற்றிய கோட்டை,
(1) காலி (2) மட்டக்களப்பு
(3) யாழ்ப்பாணம் (4) திருகோணமலை

03. ஒல்லாந்தரால் "திரிசிங்களாதீஸ்வர" எனக்குறிப்பிடப் -பட்டுள்ள கண்டி மன்னன்,
(1) 2ம் இராஜசிங்கன்
(2) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
(3) இராஜாதி இராஜசிங்கன்
(4) 1ம் விமலதர்ம சூரியன்

04. இலங்கையில் முதன் முதலில் அச்சுக் கூடம் அமைத்த ஐரோப்பியர்,
(1) போர்த்துக்கேயர் (2) ஒல்லாந்தர்
(3) ஆங்கிலேயர் (4) பிரான்சியர்

05. ஒல்லாந்தரின் மகாபத்தே திணைக்களம் எவ் வர்த்தகத்துக்குப் பொறுப்பானது?
(1) கறுவா (2) தென்னை
(3) தேயிலை (4) யானை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. ஒல்லாந்தர் உச்ச இலாபம் பெற்ற வர்த்தகப் பொருள்?
(1) முத்து (2) ஏலம் (3) பாக்கு (4) கறுவா

07. "இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போல்" என்ற உவமைத் தொடருக்கு ஆளாகிய மன்னன்,
(1) முதலாம் விமலதர்ம சூரியன்
(2) 2ம் இராஜசிங்கன்
(3) இராஜாதி ஜராஜசிங்கன்
(4) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

08. இலங்கையில் பறங்கியர் என்ற இனத்தின் தோற்றுவாயாக விளங்கியவர்?
(1) ஒல்லாந்தர் (2) ஆங்கிலேயர்
(3) பிரித்தானியர் (4) பிரான்சியர்

09. கியூ கடிதத்தை ஏற்க மறுத்த இலங்கையிலிருந்த ஒல்லந்த ஆளுநர்?
(1) பன் எங்கல் பக் (2) வில்லெம்பெல்க்
(3) வான் எக் (4) சிபெல் த வார்ட்

10. ஒல்லாந்தரின் கீழைத்தேச தலைமையகம் அமைந்துள்ள இடம்?
(1) கோவா (2) கள்ளிக்கோட்டை
(2) சென்னை (4) பத்தேவியா

11. இலங்கைகது வருகை தந்த முதலாவது ஒல்லாந்தத் தூதுவன்,
(1) கொர்னேலியஸ் டெகல்
(2) கலன் அல்ப்ஸ்
(3) ஜெராட் ஹல்பட்
(4) ஜோரிஸ் வான் ஸ்பில் பேர்ஜன்

12. ஸ்ரீ வீரபராக்கிரம மன்னனது மனைவி இறந்தது தொடர்பாக அனுதாபத்தைத் தெரிவிப்பதற்காக மன்னனைச் சந்தித்த ஒல்லாந்த தூதுவன் யார்?
(1) கொர்னேலியஸ் டெகல் (2) கலன் அல்ப்ஸ்
(3) ஜெராட் ஹல்பட் (4) ஸ்பில் பேர்ஜன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஒல்லாந்தரின் கண்டி மீதான ஆக்கிரமிப்பின் போது கீர்த்தி ஸ்ரீ இராசிங்கன் மறைந்திருந்த இடம் எது?
(1) மெதமஹ நுவர (2) போகம்பரை
(3) ஹங்குரன்கெத்த (4) அளுத்கம

14. முதலாம் விமலதர்ம சூரிய மன்னனது மரபின் இறுதி மன்னன்
(1) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்
(2) இராஜாதி இராஜசிங்கன்
(3) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்
(4) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

15. ஒல்லாந்த ஆளுநரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்ட இலங்கையின் நிர்வாகப் பகுதி எது?
(1) கொழும்புக் கொமாண்டரி
(2) காலிக் கொமாண்டரி
(3) யாழ்ப்பாணக் கொமாண்டரி
(4) மட்டக்களப்புக் கொமாண்டரி

16. ஒல்லாந்த நீதிமன்றத் தொகுதியின் உயர் நீதிமன்றமாக விளங்குவது?
(1) சிவில் ராத் (2) பிஸ்கல்
(3) லான்ராத் (4) ராத்வான் ஜஸ்டிஸ்ட்

17. மட்டக்களப்பு துறைமுகத்தினூடாக வந்து முதலாம் விமலதர்ம சூரியனைச் சந்தித்த ஐரோப்பிய இனத்தவா யார்?
(1) ஒல்லாந்தர் (2) பிரித்தானியர்
(3) போர்த்துக்கேயர் (4) பிரான்சியர்

18. ஒல்லாந்தருடன் வெஸ்ரவோல்ட் உடன்படிக்கை -யினை மேற்கொண்ட கண்டி மன்னன்
(1) 1ம் இராஜசிங்கன்
(2) 2ம் இராஜசிங்கன்
(3) 1ம் விமலதர்ம சூரியன்
(4) 2ம விமலதர்ம சூரியன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

19. கி.பி. 1638 உடன்படிக்கையை மேற்கொண்ட ஒல்லாந்த ஆளுநர்,

(1) பன் எங்கல் பக் (2) வில்லெம்பெல்க்
(3) வெஸ்ரர் வோல்ட் (4) ஸ்பில் பேர்ஜன்

20. 1602ம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த ஒல்லாந்த தூதுவர் யார்?

(1) கியூபொயிட் (2) ஸ்பில்பேர்ஜன்
(3) வில்லெம்பெல்க் (4) ரொபர்ட் அண்ட்றூஸ்

21. கி.பி. 1602ல் ஒல்லாந்தருடன் தொடர்பினைப் பேணிய கண்டி மன்னன்?

(1) 1ம் இராஜசிங்கன் (2) 1ம் விமலதர்ம சூரியன்
(3) 2ம் விமலதர்ம சூரியன் (4) செனரத்

22. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - இலங்கையில் சீயம் நிக்காய பௌத்த பிரிவை ஆரம்பித்தமை.
B - சரணங்க தேரரின் ஒத்துழைப்புடன் பௌத்த சமயத்தைப் புனருத்தாரணம் செய்தமை.
C - ஒல்லாந்தருடன் பல பரிசுப் பொருட்ளைப் பரிமாறி நட்புறவுடன் தொடர்பு கொண்டவர்

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனுடன் தொடர்புபட்டவை,

(1) A, B, C (2) A, C (3) B, C (4) A, B

23. இலங்கையில் ஒல்லாந்தரினது ஆட்சிக்காலமாகக் குறிப்பிடப்படுவது?

(1) 1602 - 1796 (2) 1658 - 1796
(3) 1505 - 1658 (4) 1796 - 1948

24. ஒல்லாந்தர் ஸ்பானிய துறைமுகத்திற்கு வருவதைத் தடை செய்த மன்னன்?

(1) 1ம் பிலிப் (2) 2ம் பிலிப்
(3) வில்லியம் ஹேறால்டர் (4) வான் கோயன்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. குண்டசாலை இளவரசர் என அழைக்கப்பட்ட மன்னன் யார்?
(1) 1ம் விமலதர்ம சூரியன்
(2) இராஜாதி இராஜசிங்கன்
(3) வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்
(4) செனரத்

26. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் காலத்தில் வீழ்ச்சியுற்ற பௌத்த சமயம் எழுச்சி பெறச்செய்ய உதவிய தேரர்?
(1) வெலிவிற்ற சரணங்கரதேரர்
(2) சிறிசுமங்கல தேரர்
(3) உபாலிதேரர்
(4) தம்மராம தேரர்

27. 1766ம் ஆண்டு ஆளுநராக செயற்பட்டு கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுடன் இலங்கை வரலாற்றில் மிகக் கேவலமானதென அழைக்கப்பட்ட ஒப்பந்தம் மேற்கொண்டவர்?
(1) பேரவன் வான் எக் (2) விலெம்பெல்க்
(3) பன் எங்கல்பெக் (4) கலன் அல்ப்ஸ்

28. பிஸ்கல் நீதிமன்றம் என அழைக்கப்பட்ட நீதிமன்றம்?
(1) காணி நீதிமன்றம் (2) சிவில் நீதிமன்றம்
(3) கிராம நீதிமன்றம் (4) மேல்நீதிமன்றம்

29. வர்த்தகப் பிரிவிலிருந்த சிரேஷ்ட வர்த்தகர்.
(1) ஒபர் ஹீப்ட் ஏமன் (2) கம்பித்தான்
(3) ஹீல்ட்மன் (4) கவர்னர்

30. ஒல்லாந்தர் கட்டடக் கலையை நினைவூட்டும் கொழும்பிலுள்ள தேவாலயம்?
(1) வுல்பென்டல் தேவாலயம்
(2) கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம்
(3) சென் பீற்றர் தேவாலயம்
(4) வத்தளை சென் மைக்கல் தேவாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிப்பீட்டுப் பயிற்சி

## இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி

➤. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. 1762ல் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனைச் சந்தித்த முதலாவது ஆங்கிலத் தூதுவன்.
    (1) ஜோன் பைபஸ் (2) ஹியுபொயிட்
    (3) றொபர்ட் அன்ட்றூஸ் (4) ஜோன் டொயிலி

02. பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தைக் கைப்பற்றிய போது கண்டி இராச்சிய மன்னனாக இருந்தவன்,
    (1) வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்
    (2) இராஜாதி இராஜசிங்கன்
    (3) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
    (4) ஸ்ரீ விக்கிர இராஜசிங்கன்

03. 1798ல் நியமனம் பெற்ற ஆங்கிலேயே முதலாவது ஆளுநர் யார்?
    (1) றொறிங்ரன் (2) தோமஸ்மெயிட்லன்ட்
    (3) பிரட்ரிக் நோத் (4) றொபர்ட் பிரவுன்றிக்

04. ஆங்கிலேயர் இலங்கைக்கு வரக்காரணமான துறைமுகம் எது?
    (1) திருகோணமலை (2) காலி
    (3) கற்பிட்டி (4) மட்டக்களப்பு

05. பிரித்தானியருக்கு எதிராக இடம்பெற்ற (1797 இன்) சென்னை கலகத்துக்கான காரணத்தை ஆராய வந்த குழுவினர்?
    (1) கோல்புறுக் (2) மியூரன்
    (3) மோர்கன் (4) மனிங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. 1818ம் முதலாவது சுதந்திரப் போராட்டத்தின் தலைவன்,
(1) தினேஸ்
(2) கொங்கலகொட பண்டா
(3) மொனரவில கெப்பட்டி பொல திசாவ
(4) கடஹு பொல தேரர்

07. 1848 இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தின் தலைவர் அல்லாதவர்,
(1) வீரபுரன் அப்பு
(2) கொங்கலகொட பண்டா
(3) பூட்டாவேரட்டேரால
(4) டிங்கிரால

08. 1848 சுதந்திரப்போராட்டததிற்கான அரசியல் சீர்திருத்தம் எது?
(1) கோல்புறுக் (2) டொனமூர்
(3) மனிங் (4) மனிங் - டிவென்சியர்

09. கண்டி இராச்சியத்துடன் தந்திரமான நட்புறவுக் கொள்கையைக் கடைப்பிடித்த ஆளுநர்.
(1) ரொறிங்டன்
(2) பிரட்ரிக் நோத்
(3) தோமஸ் மெயிட்லண்ட
(4) றொபர்ட் பிரவுண்ட்ரிக்

10. 1824ல் கன்னொருவவில் கோப்பித் தோட்டம் அமைத்த ஆளுநர்,
(1) ஹென்றிவாட் (2) ஜோர்ஜ் பேர்ட்
(3) ஹேர்குலிஸ் றொபின்சன் (4) எட்வேட் பாண்ஸ்

11. கண்டி (1815) ஒப்பந்தத்தில் பிரித்தானிய முடி சார்பாக கைச்சாத்திட்டவர்?
(1) ஜோன் டொயிலி (2) ஜோன்டெவி
(3) றொபர்ட் பிறவுன்றிக் (4) கிரகெரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. கண்டி (மகுல்மடுவ) அரச சபையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட முன்னர் ஏற்பட்டிருந்த ஆங்கிலக் கொடியைக் கீழிறக்கச் செய்த பௌத்த பிக்கு யார்?
(1) வெலிவிட்ட சரணங்கதேரர்
(2) வாரியப்பொல ஸ்ரீ சுமங்கலதேரர்
(3) மீக்கெட்டுவத்த குணானந்த தேரர்
(4) வஸ்கடுவ ஸ்ரீ சுபுதி தேரர்

13. கி.பி. 1798 - 1802 காலப்பகுதியில் இலங்கையில் நிலவிய ஆட்சிமுறை,
(1) இரட்டை ஆட்சிமுறை
(2) கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி ஆட்சி
(3) சென்னை ஆட்சி
(4) முடிக்குரிய ஆட்சி

14. நிரல் "A" யில் உள்ளவற்றை நிரல் "B" யில் உள்ளவற்றுடன் தொடர்புபடுத்தும் பேது கிடைக்கும் சரியான விடைத் தொகுதி?

| | நிரல் "A" | நிரல் "B" |
|---|---|---|
| 1. | இராஜகாரிய முறை ஒழிப்பு | A. வெஸ்ட்றிஜ்வே |
| 2. | நீர்ப்பாசனத் திணைக்களம் | B. றொபர்ட் பிரவுண்றிக |
| 3. | 1848 சுதந்திரப்போராட்டம் | C. கோல்புறூக் |
| 4. | 1818 சுதந்திரப்போராட்டம் | D. ரொறிங்டன் |

(1) C, D, A, B (2) C, A, D, B
(3) C, A, B, D (4) A, C, D, B

15. மலேரியா நோய்க்கான குயினைன் தயாரிக்க அறிமுகமான பெருந்தோட்டப் பயிர்,
(1) கோப்பி (2) தேயிலை
(3) இறப்பர் (4) சிங்கோனா

16. இலங்கை பிரித்தானியரின் முடிக்குரிய குடியேற்ற நாடாகிய ஆண்டு,
(1) 1796 (2) 1948 (3) 1815 (4) 1802


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. கி.பி. 1797 கரையோரக் கிளர்ச்சிக்குக் காரணமாகிய பிரதான வரி யாது?

(1) தென்னை வரி (2) உப்பு வரி

(3) தோணி வரி (4) வண்டி வரி

18. ஊவா வெல்லஸ கிளர்ச்சியின் போது கொல்லப்பட்ட உதவி அரசாங்க அதிபர்,

(1) பாபட் (2) டக்ளஸ் வில்சன்

(3) ஐவர் ஜெனிங்ஸ் (4) தோமஸ்மாஸ்

19. 1818ம் ஆண்டு கிளர்ச்சியின் போது "உங்களது ஆயுதங்களால் உங்களைத தாக்க மாட்டேன்" எனக் கூறியவர்,

(1) பிலிமத்தலாவ (2) வீரபுரன் அப்பு

(3) கெப்பட்டிப்பொல (4) மடுகல்ல

20. பிரித்தானியரின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் யார்?

(1) ஜோன்டொயிலி (2) ஜோன் டேவி

(3) அண்ட்றூஸ் (4) டக்ளஸ் வில்சன்

21. கீர்த்தி ஶ்ரீ இராஜசிங்கன் காலத்தில் கண்டிக்கு வந்த பிரித்தானிய தூதுவர்,

(1) ஜோன் பைபஸ் (2) ஜோன் டொயிலி

(3) கியுபொயிட் (4) றொபர்ட் அன்ட்றூஸ்

22. பிரித்தானியர் இலங்கையில் கைப்பற்றிய முதலாவது கோட்டை,

(1) காலிக் கோட்டை

(2) திருகோணமலை (பிரட்ரிக் கோட்டை)

(3) மன்னார்க் கோட்டை

(4) யாழ்ப்பாணக்கோட்டை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. 1818 கிளர்ச்சியை அடக்குவதற்காக பிரித்தானியர் கைக்கொண்ட நிலம் சார் கொள்கை.

(1) பாழ் நிலக்கொள்கை

(2) நிலச்சட்டக் கொள்கை

(3) தரிசு நிலக்கொள்கை

(4) நிலம் சுவீகரிப்புக்கொள்கை

24. 1803ல் கண்டி மீது படையெடுத்த ஆளுநர்,

(1) பிரட்ரிக் நோத் (2) றொறிங்டன்

(3) மக்டோவல் (4) றொபர்ட் பிரவுண்றிக்

25. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனை (கண்ணுசாமி) பதவியில் அமர்த்திய மகா அதிகாரம் யார்?

(1) எகலப்பொல (2) மொல்லிகொட

(3) பிலிமத்தலாவை (4) எக்னலிகொட

26. 1848ம் ஆண்டு கொங்கல கொட பண்டா முடி சூடிய பெயர் யாது?

(1) ஸ்ரீ சர்வ சித்தி இராஜசிங்க

(2) ஸ்ரீ வீரபராக்கிரம பாகு

(3) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கபாகு

(4) சர்வ சித்தி விக்கிரம

27. இரண்டாம் (1848) சுதந்திரப் போராட்டம் பரவலடைந்த இடங்கள்,

(1) மாத்தளை, குருநாகல், நுவரகலாவிய

(2) வெல்லஸ, ஹரிஸ்பத்துவ, தும்பறை

(3) மாத்தளை, ஏழுகோறளை, சப்பிரகமுக

(4) குருநாகல், நுவரகலாவிய, ஹேவாஹெட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. நிரல் "A" யில் உள்ளவற்றுடன் நிரல் "B" யில் உள்ளவற்றை தொடர்புபடுத்திப் பெறும் சரியான விடைத்தொகுதி

| **நிரல் "A"** | **நிரல் "B"** |
|---|---|
| 1. லங்கோபகார அச்சகம் (1862) | A. மெதமகநுவர |
| 2. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் | B. மகுல்மடுவ மாவட்டம் |
| 3. கண்டி ஒப்பந்தம் (1815) | C. முத்துச்சாமி |
| 4. மேஜர் டேவி | D. சுமணதிஸ்ஸதேரர். |

(1) A, B, D, C (2) B, A, C, D
(3) D, A, B, C (4) D, A, C, B

29. இலங்கையில் முதன்முதலில் தேயிலையை அறிமுகப்படுத்தியவர்.
(1) எட்வேட் பாண்ஸ் (2) ஜோஜ்பேர்ட்
(3) ஜேம்ஸ் ரெயிலர் (4) றிட்ஜ்வே

30. கியூ கடிதம் எழுதிய போது இலங்கையிலிருந்த ஒல்லாந்த ஆளுநர்?
(1) விலெம்பெல்க் (2) பன் எங்கல்பெக்
(3) லோரன்ஸ் பீல் (4) வான் கோயன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 03
## கணிப்பீட்டுப் பயிற்சி
### இலங்கையின் சமய, தேசிய மறுமலர்ச்சி

➢. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. கொழும்பு பௌத்த இளைஞர் சங்கத்தை அமைப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டவர்,
(1) N.M. பெரேரா (2) அநகாரிக தர்மபால
(3) டி.பி. ஜயதிலக (4) ஜோன். த. சில்வா

02. இந்தியாவில் வழிபாட்டு இடங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டவர்?
(1) வலிசிங்க ஹரிச்சந்திர
(2) அநகாரிக தர்மபால
(3) மீகெட்டுவத்த குணானந்த தேரர்
(4) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்

03. ஐம்பெரும் விவாதங்களில் பிரசித்தி பெற்ற வாதம்.
(1) பத்தேகம (2) வராகொட
(3) பாணந்துறை (4) கம்பளை

04. பௌத்தர்களுக்கென 1865ல் காலியில் லங்கோபகார அச்சகத்தை முதலில் நிறுவியவர்?
(1) ஸ்ரீ சுமங்கல தேரர்
(2) ஸ்ரீ தர்மலேகதேரர்
(3) குணானந்த தேரர்
(4) சுமண திஸ்ஸ தேரர்

05. வடபகுதியில் சமயம் பரப்புகையில் ஈடுபட்ட மிஷனறி அமைப்பு,
(1) லண்டன் மிஷனறி (2) பெப்டிஸ்ட் மிஷனறி
(3) சேர்ச் மிஷனறி (4) அமெரிக்கன் மிஷனறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. இரத்மலான பரமதம்ம சித்திய பிரிவெனவில் கல்வி போதித்த பௌத்த துறவி,
   (1) மீகெட்டுவத்த குணானந்த தேரர்
   (2) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
   (3) வலானே சித்தாத தேரர்
   (4) ஸ்ரீ தர்மலோக தேரர்

07. வெசாக் தினத்தை விடுமுறை தினமாக ஆங்கிலேய -ரிடமிருந்து பெற்றுக்கொடுக்க முன்னின்று உழைத்தவர்.
   (1) அநகாரிக தர்மபால
   (2) ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட்
   (3) பியதாஸ சிறிசேன
   (4) ஆதர். வி. தியெஸ்

08. "சிங்கள பௌத்தயா" என்ற பத்திரிகையை வெளியீடு செய்த சீர்திருத்தவாதி.
   (1) பியதாஸ சிறிசேன
   (2) ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட்
   (3) வலிசிங்க ஹரிச்சந்திர
   (4) அநகாரிக தர்மபால

09. பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவியவர்?
   (1) ஆறுமுகநாவலர்
   (2) சேர்.பொன். அருணாச்சலம்
   (3) சேர்.பொன். இராமநாதன்.
   (4) குமாரசாமிப்புலவர்.

10. ஞானதீபம், முஸ்லீம் நேசன் பத்திரிகைகள் மூலம் கலாசாரத்தை மேம்படுத்தியவர்?
   (1) நாவலர்   (2) M.C. சித்திலெப்பை
   (3) டி.பி. ஜயா   (4) சேர்.பொன். இராமநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. நிரல் "A" யில் சமய மறுமலர்ச்சித் தலைவர்களும், நிரல் "B" யில் அவர்களது பணிகளும் தரப் -பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தினால் பெறப்படும் விடை ஒழுங்கைத் தெரிவு செய்க.

| நிரல் "A" | | நிரல் "B" |
|---|---|---|
| 1. மீக்கெட்டுவத்தை குணானந்த தேரர். | (A) | சைவ பரிபாலன சபை |
| 2. ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட் | (B) | மத்ரஸா |
| 3. அறிஞர் சித்திலெப்பை | (C) | பாணந்துறை விவாதம் |
| 4. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் | (D) | பரம விஞ்ஞானார்த்த சங்கம். |

(1) CDBA (2) DABC (3) CBDA (4) CDAB

12. முதலாவதுடன் இரண்டாவது தொடர்புபடாத விடை எது?
(1) சேர்ச் மிஷனறி - மாசிக் தேசிக்க வெளியீடு
(2) சமய பூஸ்திகா - லங்கா நிதானய வெளியீடு
(3) பப்டிஸ்ட் மிஷனறி - உரகல வெளியீடு
(4) சைவபரிபாலன சபை - உதய தாரகை

13. பௌத்த கதனோபாய கதனய எனும் வினாவிடை நூலை எழுதியவர்.
(1) ஹெலனா பலவஸ்கி அம்மையார்
(2) ஹென்றி ஸ்டீல்ஒல்கொட்
(3) ஜோன்.த.சில்வா
(4) அநகாரிக தர்மபால

14. பிரித்தானியர் பரப்பிய மதம்.
(1) உரோமன் கத்தோலிக்கம்
(2) புரட்டாஸ்தாந்து
(3) அங்கிலிக்கன் கிறிஸ்தவம்
(4) கத்தோலிக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. பௌத்த மத விருத்திக்காக பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகள் நிரல் "A" யிலும் பிரசுரித்தவர்கள் பெயர் நிரல் "B" யிலும் தரப்பட்டுள்ளன. இணைத்துப் பெறப்படும் சரியான விடை ஒழுங்கினைத் தெரிவு செய்க.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. லக்மிபஹறன | (A) பியதாஸ சிறிசேன |
| 2. சரசவிசந்தரெஸ | (B) அநகாரிகதர்மபால |
| 3. சிங்கள பௌத்தயா | (C) ஹென்றிஸ்ரீல் ஒல்கொட் |
| 4. சிங்கள ஜாதிய | (D) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் |

(1) CDBA (2) CDAB (3) DCBA (4) DCAB

16. அமெரிக்கரான ஹென்றி ஸ்டீல்ஒல்கொட் பாணந்துறை விவாதம் மூலம் கவரப்பட்டு இலங்கை வந்து பௌத்தத்தை தழுவிக் கொண்ட பிரிவெனா,
(1) காலி வெலிகந்த விஜயானந்த பிரிவெனா
(2) மாளிகாகந்தை வித்தியோதயா பிரிவெனா
(3) இரத்மலானை பரமதர்ம தேசிய பிரிவெனா
(4) பேலியகொட வித்தியலங்கார பிரிவெனா

17. ஹென்றி ஸ்டீல்ஒல்கொட் அவர்களால் ஆரம்பிக்கப் -படாத பாடசாலை?
(1) காலி சங்கமித்தா பெண்கள் கல்லூரி
(2) நாலாந்தக் கல்லூரி
(3) கொழும்பு ஆனாந்தா கல்லூரி
(௪) கொழும்பு ஆனந்த பாலிகா கல்லூரி

18. புகழ்பெற்ற பௌத்த நாடகங்களை எழுதிப் புகழ் பெற்றவர்?
(1) ஆதர். வி. தியெஸ் (2) ஜோன். த. சில்வா
(3) பியதஸ சிறிசேன (4) டி.பி. ஜாயா

19. பேர்ஸிகால் அடிகளாருடன் இணைந்து பைபிளைத் தமிழ் பெயர்த்தவர்?
(1) ஆறுமுக நாவலர் (2) சேர்.பொன். இராமநாதன்
(3) M.C. சித்திலெவ்வை (4) டி.பி.ஜாயா

20. டி.பி. ஜாயா அவர்கள் கட்டுரை எழுதிய சஞ்சிகை.
(1) முஸ்லிம் நேசன் (2) ஞான தீபம்
(3) சிலோன் முஸ்லீம் நிவ்யூ (4) உதய பானு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 04
## கணிப்பீட்டுப் பயிற்சி
## இந்திய சுதந்திரப் போராட்டம்

➢. **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. இந்தியாவில் பிரான்சியர் ஆதிக்கம் பரவிய பிரதேசங்கள்.
   (1) பாண்டிச்சேரி, குஜராத்
   (2) அகமதாபாத், ஆக்ரா
   (3) கோவா, காரைக்கால்
   (4) சந்திர நாகூர், பாண்டிச்சேரி

02. மொகலாயப் பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கிய ஆட்சிக் காலம் பின்வருவோரில் யாருடையது?
   (1) பாபர்
   (2) மகா அக்பர்
   (3) ஔரங்கசீப்
   (4) ஜஹாங்சீர்

03. ஜாலியன் வாலா பாக் படுகொலை இடம்பெற்ற இடம்,
   (1) வங்காளம்
   (2) ஆக்ரா
   (3) நாக்பூர்
   (4) அகமதா பாத்

04.



அருகில் குறிப்பிடப்பட்ட நபரே ஆங்கிலப் படையதிகாரி மீது துப்பாக்கிச்சூட்டினை மேற் கொண்டதனூடாக சிப்பாய் கலகத்திற்கு காரணமாக விளங்கினார். அவர் யார்?
   (1) மங்கல் பாண்டே
   (2) முகமது அலிஜின்னா
   (3) பானர்ஜி
   (4) தடாபாய் நவ்ரோஜி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக அகிம்சை வழிப்போராட்டத்தை மேற்கொண்ட இந்திய தேச விடுதலையாளர்?
(1) தடாபாய் நவ்ரோஜி
(2) பாலகங்காதர திலகர்
(3) சுரேந்திரநாத் பெனர்ஜி
(4) மகாத்மாகாந்தி

06. இந்திய தேசிய சங்கத்தின் தலைவராக இருமுறை தெரிவானவர்?
(1) பால கங்காதர திலகர்
(2) தடாபாய் நவ்ரோஜி
(3) சுரேந்திரநாத் பெனர்ஜி
(4) முகம்மது அலி ஜின்னா

07. இந்தியாவின் முதலாவது பிரதமரான பெருமை கொண்டவர்,
(1) இந்திரா காந்தி (2) நரசிம்மராவ்
(3) வாஜ்பாய் (4) ஜவஹர்லால் நேரு

08. இந்திய தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர்,
(1) C.R. தாஸ் (2) பால கங்காதர திலகர்
(3) W.C. பெனர்ஜி (4) தடாபாய் நவ்ரோஜி

09. இந்திய சுதந்திரப்போராட்டத்தில் மகாத்மா காந்தியின் தீவிர எதிர்ப்புப் போராட்டம் எது?
(1) சத்தியாக் கிரகம்
(2) சிவில் சட்டத்தை மீறல்
(3) வெள்ளையனே வெளியேறு
(4) பாதயாத்திரை

10. இந்தியாவில் அகிம்சா வாதத்தின் மூலம் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்தவர்?
(1) C.R. தாஸ் (2) W.C. பெனர்ஜி
(3) காந்தி (4) நேரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. "சுயாட்சி எனது பிறப்புரிமை" எனக்கூறிய இந்திய சுதந்திர இயக்கத் தலைவர்?
(1) W.C. பானர்ஜி (2) பால கங்காதர திலகர்
(3) பிபின் சந்திரபோஸ் (4) லால் லஜ்பதிராய்

12. 19ம் நூற்றாண்டுக்கால இந்தியாவில் சமய மலர்ச்சிக்கு வித்திட்ட பெரியார்?
(1) லட்சுமிபாய் (2) பகதூர்ஷா
(3) தயானந்த சரஸ்வதி (4) ராம் மோகன் ராய்

13. இன்டிகோ செடி பயிரிடும் விவசாயிகளின் துயரங்களைத் தீர்ப்பதற்காக மகாத்மா காந்தியினால் முன்னெடுக்கப்பட்ட இயக்கம்,
(1) கேடா இயக்கம்
(2) சாம்ராட் இயக்கம்
(3) ஒத்துழையாமை இயக்கம்
(4) தண்டி யாத்திரை

14. போர்த்துக்கேய இளவரசி கத்தரினை திருமணம் செய்து கொண்ட ஆங்கிலேயன்,
(1) 2ம் சாள்ஸ் (2) 2ம் வில்லியம்
(3) 3ம் ஜோர்ஜ் (4) 5ம் சாள்ஸ்

15. இந்தியாவின் இறுதி ஆங்கிலேய ஆளுநரும், இந்தியர்களுக்கு அதிகாரங்களை வழங்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்ட நபர்.
(1) சார்லஸ் (2) கெட்ரிச் பிரபு
(3) மவுன்ட் பேட்டன் பிரபு (4) பேர்ட் கிரிப்ஸ்

16. மகாத்மா காந்தி இந்திய சுதந்திரப்போராட்ட தலைவராக கடமையாற்றிய காலப்பகுதி.
(1) 1902 - 1947 (2) 1924 - 1936
(3) 1920 - 1947 (4) 1936 - 1948



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. நிரல் "A" யில் ஆண்டுகளும் நிரல் "B" யில் இடம்பெற்ற நிகழ்வுகள் / போராட்டங்களும் தரப்பட்டுள்ளன. அவற்றினை இணைத்துப் பெறப்படும் சரியான விடை ஒழுங்கினைத் தெரிவு செய்க.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. 1921 | (A) சிவில் சட்டத்தை மீறும் இயக்கம் முன்னெடுக்கப்பட்டது. |
| 2. 1928 | (B) ஒத்துழையாமை இயக்கம் நடைமுறைப்பட்டது. |
| 3. 1930 | (C) வெள்ளையனே வெளியேறு எனும் சத்தியாக்கிரகப் போராட்டம் இடம் பெற்றது. |
| 4. 1942 | (D) சைமன் ஆணைக்குழுவுக்கு எதிராக ஹர்த்தால் இடம் பெற்றது. |

(1) DBAC (2) BDCA (3) BDAC (4) ABDC

18. மகாத்மா காந்தி இலங்கைக்கு வருகை தந்த ஆண்டு
(1) 1920 (2) 1932 (3) 1944 (4) 1927

19. விடுதலைப் பத்திரங்கள் மூலம் பிரித்தானியர் தம் வசப்படுத்திய அரசுகள்,
(1) ஹைதராபாத் மைசூர் (2) ஜெய்ப்பூர், நாக்பூர்
(3) மைசூர், ஆக்ரா (4) கோவா, கள்ளிக்கோட்டை

20. பின்வரும் கூற்றுக்களினைக் கருதுக.
(A) 1857ல் சிப்பாய் கலகம் இடம்பெற்றது.
(B) பிரம்ம சமாஜம் பண்டிதர் மோன்ராய் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சமய இயக்கமாகும்.
(C) ஜாலியன் வாலாபாக் படுகொலை 1919ல் நிகழ்ந்தது.
(D) 1930ல் மகாத்மா காந்தியினால் உப்பு தொடர்பான அரசின் சட்டங்களுக்கு ஆதரவை காண்பித்த நிகழ்வாகும்.

மேற்தரப்பட்ட கூற்றுக்களில் சரியானவை,
(1) A, B (2) A, B, D (3) A, D (4) A, B, C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. 1941ம் ஆண்டளவில் இந்தியர்களின் கோரிக்கை - -களுக்கு செவிசாய்த்த பிரித்தானியப் பிரதமர்.
(1) வின்சன்ட சேர்ச்சில் (2) லொயிட் ஜோர்ஜ்
(3) வூற்றோவில்சன் (4) பிராங்ளின் ரூஸ்வேல்ட்

22. வங்காளம் எனும் பத்திரிகையை வெளியிட்டவர்?
(1) பாலகங்காதர திலகர் (2) சுரேந்திரநாத் பெனர்ஜி
(3) பிபின் சந்திரபோஸ் (4) லால் லஜ்பதிராய்

23. இந்திய தேசிய சங்கத்தின் மிதவாதத் தலைவர்களைக் கொண்ட தொகுதி.
(1) W.C. பானர்ஜி, தாதாபாய் நவ்ரோஜி, லால் லஜ்பதி ராய்
(2) பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபோஸ், W.C. பானர்ஜி
(3) தாதா பாய் நவ்ரோஜி, சுரேந்திரநாத் பெனர்ஜி, W.C. பெனர்ஜி
(4) லால் லஜ்பதிராய், சுரேந்திரநாத் பெனர்ஜி, சுபாஸ் சந்திரபோஸ்

24. நிரல் "A" பகுதியிலுள்ள விடயங்கள் நிரல் "B" பகுதியில் உள்ள விடயங்களுடன் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதி.

| நிரல் "A" | நிரல் "B" |
|---|---|
| (1) உலக அபிமானி | A. பாலகங்காதர திலகர் |
| (2) முதுபெருங் கிழவர் / இந்தியாவின் மேலாளர் | B. தாதாபாய் நவ்ரோஜி |
| (3) பாகிஸ்தானின் தந்தை | C. முகமது அலிஜின்னா |
| (4) நவ இந்தியாவின் சிற்பி | D. ஜவஹர்லால் நேரு |

(1) B, A, C, D (2) C, A, B, D
(3) A, B, C, D (4) B, A, C, D

25. கேசரி, மருதம் எனும் பத்திரிகையை வெளியிட்டவர்.
(1) W.C. பெனர்ஜி
(2) பால கங்காதர திலகா
(3) தாதாபாய் நவ்ரோஜி
(4) ராம்மோகன் ராய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 05
## கணிப்பீட்டுப் பயிற்சி
## இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களும், தேசிய சுதந்திர இயக்கமும்.

➢. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர்,
(1) D.P. பானபொக்க
(2) A.E. குணசிங்க
(3) சேர்.பொன். அருணாசலம்
(4) சேர்.பொன். இராமநாதன்

02. இலங்கை மக்களுக்கு சர்வஜனவாக்குரிமை வழங்கிய யாப்பு,
(1) கோல்புறுக் (2) மனிங்
(3) மனிங் - டிவன்சியா (4) டொனமூர்

03. இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி,
(1) D.S. சேனநாயக (2) W. தகநாயக்கா
(3) டட்லி சேனநாயக (4) சேர்.ஜோன். கொத்தலாவ

04. பாராளுமன்றத்தின் இரண்டாவது மன்றமான செனட் சபையை (மூதவை) அறிமுகம் செய்த யாப்பு?
(1) டொனமூர் யாப்பு
(2) சோல்பரி யாப்பு
(3) 1972 குடியரசு அரசியல் யாப்பு
(4) 1978 குடியரசு அரசியல் யாப்பு

05. டொனமூர் யாப்பு சீர்திருத்த காலகட்டத்தில் உலர் வலயத்தில் விவசாயக்குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தவர்.
(1) ஜேம்ஸ் ரெயிலர் (2) எட்வேட் பாண்ஸ்
(3) D.S. சேனநாயக்கா (4) பானபொக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. இலங்கையில் நியமிக்கப்பட்ட முதலாவது ஆளுநர் நாயகம் யார்?
(1) ஒலிவர் குணதிலக (2) ஹென்றி மேசன் மூர்
(3) சோல்பரிப் பிரபு (4) வில்லியம் கோபல்லாவ

07. 1972ம் ஆண்டு குடியரசு யாப்புக்கு அமைவாக சட்டமியற்றும் நிறுவனம் அழைக்கப்பட்ட விதம்,
(1) அரசுக் கழகம்
(2) சட்வாக்கக் கழகம்
(3) தேசிய அரசுப்பேரவை
(4) பாராளுமன்றம்

08. இலவசக் கல்வித் திட்டத்தை அறிமுகம் செய்தவர்?
(1) டட்லி சேனநாயகா (2) C.W.W. கன்னங்கரா
(3) C. பட்டுவன் துடாவ (4) D.P. ஜயதிலக

09. இலங்கையில் உருவான முதலாவது கட்சி
(1) ஐக்கிய தேசியக் கட்சி
(2) லங்கா சமசமாஜக்கட்சி
(3) இலங்கை கம்யூனிசக் கட்சி
(4) ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

10. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை அறிமுகம் செய்த அரசியல் யாப்பு,
(1) 1931 டொனமூர்
(2) 1972 முதலாவது குடியரசு அரசியல் யாப்பு
(3) 1947 சோல்பரி யாப்பு
(4) 1978 இரண்டாம் குடியரசு யாப்பு

11. 1978ம் ஆண்டு யாப்பின்படி இலங்கையின் அதிஉயர்ந்ததும் இறுதியானதுமான நீதிமன்றமாக விளங்குவது,
(1) உச்ச நீதிமன்றம்
(2) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(3) மேல் நீதிமன்றம்
(4) மஜஸ்ரேட் நீதிமன்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சட்டவாக்க கழகம் ஆரம்பமான ஆண்டு, யாப்பு என்பவற்றைத் தருக.
(1) 1833 - கோல்புறுக் கமரன்
(2) 1912 - குறூ - மக்கலம்
(3) 1920 - மனிங்
(4) 1931 - டொனமூர்

13. 1912ல் முதலாவது படித்த இலங்கையர் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்,
(1) சேர்.பொன். அருணாசலம்
(2) சேர்.பொன். இராமநாதன்
(3) C.W.W. கன்னங்கரா
(4) J.R. ஜெயவர்த்தன

14. வரையறுக்கப்பட்ட வாக்குரிமையை முதலில் அறிமுகம் செய்த யாப்பு யாது?
(1) 1912 - குறுமக்கலம்
(2) 1920 - மனிங் யாப்பு
(3) 1931 - டொனமூர் யாப்பு
(4) 1947 - சோல்பரி யாப்பு

15. பத்தில் ஏழு சுதந்திரத்தை வழங்கிய யாப்பு?
(1) கோல்புறுக் (2) டொனமூர்
(3) மனிங்யாப்பு (4) மனிங் - டிவன்சியர்

16. 1972 யாப்பின் கீழ் பெயரளவு ஜனாதிபதியாக விளங்கிய ஜனாதிபதி யார்?
(1) ஒலிவர் குணதிலக்க (2) சேர் ஜோன் கொத்தலாவல
(3) தகநாயகா (4) வில்லியம் கோபல்லாவ

17. சார்ள்ஸ் கே. கமறன் எத்துறையில் சிபாரிசினை வழங்கினார்?
(1) நிதி (2) நீதி
(3) நிர்வாகம் (4) பாதுகாப்பு

18. இலங்கையை ஐந்து மாகாணங்களாகப் பிரித்த அரசியல் சீர்திருத்தம் யாது?
(1) கோல்புறுக் (2) குறூ - மக்கலம்
(3) மனிங் (4) மனிங் - டின்சியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. வரையறுக்கப்பட்ட வாக்குரிமையை முதலில் அறிமுகம் செய்த யாப்பு,

(1) கோல்புறுக் (2) குறூ - மக்கலம்
(3) டொனமூர் (4) சோல்பரி

20. மாகாணத் தேர்தல் முறையினை அறிமுகஞ் செய்த யாப்பு?

(1) கோல்புறுக் (2) குறூ - மக்கலம்
(3) மனிங் (4) டொனமூர்

21. உத்தியோகப் பற்றுள்ளோரை விட உத்தியோகப் பற்றற்றோர் தொகை அதிகரிக்கப்பட்ட யாப்பு,

(1) மனிங் - டிவன்சியர் சீர்திருததம்
(2) டொனமூர் சீர்திருத்தம்
(3) மனிங் சீர்திருத்தம்
(4) சோல்பரி சீர்திருத்தம்

22. நிரல் "A" யில் உள்ளவற்றை நிரல் "B" யில் உள்ளவற்றுடன் தொடர்புபடுத்தும் போது பெறப்படும் சரியான விடையின் ஒழுங்கினைத் தெரிவு செய்க.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| (1) ஆங்கிலக் கல்வி பரவலாக்கப்பட்டமை | (A) மனிங் - டிவன்சியா (1924) |
| (2) சட்டவாக்கச சபைகளில் 50% கும் மேற்பட்டவர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். | (B) சோல்பரி (1947) |
| (3) 3 அரசு செயலாளர்கள நியமனம் | (C) கோல்புறுக் (1833) |
| (4) ஆளுநர் நாயகம் பதவி ஏற்படுத்தப்பட்டமை | (D) டொனமூர் (1931) |

(1) C, D, A, B (2) D, A, B, C
(3) C, A, D, B (4) C, A, B, D


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➤.

| சீர்திருத்தம் | உத்தியோகப் பற்றுள்ளவர் | | உத்தியோகப் பற்றற்றவர் | |
|---|---|---|---|---|
| கோல்புறுக் | A - | 14 | E - | 37 |
| குறா - மக்கலம் | B - | 12 | F - | 6 |
| மனிங் | C - | 11 | G - | 23 |
| மனிங் - டிவன்சியர் | D - | 09 | H - | 10 |

23. குறா - மக்கலம் யாப்புச் சீர்த்திருத்தம் தொடர்பான அங்கத்தவர்கள்,
(2) D, F (2) A, E (3) C, E (4) C, H

24. மனிங் - டிவன்சியர் தொடர்பான அங்கத்தவர்கள்,
(1) A,E (2) B, E (3) B, G (4) C, H

25. கோல்புறூக் சீர்திருத்தம் தொடாபான அங்கத்தவர்கள்.
(1) C, F (2) B, F (3) D, F (4) A, H


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 06
## கணிப்பீட்டுப் பயிற்சி
### சுதந்திரத்தின் பின் இலங்கை

➢. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. இலங்கையில் முதலாவதாகத் தேர்வு செய்யப்பட்ட பிரதமமந்திரி,
   (1) சேர். ஜோன் கொத்தலாவல
   (2) டட்லி சேனநாயகா
   (3) டி.எஸ். சேனநாயக்க
   (4) W. தகநாயக

02. பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்பன ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள் முறையே,
   (1) 1952, 1974 (2) 1951, 1981
   (3) 1948, 1976 (4) 1956, 1980

03. துரித மகாவலித்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாது?
   (1) 1972 (2) 1977 (3) 1980 (4) 1972

04. 1959 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது கைத்தொழில் பேட்டை நிறுவப்பட்ட இடம்,
   (1) அச்சுவேலி (2) இரத்மலானை
   (3) எக்கலை (4) ஜின்தோட்டை

05. முதலாவது குடியரசு யாப்பினை (1972) அறிமுகஞ் செய்த பிரதமர், யாப்பை வரைந்தவர், பெயரளவு ஜனாதிபதி என்பவர்களின் சரியான விடைத்தொகுதி முறையே,
   (1) J.R. ஜெயவர்த்தன, N.M.பெரேரா, ஒலிவர் குணதிலக
   (2) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, கொல்வின், ஆர்.டி.சில்வா, வில்லியம் கோபல்லாவ
   (3) J.R. ஜெயவர்த்தன, கொல்வின் ஆர்.டி.சில்வா, பேசன்மூர்
   (4) R. பிரேமதாசா, கொல்வின் ஆர்.டி. சில்வா, ஒலிவர் குணதிலக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் முதல் திட்டம்,
   (1) பொல்கொல்ல திட்டம்
   (2) ரந்தனிகல திட்டம்
   (3) விக்டோரியா நீர்த்திட்டம்
   (4) கொத்மலைத்திட்டம்.

07. பின்வருவனவற்றுள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஒருவருக்கு இருக்க வேண்டிய தகைமைகளுள் பொருத்தமல்லாதது.
   (1) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
   (2) 40 வயதைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   (3) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராக இருத்தல்.
   (4) கிறிமினல் குற்றங்களை செய்யாதவராக இருத்தல்.

08. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை நடைமுறைக்கு வந்த ஆண்டு,
   (1) 1947 (2) 1972 (3) 1978 (4) 1948

09. 1978ம் ஆண்டு பாராளுமன்ற அமையச்சேர்க்கையில் உள்ள மொத்த உறுப்பினர்கள்,
   (1) 151 (2) 168 (3) 225 (4) 175.

10. ஜேர்மனியின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டம்.
   (1) ரந்தெனிகல நீர்த்திட்டம்
   (2) கல்லோயா நீர்த்திட்டம்
   (3) கொத்மலை நீர்த்திட்டம்
   (4) விக்டோரியா நீர்த்திட்டம்

11. பிரித்தானிய பாராளுமன்றத்தினால் இலங்கை சுதந்திரச் சட்டம் அங்கீகரிக்கப்பட்ட ஆண்டு,
   (1) 1948 (2) 1945 (3) 1947 (4) 1949

12. 1953ல் இடதுசாரிக் கட்சிகளின் ஹர்த்தால் காரணமாக பதவி விலகிய பிரதமர்?
   (1) டி.எஸ். சேனநாயகா
   (2) W. தகநாயகா
   (3) டட்லி சேனாநாயகா
   (4) சேர்.ஜோன். கொத்தாலாவல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. இலங்கையில் இலவச பாடநூல், இலவச சீருடை என்பவை விநியோகிக்கப்பட்ட ஆண்டுகள் முறையே,

(1) 1980, 1993 (2) 1977, 1974
(3) 1982, 1996 (4) 1980, 1996

14. 30 வருட கால மகாவலி அபிவிருத்தி திட்டம், 6 வருட கால துரித மகாவலி அபிவிருத்தித் திட்டமாக அமைக்கப்பட்ட ஆண்டு,

(1) 1979 (2) 1978 (3) 1977 (4) 1980

15. 1978 குடியரசு யாப்பினை வரைந்தவர்?

(1) கொல்வின் ஆர்.டி. சில்வா
(2) J.R. ஜெயவர்த்தனா
(3) ஜி. எல். பீரிஸ்
(4) என்.எம் பெரேரா

16. 1956ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்த பிரதமர் யார்?

(1) டட்லி சேனநாயக
(2) சிறிமாவோ பண்டாரநாயக்கா
(3) J.R. ஜெயவர்த்தன
(4) S.W.RD. பண்டாரநாயகா

17. இரண்டாம் குடியரசு யாப்பின் பிரதான அம்சங்களாகக் கருதப்படுவது,

(1) அடிப்படை உரிமைகள்
(2) தேசிய அரசுப் பேரவை
(3) பிரதமர் தலைமையிலான அமைச்சரவை
(4) நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி

18. நிரல் "A" யில் பல்கலைககழகங்களும், நிரல் "B" யில் அவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்பட்டுள்ளன. இவற்றினைப் பொருத்தமாக இணைத்து பெறப்படும் விடை ஒழுங்கினைத் தெரிவு செய்க.

| நிரல் A | | நிரல் B | |
|---|---|---|---|
| 1. | கொழும்பு | (A) | 1972 |
| 2. | யாழ்ப்பாணம் | (B) | 1952 |
| 3. | பேராதனை | (C) | 1942 |
| 4. | மொறட்டுவ | (D) | 1970 |

(1) D, C, A, B (2) C, D, B, A
(3) D, C,B, A (4) C, D, A, B

19. விவசாயக் குடியேற்றத்திட்டங்கள் பின்வரும் எப் பிரதேசங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டது?
(1) கரையோறப் பிரதேசம்
(2) ஈரவலயப் பிரதேசம்
(3) மலையகப் பிரதேசம்
(4) உலர்வலயப் பிரதேசம்

20. இலங்கையில் நெல் உற்பத்தியினை விருத்தி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகளுக்குப் பொருத்தமல்லாதது?
(1) 1948ல் உத்தரவாத விலை அறிமுகப்படுத்தப் - பட்டமை
(2) நெல் ஆராய்ச்சி நிலையங்கள் நிறுவப்பட்டமை.
(3) விவசாய சேவை மத்திய நிலையங்களை ஆரம்பித்தமை.
(4) உணவு மானியம் வழங்கப்பட்டமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிப்பீட்டுப் பயிற்சிகளுக்கான விடைகள்.

## அலகு 01
## இலங்கையின் கரையோரப்பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படுதல்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 02. | 3 | 03. | 1 | 04. | 2 |
| 05. | 1 | 06. | 4 | 07. | 2 | 08. | 1 |
| 09. | 1 | 10. | 4 | 11. | 4 | 12. | 1 |
| 13. | 3 | 14. | 1 | 15. | 1 | 16. | 4 |
| 17. | 1 | 18. | 2 | 19. | 3 | 20. | 2 |
| 21. | 2 | 22. | 4 | 23. | 2 | 24. | 2 |
| 25. | 3 | 26. | 1 | 27. | 2 | 28. | 3 |
| 29. | 1 | 30. | 1 | | ✗ | | ✗ |

## அலகு 02
## இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 02. | 2 | 03. | 3 | 04. | 4 |
| 05. | 2 | 06. | 3 | 07. | 3 | 08. | 1 |
| 09. | 3 | 10. | 4 | 11. | 3 | 12. | 2 |
| 13. | 1 | 14. | 2 | 15. | 4 | 16. | 4 |
| 17. | 1 | 18. | 2 | 19. | 3 | 20. | 1 |
| 21. | 1 | 22. | 2 | 23. | 1 | 24. | 1 |
| 25. | 3 | 26. | 1 | 27. | 1 | 28. | 3 |
| 29. | 3 | 30. | 2 | | ✗ | | ✗ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 03
## இலங்கையின் சமய, தேசிய மறுமலர்ச்சி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 02. | 2 | 03. | 3 | 04. | 4 |
| 05. | 4 | 06. | 3 | 07. | 2 | 08. | 4 |
| 09. | 3 | 10. | 2 | 11. | 1 | 12. | 4 |
| 13. | 2 | 14. | 3 | 15. | 3 | 16. | 1 |
| 17. | 4 | 18. | 2 | 19. | 1 | 20. | 3 |

---

## அலகு 04
## இந்திய சுதந்திரப் போராட்டம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 02. | 3 | 03. | 1 | 04. | 1 |
| 05. | 4 | 06. | 1 | 07. | 4 | 08. | 3 |
| 09. | 3 | 10. | 3 | 11. | 2 | 12. | 4 |
| 13. | 2 | 14. | 1 | 15. | 3 | 16. | 3 |
| 17. | 3 | 18. | 4 | 19. | 2 | 20. | 4 |
| 21. | 1 | 22. | 2 | 23. | 3 | 24. | 3 |
| 25. | 2 | | * | | * | | * |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகு 05

இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களும், தேசிய சுதந்திர இயக்கமும்.

| | | | |
|---|---|---|---|
| 01. 3 | 02. 4 | 03. 1 | 04. 2 |
| 05. 3 | 06. 2 | 07. 3 | 08. 2 |
| 09. 2 | 10. 4 | 11. 1 | 12. 1 |
| 13. 2 | 14. 1 | 15. 2 | 16. 4 |
| 17. 2 | 18. 1 | 19. 2 | 20. 3 |
| 21. 3 | 22. 3 | 23. 4 | 24. 2 |
| 25. 3 | | | |

அலகு 06

சுதந்திரத்தின் பின் இலங்கை

| | | | |
|---|---|---|---|
| 01. 3 | 02. 1 | 03. 2 | 04. 3 |
| 05. 2 | 06. 1 | 07. 2 | 08. 3 |
| 09. 3 | 10. 1 | 11. 3 | 12. 3 |
| 13. 1 | 14. 3 | 15. 2 | 16. 4 |
| 17. 4 | 18. 2 | 19. 4 | 20. 4 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று விளக்கப்படங்களும் குறிப்புக்களும்.

01. கீழைத்தேச ஒல்லாந்த வர்த்தக சங்க இலச்சினை



- இப்படத்தில் காட்டப்பட்டுள்ள VOC என்ற எழுத்து **Vereenigde Oostindische Compagnie** என்ற டச்சுச் சொல்லின் சுருக்கமாகும்.
- இதனைக் காலிக்கோட்டையின் மையத்தில் காணலாம்.
- இச்சங்கமானது 1602ல் நிறுவப்பட்டது.
- ஒரேஞ்வில்லியம் மன்னனாக இருந்த காலத்தில் நிறுவப்பட்டது.

1ம் விமலதர்ம சூரியன், ஸ்பில் பேர்ஜன் சந்திப்பு



- ஜோரிஸ்வான் ஸ்பில் பேர்ஜன் 1602 இலங்கை வந்து 1ம் விமலதர்ம சூரியனைச் சந்தித்த காட்சியாகும்.
- ஸ்பில்பேர்ஜன் மட்டக்களப்பில் தரையிறங்கினான.
- போர்த்துக்கேயரை இந்நாட்டை விட்டுத் துரத்துவதே சந்திப்பின் நோக்கமாக இருந்தது.
- இச்சந்திப்பின் விளைவாக போர்த்துக்கேயாடமிருந்து கைப்பற்றிய ஒரு சில கப்பல்களை மன்னனை மகிழ்விப்பதற்காக விட்டுச் சென்றதாக வரலாறு கூறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. இரண்டாம் இராஜ சிங்கன்



➢. இவ்வரசனின் இளமைப் பெயர் மகாஅஸ்தான குமாரன் என்பதாகும்.
➢. இவன் சக்கரவர்த்தி, திரிசிங்களாதீஸ்வர போன்ற பட்டப்பெயர்களைச் சூடிக்கொண்டான.
➢. வெஸ்ரவோல்ட் தளபதியுடன் (ஒல்லாந்து) 1638ல் ஒப்பந்தம் மேற்கொண்டார்.
➢. போர்த்துக்கேயரை விரட்ட அவர்களைவிடப் பலம் வாய்ந்த ஒல்லாந்தரை வரவழைத்ததன் காரணமாக "இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியதுபோல" என்ற உவமை மொழிக்கு உட்பட்டான்.


கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்



➢. இவன் நாயக்க வம்ச மன்னன் ஆவான்.
➢. ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னின் மைத்துனன் ஆவான்.
➢. 1762ல் முதன் முதலில் ஜோன் பைபஸ் (பிரித்தானிய தூதுவன்) மன்னனைச் சந்தித்தான்.
➢. 1766ல் வில்லெம் பெல் ஆள்பதியுடன் ஒப்பந்தம் மேற்கொண்டிருந்தான.
➢. சீயம் தேசத்திலிருந்து உபாலிதேரரின் தலைமையில் பிக்குகளை வரவழைத்து உபசம்பதாவை நடாத்தினான்.
➢. வெலிவிட்ட ஸ்ரீ சரணங்க தேரருக்கு சங்கராஜ பதவிவழங்கி கௌரவித்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹமில்டன் கால்வாய்



➢. ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட கால்வாய் ஆகும்.

➢. பொருட்களைக் கொண்டு செல்வதற்கு இக்கால்வாயைப் பயன்படுத்தினார்கள்.

➢. போக்குவரத்துக்கு ஒல்லாந்தரால் வேறுசில கால்வாய்களும் பயன்பட்டு வந்தன.

➢. அக்காலத்தில் போக்குவரத்து வீதிகளை சிறப்பான முறையில் காணப்படாத விடத்து இவை பேருதவியாக இருந்தன.

ஜோன் பைபஸ்



➢. 1762ம் ஆண்டு திருகோண-மலையில் தரையிறங்கி கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனை சந்தித்த பிரித்தானியத் தூதுவன் ஆவான்.

ஸ்டெட் ஹோல்டர் (5ம் ஒறேஞ் வில்லியம்)



➢. பிரான்ஸ் ஒல்லாந்து மீது படை எடுத்ததால் பிரித்தானியாவுக்குத் தப்பி ஓடிய ஒல்லாந்து இளவரசன்.

➢. இவன் பிரித்தானியரின் கியூ மாளிகையில் எழுதிய கடிதமே கியூ கடிதம் ஆகும்.

➢. இலங்கை பிரான்சியர் வசமாவதைத் தடுத்துக் கொள்வதற்காக தற்காலிகமாக அதனை ஆங்கிலேயர் வசம் ஒப்படைக்கவும் என்பதே அக்கடிதத்தின் வாசகமாகும்.

➢. அக்கடிதம் எழுதப்பட்ட வேளையில் இலங்கையில் பணியாற்றிய ஒல்லாந்த ஆளுநர் வான் எங்கல்பெக ஆவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரட்ரிக் நோத்



➢. இலங்கையின் பிரித்தானிய ஆளுநராக 1798ல் பதவியேற்று 1815ல் விலகினான்.

➢. 1803ல் கண்டியைக் கைப்பற்றும் முயற்சியில் தோல்வி கண்டான்.

➢. இவன் கொழும்பிலிருந்து தளபதி மெக்டொவல் தலைமையிலும், திருகோணமலையிலிருந்து தளபதி பாபற் தலைமையிலும் இரு வழியில் படைகளை படையெடுப்பினை கண்டி மீது தொடுத்தான்.

➢. ஆரம்பத்தில் கண்டியைக் கைப்பற்றி முத்துச்சாமியை மன்னனாக்கினான். இறுதியில் மக்களின் மன்னன் மீதான விசுவாசம், கண்டி மன்னின் யுத்த தந்திரம், காலநிலை போன்ற காரணிகள் கண்டி மன்னன் மீண்டும் கண்டியைக் கைப்பற்றக் காரணமாகின.

ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்



➢. கண்டியைக் கைப்பற்றும் வேளையில் கண்டியை ஆட்சி செய்த மன்னன் ஆவான்.

➢. ஆட்சிக்காலப் பிற்பகுதியில், மக்களதும் பிரதானிகளதும் வெறுப்பைச் சம்பாதித்தான் (பௌத்த விரோத நடவடிக்கைகள்)

➢. 1815ல் றொபர்ட் பிறவுண்றிக் கண்டியைக் கைப்பற்றுவதற்கு ஏற்ற சூழல் உருவாவதற்கு காரணமானவை மன்னனது தூர நோக்கற்ற செயற்பாடுகள் ஆகும்.

➢. ஆரம்ப காலத்தில் மென்மையான குணம் நிரம்பியவனாகவும், மிருக வதை, மது அருந்துதல் போன்ற பாதகச் செயல்களைத் தடை செய்துமிருந்தான்.

➢. கண்டி வாவியை அலங்கரித்தும், தலதா மாளிகையில் கண்கவரும் எண்கோண மண்டபத்தையும் அமைத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொபர்ட் பிறவுண்றிக்



➢. 1815ல் கண்டியைக் கைப்பற்றிய பிரித்தானிய ஆளுநர்.

➢. ஜோன்டொயிலியின் மதிநுட்பம், இராஜதந்திரம் என்பவற்றை தக்கவிதத்தில் பயன்படுத்திக் கண்டியைக் கைப்பற்றினான்.

➢. 1815 இல் கண்டி ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டான்.

➢. 1815ல் கண்டி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் மூலமாக மலையக முடியாட்சி முடிவுக்கு வந்ததுடன் பிரித்தானிய முடி ஆட்சி உதயமானது.

மொனரவில கெப்பட்டிப்பொல திசாவ



➢. 1818 சுதந்திரப் போருக்கு (ஊவா - வெல்லஸ போராட்டம்) தலைமை தாங்கியவர்.

➢. இவன் பிரித்தானிய ஆட்சியின் கீழ் பதவிவகித்த ஊவாப்பிரதேசத்திற்கு பொறுப்பான திசாவ ஆவார்.

➢. கலவரத்தை அடக்கச் சென்ற இவர் கிளர்ச்சிக்காரர்களுடன் இணைந்து கொண்டு முன்னிலைத் தலைவர ஆனார்.


➢. பிரித்தானியரை "உங்களுடைய ஆயுதத்தால் உங்களைத் தாக்க மாட்டேன்" என்று என்று கூறினார்.

➢. பிரித்தானிய அரசினால் கைது செய்யப்பட்ட இவர் இராணுவ நீதிமன்றத் தீர்ப்பின்படி தலை தூண்டிக்கப்பட்டு இறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்கல கொட பண்டா



- 1848ம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தின் தலைவர்களுள் ஒருவராவார்.
- தம்புள்ள விகாரையில் இவரை போராட்டத்தலைவர்கள் "ஸ்ரீ விக்கிரம சர்வ சித்தி இராஜசிங்க" என்ற பெயரில் அரசனாக்கிக் கொண்டனர்.
- போராட்டத்தின் இறுதியில் இவர் கசையடி பட்டு மலாக்காவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கள தேரர்.



- இவரது பிறந்த இடம் காலி ஆகும்.
- இவரது குரு வலானே சித்தார்த்த தேரர் ஆவார்.
- இவர் 1873ல் மாளிகாகந்த வித்தி -யோதய பிரிவெனாவை ஆரம்பித்தார்.
- இவர் சிதத்சங்கரா சன்னஸ், காவிய சேகர சன்னஸ் ஆகிய நூல்களை எழுதினார்.

மீக்கெட்டுவத்த குணானந்த தேரர்.



- ஐம்பெரும் விவாதங்களில் பங்கெடுத்த தலைவர் ஆவார்.
- சிறந்த பேச்சாளரும், சமய ஞானமும் உடையவராகவும் விளங்கினார்.
- இவர் பிரம ஞான சங்கம் எனும் பௌத்த சங்கத்தை ஸ்தாபித்தார்.
- "மாபெரும் விவாதி" எனப் புகழப்பட்டார்.
- 1860ல் வண. கோகர்லி பாதிரியாரை விவாதத்தில் தோற்கடித்தார்.
- பாணந்துறை புகையிரத நிலையத்துக்கு அண்மையில் இவரது உருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட்



- அமெரிக்காவின் கடற்படைத் தளபதியாகப் பணிபுரிந்த இவ் 1880 மே மாதம் 17ம் திகதி இலங்கை வந்தார்.
- பாணந்துறை விவாதமே இவரை இலங்கை வரத்தூண்டியது.
- வெலிகந்த விஜயானந்தா பிரிவெனையில் பௌத்த மதத்தைத் தழுவினார்.
- பௌத்த பிரம்ம ஞான சங்கம் இவரால் நிறுவப்பட்டதாகும்.
- வெசாக் போயா தினத்தை அரசாங்க விடுமுறை தினமாக்கப் பாடுபட்டவராவார்.
- த புடிஸ்ற் எனும் பத்திரிகையை ஆரம்பித்தார்.
- பௌத்த ஆங்கில மொழிப் பாடசாலைகளையும் அமைத்தார்.
- சரவி சந்தரெலை பத்திரிகை மூலம் பௌத்த மக்களுக்கு அறிவூட்டினார்.

அநகாரிக தர்மபால



- கொழும்பில் பிறந்த இரது இளமைப் பெயர் தொன் டேவிட் ஹேவா - -விதாரண.
- இவரது குரு ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்களதேரர் ஆவார்.
- இறுதித் துறவுப்பெயர் ஸ்ரீ தேவமித்த என்பதாகும்.
- இந்தியாவிலுள்ள சாரணாத்தில் உயிர் நீத்தார்.
- மது விலக்கு தலைவர்களுள் ஒருவராகச் செயற்பட்ட இவர் பௌத்த பாடசாலைகளை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டார்.
- சிங்கள பௌத்தய என்ற பத்திரிகை மூலம் மக்களின் போராட்ட உணர்வைத் தூண்டினார்.
- தேசிய கலாசாரத்தைப் பாதுகாக்கப் பாடுபட்டதுடன், புத்தகாயா உட்பட இந்தியாவின் பௌத்த வழிபாட்டிடங்-களைப் பாதுகாக்கப் பாடுபட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுக நாவலர்.



➢. இவரது இளமைப் பெயர் ஆறுமுகம் ஆகும்.

➢. இலங்கையில் இந்துமத மறு மலர்ச்சிக்காக அரும்பாடுபட்ட பெரியார் ஆவார்.

➢. இந்துப்பாடசாலை அமைப்பதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

➢. பாலபாடம் என்ற பெயரில் பாடநூல்களை எழுதியதுடன் கந்தபுராணம், பெரிய புராணம் போன்ற நூல்களைப் பதிப்பித்தார்.
➢. சொந்தமாக அச்சகமொன்றை நிறுவி சமய கலாச்சார மறுமலர்ச்சிக்கு பத்திரிகை மூலம் பணியாற்றினார்.
➢. பேர்ஸிகால் அடிகளாருடன் இணைந்து பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தார்.
➢. வட பகுதியில் தமிழும், சைவமும் அழிந்து விடாமல் பாதுகாத்தவர்களுள் இவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

சேர்.பொன்னம்பலம் அருணாச்சலம்



➢. இவர் இலங்கைத் தேசிய காங்கிரஸின முதலாவது தலைவராவார்.
➢. 1917ல் "எமது அரசியல் தேவை" என்ற தலைப்பில் உரையாற்றி தேசிய தலைவர்களை ஒன்றிணைத்தார்.
➢. இலங்கை இந்திய வரலாறு, கல்வியில் கழைத்தேசத்தின் முன்மாதிரிகள், தத்துவ சமயக்கல்வி போன்ற நூல்களை எழுதினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர் சித்திலெப்பை



- மருதானையில் சாஹிரா கல்லூரி மற்றும் கண்டியில் சித்திலெப்பை மகா வித்தியாலயம் என்பன இவரால் அமைக்கப்பட்ட பாடசாலைகளாகும.
- இவரால் உருவாக்கப்பட்ட பத்திரிகைகளாக முஸ்லிம்நேசன், ஞான தீபம் என்பவை விளங்குகின்றன.
- இவர் முஸ்லிம்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக முஸ்லிம் கல்விச் சபையை உருவாக்கினார்.
- இவரால் மத்ரஸா எனும் இஸ்லாமிய பாடசாலை புனரமைப்புச் செய்யப்பட்டது.

D.P.ஜாயா



- இவர் 1921ல் கொழும்பு சாஹிராக் கல்லூரியில் அதிபராகக் கடமை -யாற்றினார்.
- முஸ்லிம் மக்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கு சிலோன் முஸ்லிம் ரிவ்யு என்ற சஞ்சிகைக்கு கட்டுரைகளை எழுதினார்.
- 1946 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியில் உப தலைவராக பதவி வகித்தார்.
- இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் தொழிலாளர் மற்றும் சமூக சேவை அமைச்சராக தெரிவு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A.E.குணசிங்க**



- தொழிலாளர் உரிமைக்காக போராடிய பெருந்தலைவர் ஆவார.
- 1923ல் பிரித்தானியருக்கெதிரான 20,000 தொழிலாளர்களைக் கொண்ட பொது வேலை நிறுத்தம் ஒன்றினை இவர் தலைமையில் மேற்கொண்டார்.
- 1922 ஆம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் சங்கத்தை அமைத்துக் கொண்டார்.
- இவர் ஆரம்பித்த கட்சியின் பெயர் தொழிலாளர் கட்சியாகும்.
- சர்வசன வாக்குரிமைக்காக குரல் கொடுத்தவரும் இவரேயாவார்.
- தொழிலாளர் உரிமைக்காக போராட்டங்கள் நடத்துதல், சம்பள உயர்வு, தொழில் நிலையை மேம்படுத்தல் போன்ற நோக்கங்களைக் கொண்டிருந்தார்.
- இவர் தலைமையில் தலை வரிக்கு எதிராக கல்லுடைக்கும் போராட்டம் நிகழ்த்தப்பட்டது.

**D.S.சேனநாயக்கா**



- இவர் டொனமூர் அரசுக் கழகத்தில் விவசாய காணி நிர்வாகக் குழுவின் தலைவராகக் கடமை ஆற்றினார்.
- 1947 ஆம் ஆண்டு தேர்தலின் பின் இவர் இலங்கையின் முதலாவது பிரதமராக பதவி வகித்தார்.
- இவர் 1935ல் "விவசாயமும் தேசத்தின் நீர்வளமும்" என்ற நூலை வெளியிட்டார்.
- இலங்கையின் முதலாவது பல்நோக்குத் நீர்ப்பாசனத் திட்டமான கல்லோயாத் திட்டத்தினை உருவாக்கினார்
- இவர் "தேசபிதா" என்ற அடைமொழி கொண்டு அழைக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.J.V.செல்வநாயகம்



- இவரால் ஆரம்பிக்கப்பட்ட கட்சி தமிழ் அரசுக் கட்சியாகும்.
- இக்கட்சி சமஷ்டிக்கட்சி எனவும் அழைக்கப்பட்டது.
- 1949ம் ஆண்டு தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்தார்.
- இவர் சிறந்த வக்கீலாகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும பதவி வகித்தார்.
- 1947ம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பாக காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிப் பெற்றார்.
- 1957ல் பண்டா செல்வா ஒப்பந்தத்தையும், 1965ல் டட்லி செல்வா ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தி தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமைகளை பெற்றுத்தர முனைந்தவர் ஆவார்.

டட்லி சேனநாயக்க



- D.S.சேனநாயக்காவின் புதல்வரான இவர் இலங்கையின் இரண்டாவது பிரதம மந்திரியாவார்.
- 26.03.1952ல் சோல்பரி பிரபுவினால் பிரதம மந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- 1953ல் அரிசி விலையேற்றத்தாலும், மானியங்கள் நிறுத்தப்பட்டதாலும் இவர் இராஜினாமா செய்தார்.
- மண்டும் 1957ல் அரசியலில் நுழைந்து 1960ல் பொதுதேர்தலில் வெற்றிப் பெற்று மீண்டும் பிரதமரானார் தொடர்ந்து 4 மாதங்களில் பின்னர் மீண்டும் இராஜினாமா செய்தார.
- பின்னர் 1965ல் சிங்கள, தமிழ் சார்ந்த கட்சிகளின் ஆதரவுடன் 1970 வரை பிரதமராக இருந்தார்.
- இவரது முயற்சியினால் இலங்கை தனது பொருளாதாரத்தில முன்னேற்றம் கண்டது என்று கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J.R.ஜெயவர்த்தன



- 1946 ஆம் ஆண்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார்.
- டட்லி சேனநாயக்காவின் பின்னர் 1973ம் ஆண்டு முதல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரானார்.
- 1977ம் ஆண்டு அதிகப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றார்.
- 1978ம் ஆண்டு முதல் புதிய யாப்புடன் சகல நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதல் ஜனாதிபதியான பெருமை இவரையே சாரும்.

ரணசிங்க பிரேமதாச



- இவர் 1950ல் கொழும்பு மாநகர சபை மேஜராகப் பதவி ஏற்றிருந்தார்.
- 1956ல் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார்.
- 1970ல் கொழும்பு மத்தியில் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.
- 1978ல் J.R.ஜெயவர்த்தன ஜனாதிபதியான போது இவர் பிரதமர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டார்.
- இவர் இரண்டாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகவும் பதவிவகித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி. **N.M.** பெரேரா



- ➢. பிரித்தானிய பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற இவரும், வெளிநாட்டில் கல்வி கற்ற தீவிர வாத இளஞர்களும் இணைந்து லங்கா சமசமாஜக் கட்சியை ஆரம்பித்தனர்.
- ➢. இவரது கட்சியானது இடதுசாரிச் சிந்தனைகளை உள்ளடக்கியதாகும்.
- ➢. 1947 தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்ற பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- ➢. 1954இல் கொழும்பு மேயராகவும் கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது.
- ➢. 1964 - 1965, 1970 - 1975 வரையான காலங்களில் நிதி அமைச்சராகவும் கடமையற்றினார்.

கலாநிதி **கொல்வின் ஆர்.டி.சில்வா**



- ➢. இவரும் இடதுசாரிக் கட்சியின் தலைவர்களில் ஒருவராவார்.
- ➢. 1943ல் பொல்சவிக் லெனின் கட்சியை ஆரம்பித்தார்.
- ➢. 1947ம் ஆண்டுத் தேர்தலில் இக் கட்சி 05 ஆசனங்களைப் பெற்றது.
- ➢. 1972இல் முதலாவது குடியரசு யாப்பினை வரைவதில் பெரும் பங்காற்றினார்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

S.W.R.D.பண்டாரநாயக்க



➢. 1951ல் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை நிறுவினார்.

➢. கீழ்த்தர மத்திய வகுப்பினர், சுதேச வைத்தியர்கள், ஆசிரியர்கள் பிரச்சினைகளுக்கு இக்கட்சி மதிப்பளித்தது.

➢. 1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று பிரதமராகினார்.

➢. சிங்கள மொழியை அரசாங்க மொழியாக மாற்றினார்.

➢. 1959.09.26 இல் கொலை செய்யப்படும் வரை பிரதமராக பதவி வகித்தார்.

சிறிமாவோ பண்டாரநாயக்க



➢. இவர் உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமைக்குரியவர்.

➢. இவரது ஆட்சிக் காலத்திலேயே 1972ல் புதிய யாப்பான முதலாம் குடியரசு அரசியல் யாப்பு உருவாக்கப பட்டது.

➢. இவரது ஆட்சிக்காலத்தில் பாராளுமன்றமானது தேசிய அரசுப் பேரவை என்று அழைக்கப்பட்டது.

➢. இவரது ஆட்சிக்காலம் முதற்கொண்டே இலங்கையானது "ஸ்ரீ லங்கா" எனப் பெயர் பெற்றது.

➢. இவர் 1960 - 1965, 1970 - 1977 ஆகிய ஆண்டு காலங்களில் இலங்கையின் பிரதமராக நீண்ட காலமாக பிரதமராக இருந்தவர் என்ற பெயர் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**D.B.** விஜயதுங்க



- ➢. இவர் இலங்கையின் மூன்றாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் செயற்பட்டார்.
- ➢. முன்னாள் ஜனாதிபதி R.பிரேமதாஸ அவர்களின் அகாலமரணத்தைத் தொடர்ந்து இடைக்கால ஜனாதிபதியாக செயற்பட்டார்.
- ➢. இவர் 1993 -1994 ஆண்டு வரை ஏறத்தாழ ஓராண்டே பதவி வகித்தார்.

சந்திரிகா பண்டாரநயக்கா குமாரதுங்க



- ➢. இவர் இலங்கையின் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாவார்.
- ➢. இலங்கையின் முதலாவது பெண் ஜனாதிபதி ஆவார்.
- ➢. இவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவராகவும் இருந்தார்.
- ➢. இவரது தந்தை S.W.R.D. பண்டாரநாயக்க, தாய் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க.
- ➢. இவரது கணவர் பிரபல நடிகரும், அரசியல்வாதியுமான விஜயகுமார ரணதுங்க ஆவார்.
- ➢. 1994ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- ➢. 2005 - 11 - 19 வரை இருதடவைகள் ஜனாதிபதியாக பதவி ஏற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹிந்த இராஜபக்ஷ



➢. இவர் இலங்கையின் 5வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

➢. இவர் 2005-11-19ல் ஜனாதிபதி-யாகப் பதவி ஏற்றார். மேலும் 2015-01-09 வரையும் இரு தடவைகள் பதவி ஏற்றார்.

➢. இவர் இலங்கை பாராளுமன்றத்தில் 13வது பிரதமராகவும் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

➢. இவர் பாதுகாப்பு அமைச்சர், நிதி அமைச்சர், சட்ட அமைச்சர், கப்பல் துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும் பணியாற்றினார்.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

மைத்திரிபால சிறிசேன



➢. இவர் இலங்கையின் ஆறாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக விளங்குகின்றார்.

➢. இவர் 2015-01-09 இல் ஜனாதிபதி-யாகத் தெரிவு செய்யப்பட்டார்.

➢. 100 நாள் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தினார்.

➢. இவர் பாதுகாப்பு அமைச்சர், மகாவலி அபிவிருத்தி சுற்றாடல் அமைச்சர், புத்தசாசன அமைச்சர் போன்ற பதவிகளை வகித்திருந்தார்.

Class No: 900
Acc No 536



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Class No | 900 |
| Acc No | 530 |

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

530

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூபாலசிங்கம் புத்தகசாலை

202, செட்டியார் தெரு, கொழும்பு - 11

தொ.பேசி.எண் : 011 2422321, 0112435713

மின்னஞ்சல் : Poobalasingham202@gmail.com

pbd

101003038

VARALARU G-9 (SIRUKURIPU)

Rs 200.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org